
616

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி அம்மாள்

616 | 15
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1938
MADRAS



1888

ஜூன் 1938

## ஜீவியச் சுழல்

அல்லது சிரிய ஒழுக்கம் (ஆரம்பம்)

அ

# அனாதைப் பெண்

ஒப்பற்ற தனிப்பெருமையுடன் விளங்குகிறுள்

| டைரக்ஷன் : | ஒலிப்பதிவு : | படப்பிடிப்பு : |
|---|---|---|
| ஆர். பிரகாஷ், | விஸ்வநாத், | கமால் கோஷ். |

ஸ்டுடியோ :—மோஷன் பிக்சர்ஸ்

கும்பகோணம் ராஜா டாக்கிஸிலும்,
திருச்சி வெல்லிங்டன் டாக்கிஸிலும் 30-5-38௳ முதல்
**4**-வது வாரம்

காரைக்குடி ராமவிலாஸ் தியேட்டரில் 28-5-38௳ முதல்
**3** - வது வாரம்

சேலம் ஓரியண்டல் டாக்கிஸில் 28-5-38௳ முதல்
**2** - வது வாரம்

எம். கே. ராதா, டி. ஏ. சுந்தராம்பாள், பி. யு. சின்னப்பா,
எல். நாராயணராவ், கொத்தமங்கலம் சுப்ரமணியம்
முதலியோர் நடித்தது.

**எதிர்பாருங்கள் !**

மதுரை—சிடி சினிமா, கோவை—ராதா தியேட்டர்ஸ்,
காஞ்சிபுரம்—கண்ணன் டாக்கீஸ், சிதம்பரம்—நடராஜா டாக்கீஸ்,
திருநெல்வேலி—ராயல் டாகீஸ்.

---

அனாதைப் பெண் பாடல்களை ஓடியன் ரிக்கார்டுகளில் கேளுங்கள்.

---

**ஜூபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்,**

**திருப்பூர்.**

உள்ளத்தைக்
கொள்ளைகொள்ளும்
உயர்தரச் சித்திரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1938
MADRAS

# "பக்த மீரா"

ஓய். வி. ராவின்
டைரக்ஷன்

இத்துடன்
"ஷோக் சுந்திரம்
கிராமத்திற்குப் போகிறான்"
என்னும் ஹாஸ்யப் படத்தையும்
கண்டு களியுங்கள்.

சென்னை
நியூடோன் ஸ்டுடியோஸில்
தயாரிப்பு.

**சிந்தாமணி பிக்சர்ஸ் லிமிடெட்,**
**116, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை.**

"பக்த மீரா"வின் கீதங்களை
ஓடியன் ரிகார்டுகளில் எதிர்பாருங்கள்.

“மோகினி” பிரசுரம் ! ஜுபிட்டர் படம் !

# “அனாதைப் பெண்”

டாக்கீ நாவலின் அழகிய புதிய பதிப்பு தயார் !

சில மாறுதல்களுடனும், புதிய அம்சங்களுடனும்

சிறந்து விளங்கும் புத்தகம்

**விலை ரூ. 1—4—0 தான்.**

## சுமார் 40 படங்கள்

அனாதைப் பெண் டாக்கீயிலிருந்து

சந்தர்ப்பத்திற்கேற்றவாறு

பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், புத்தகத்தின் விலையை

மாத்திரம் அதிகரிக்கவில்லையென்பதை

நேயர்கள் கவனிப்பார்களாக.

**உடனே முந்துங்கள் !**

**இந்த புஸ்தகம் உங்கள் கைக்கு பூஷணம்!**

**மனதுக்கு ஆனந்தம்! இனியதோர் விருந்து!**

இம்மாதிரி பதிப்பு இதற்குமுன் தமிழில் வந்ததில்லை !

OFFICE OF TH… 28 JUL… MADRAS

# "அனாதைப்பெண்"

---

## திருச்சி பிலிம் லீக் கிரிடிக் போர்டாரின் விமர்சனம்

திருப்பூர் ஜூபிட்டர் பிக்சர்ஸ் லிமிடெட் கம்பெனியாரால் மோஷன் பிக்சர்ஸ் ப்ரொட்யூஸர்ஸ் கம்பெனியில் தயாரிக்கப்பட்ட இப்படத்தில் படப்பதிவு, மிகவும் நேர்த்தியாகவும் தெளிவாகவும் இருக்கின்றது. இதுவரையில் வந்த தமிழ்ப் படங்களைவிட சிறந்ததாக இருக்கிறதென்று சொல்லலாம்.

ஒலிப்பதிவு ஒரே ஒரு இடத்தைத் தவிர, அதாவது கோவிலிலிருந்து குருக்களும், தண்டபாணியும் சிங்காரியும் பிரிந்துபோகும் இடத்தைத் தவிர, மற்ற இடங்களில் சரியாய் இருக்கிறது.

மேக்கப் எல்லா இடங்களிலும் நன்றாகச் செய்திருந்தபோதிலும், முக்கிய நடிகையான டி. ஏ. சுந்தராம்பாளுக்கு இன்னும் நன்றாக மேக்கப் செய்திருக்கலாம்.

இயற்கை காட்சிகள் மிகவும் அருமையாக எடுத்திருக்கிறார்கள். சமுத்திரத்தில் கப்பல் செல்லும் சீன் இங்கிலாந்துக் கரை சீன் முதலியவைகளை ஒவ்வொருவரும் பார்க்க வேண்டியது.

பாபநாசம்சிவன், பாட்டுக்களை நன்றாய் அமைத்திருக்கிறார். ஆனால், சிறிது கர்நாடக சங்கீதத்தையும் கதாசிரியை எழுதியிருக்கும் கதை புஸ்தகத்திலிருக்கும் சில அருமையான பாட்டுக்களையும் சேர்த்திருந்தால் நலமாக இருக்கும்.

சம்பாஷணைகள் நன்றாக அமைக்கப்பட்டிருக்கின்றன. நியாயாதிபதி தீர்ப்புச்சொல்லும்இடத்தில் டைரெக்டர் நியாயாதிபதியை நிதானமாகவும், தெளிவாகவும், நிறுத்தியும் தீர்ப்பைக் கூறும்படி சொல்லியிருக்க வேண்டும்.

நடிப்பில் துரைராஜாவாக நடிக்கும் எம். கே. ராதா இதற்கு முன் நடித்திருக்கும் படங்களைவிட இதில் நன்றாக நடித்திருக்கிறார். நாகரீக வாலிப பாத்திரத்திற்கு இவர் மிகவும் பொருத்தமானவர்.

இந்திராவாக நடிக்கும் டி. ஏ. சுந்தராம்பாள் படத்தில் நடிப்பது முதல் தடவையாக இருந்தபோதிலும் கூடியவரையில் உருக்கத்துடன் நடித்திருக்கிறார். நாகரீக வாலிப வேஷத்திற்கு எப்படி ராதா பொருத்தமாக இருக்கிறாரோ, அதைப்போலவே அனாதைப் பெண் வேஷத்திற்கு இவர் மிகவும் பொருத்தமானவர்.

டி. எஸ். கிருஷ்ணவேணியின் நடிப்பு, திறம்பட இருக்கிறது.

எல்லா நடிகர்களேவிட தாசில்தாராக நடிக்கும் எல். நாராயண வின் நடிப்பு இயற்கையாகவும், சிரிப்பை ஊட்டும் சம்பாஷணைகள் லிக்காமல் பலதடவை பார்க்க வேணுமென்ற ஆவலேயும் கொடுக்கிறது.

செட்டியாராக நடிக்கும் எஸ். எம். சுப்பிரமணியம், எல். நாராயணராவைப் போலவே சிறந்த முறையில் தனது பாகத்தை செய்து காட்டியிருக்கிறார்.

படத்தில் ஆபாசஹாஸ்யங்கள் இல்லாமல் கதைப்போக்கிலேயே ஹாஸ்யத் துணுக்குக்களேச் சேர்த்திருப்பது போற்றத்தக்கது. ஆனுல், சிங்காரி தண்டபாணி கள்ளக்காதல் காக்ஷியில் சில குறைத்திருக்கலாம்.

படத்தின் டைரக்ஷன் நன்ருக இருக்கிறது.

கதைப்போக்கு:—கதையைப் பார்ப்போர்க்கு ஞானத்தை ஊட்டும் சிறந்த கதை என்பதற்குச் சந்தேகம் இல்லே. முக்கியமாக கதாசிரியை தமிழ் நாட்டு ஸ்டூடியோ விஷயங்களே எடுத்துக் காட்டி சீர்திருத்துவதற்காக புகுத்தியிருக்கும் பாகங்களேத் துணிந்து படக்காக்ஷியில் சித்திரித்திருப்பது கம்பெனியாரும் கதாசிரியரும் தமிழ்ப் பட முன்னேற்றத்திற்குச் செய்த ஓர் தொண்டாகும். டைரக்டர் கதையின் பின் பாகத்தில் கொஞ்சம் மாற்றி கதாநாயகனுக்குப் போட்டோகிராபி மூலம் துப்பறியும் ஓர் பாகத்தைக் கொடுத்திருப்பதும் வாசு திரையில் தன்னேக்கொல்ல முயற்சித்த ஸீனேப் பார்த்ததும் முன் ஞாபகம் பெறுவதாக காட்டியிருப்பதும் டைரக்டரின் சாதுர்யத்தைக் காட்டுகிறது. கதையானது போகப் போக பார்ப்போருக்குப் பின்னல் என்ன வரும் வரும் என்னும் எதிர்நோக்க ஆவலேயும், ஆர்வத்தையும் உணர்ச்சியையும் கொடுக்கிறது.

உதாரணமாக, திருச்சியில் வெலிங்டன் டாக்கீஸில் படம் பார்க்க வந்திருந்த சில பெண்கள், தண்டபாணி இந்திராவைப் பாக்கியத்தின் ரூமில் துரத்திக் கொண்டு வரும் சீனில் பாக்கியம் படுத்திருந்த இடத்தைச் சுற்றிச் சுற்றித் தப்பிக்க வழியில்லாமல் இந்திரா தவிக்கும் பொழுது, "அடபாவமே! வாசலில் உனக்கு ஓடத் தெரியவில்லேயே!" என்று தன்னே அறியாமல் கூறினர். வாசுவைப் பாறையில் மோதும் சீனில், ஒரு பெண் அழுது விட்டாள். இவ்வளவு உருக்க மிகுந்த இப்படமானது பல வாரங்கள் எல்லா இடங்களிலும் வெற்றியாக ஓடுமென்பது, திருச்சி பிலிம் லீக் கிரிடிக் போர்டாரின் அபிப்பிராயம் ஆகும்.

ஸ்ரீராமஜெயம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீராகவ கவி.


| மலர் 15 | பகுதான்ய ௵ வைகாசி ௴ ஜூன் 1938 | இதழ் 6 |
|---|---|---|


## திருமால் துதி

தேனொழுகு பூந்துளவச் செங்கண்மலர் பைங்கமலக் 1
கானொழுகு பூங்கழலைக் காண்.

பண்டொருகால் பாரதத்துப் பார்த்தன் பொற்றேரூர்ந்த 2
புண்டரிகை கேள்வனையே போற்று.

மன்னுபுகழாய்க் குலத்து மாசடையா நப்பின்னை 3
துன்னுபுயந் தோய்ந்தானைச் சொல்.

சொல்லுகவாய் கேட்கசெவி சோரர்பிரான் மெய்ச்சரிதம் 4
கொல்லுகநீ வெவ்வினையின் கோள்.

பொன்மானைப் பொன்றுவித்துப் போரரக்கர் கட்டழித்த 5
என்மாலை நன்னெஞ்சே யேத்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.

அ



# அசைக்கமுடியாத நம்பிக்கை

[ மகாத்மா காந்தி ]

கடவுள் நம்பிக்கை யென்றால் என்ன? காந்திஜீக்குக் கடவுள் நம்பிக்கையிருக்குமாயின் அவர் எந்த விதத்தில் கடவுள் சக்தியை உணர்ந்தார்?

இஸ்லாமிய கலாசாலை ஆசிரியர் ஒருவர் காந்திஜீயிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார். இந்தக் கேள்வியானது காந்தியை ஆழ்ந்த யோசனைக்குள்ளாக்கியது என்று ஸ்ரீ. தேசாய் 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதியுள்ளார்.

"வாதத்தினால் ரூபிக்கக்கூடிய விஷயமல்ல இது. வாதத்தினால் ரூபித்தாக வேண்டுமென்று சொன்னால், நான் தோற்றவனாவேன்," என்று காந்திஜீ பதில் அளித்தார்.

"ஆனால் நான் தங்களுக்கு ஒரு விஷயத்தை நிச்சயமாகச் சொல்லுவேன். அது என்னவெனில், இந்த இடத்திலே, நீங்களும், நானும் உட்கார்ந்திருப்பது எவ்வளவு வாஸ்தவமோ அதுபோலவே பகவான் இருக்கிறார் என்பதும் வாஸ்தவம்.

## பக்தியே உயிர்

"இன்னும் சொல்லுகிறேன். சோறு, தண்ணீர் இல்லாமல் என்னைப் போட்டு வைத்தாலும் நான் இறக்கமாட்டேன். ஆனால், பகவானை பக்தி பண்ணாமல் ஜீவித்திருக்கவே முடியாது. இது மாத்திரமல்ல. என் கண்ணைப் பிடுங்கி எறியலாம். அதனால் நான் இறந்துவிடமாட்டேன். என் மூக்கைச் சீவி விடலாம். அதனாலும் இறக்கமாட்டேன். ஆனால் நான் கடவுளிடம் கொண்டுள்ள பக்தியைச் சிதைத்தால், சந்தேகமில்லாமல் ஜீவனற்றுப்போவேன்.

இவ்விதமாக நான் சொல்லும் வார்த்தைகளை மூடநம்பிக்கை யென்று தாங்கள் சொல்லவும் சொல்லலாம். ஆனால், சிறிய பையனாக இருக்கும்போது என் தாதியொருத்தி எனக்கு ராமநாம

18323

மந்திரத்தை உபதேசித்துக் கொடுத்தாள். சிறு வயதில் எனக்குப் பயம் தோன்றும்போதும், கஷ்டம் ஏற்படும்போதும் அந்த மந்திரத்தையே என் துணையாகக் கட்டித் தழுவினேன். அதுபோலவே இப்பொழுதும் தாங்கள் மூட நம்பிக்கை யென்பதாகச் சொல்வதையே நம்பி யிருக்கிறேன் என்பதை நான் ஒப்புக்கொள்ளத் தயங்கவில்லை."

## தெய்வ தரிசனம்

"அந்த மூட நம்பிக்கை இருந்தேயாகவேண்டுமென்பது உங்கள் அபிப்பிராயமா?" என்று ஆசிரியர் கேட்டார்.

"ஆமாம். நான் ஜீவித்திருப்பதற்கு அது மிகவும் அவசியம்" என்றார் காந்திஜீ.

"அப்படியானால் சரிதான். ஆனால் எப்பொழுதாவது தங்களுக்கு தெய்வப் பிரத்தியக்ஷமான தோற்றம் ஏற்பட்டதுண்டா?" என்று கேட்டார் அந்த ஆசிரியர்.

"தாங்கள் தெய்விக மென்றும் தோற்றமென்றும் சொல்வதானது எதைக் குறிப்பிட்டு என்பது எனக்கு விளங்கவில்லை," என்று ஆரம்பித்து காந்திஜீ கூறினார். ஆயினும் என்னுடைய வாழ்க்கையில் கண்ட அனுபவத்தைச் சொல்லுகிறேன்.

"ஒரு சமயம் நான் சிறையில் 21 தினங்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தேனல்லவா? அப்பொழுது உண்ணாவிரத மிருப்பதைக் குறித்து மனதில் சர்ச்சை செய்து தீர்மானிக்கவில்லை. உண்ணாவிரதம் இருந்த தினத்துக்கு முன்தினம் இரவு படுக்கச்செல்லும்போது, மறுதினம் உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன் என்னும் எண்ணமே என் மனதில் இல்லை.

## அந்தராத்மா ஆக்ஞை

"நள்ளிரவில் நான் தூங்கிக்கொண்டிருக்கும்போது ஒரு குரலோசையைக் கேட்டு, கண் விழித்து எழுந்தேன். அந்தக் குரல் 'உண்ணாவிரதம் இரு' என்று ஆணையிட்டது.

"எத்தனை தினங்களுக்கு என்று நான் கேட்டேன். '21 தினங்கள்' என்னும் பதில் கிடைத்தது.

"இது சம்பந்தமாக நான் தங்களுக்கு ஓர் விஷயம் சொல்லுகிறேன், கேளுங்கள். எனக்கு அந்த ஆணை கிடைப்பதற்கு முன் என் மனம் உண்ணாவிரத மிருப்பதற்குத் தயாராகவுமில்லை. இசைவாகவுமில்லை. ஆயினும் ஸ்பஷ்டமான ஆக்ஞை கிடைத்தது.

JL
2211/A122JM

மற்ெறாரு சம்பவத்தையும் சொல்லி நான் முடித்துவிடுகிறேன். என்னுடைய வாழ்க்கையில் பிரமிக்கத்தக்கதாக நான் செய்த காரியங்கள் ஒன்றாவது, என்னுடைய புத்தியைக்கொண்டு யோசித்துச் செய்தவையல்ல. அவை ஆத்மாவின் ஆணை அல்லது கடவுளின் ஆக்ஞையைப் பின்பற்றிச் செய்தவை.

உதாரணமாக தண்டி உப்பு சத்தியாக்கிரஹத்தை எடுத்துக் கொள்வோம். உப்பு சத்தியாக்கிரஹம் செய்வதினால் எவ்விதமான விளைவும் பலனும் ஏற்படுமென்பதைக் குறித்து எனக்கு ஒன்றுமே தெரியாது.

உப்பு சத்தியாக்கிரஹம் ஆரம்பிப்பதற்கு முன், நான் என்ன செய்யப்போகிறேன் என்பது தெரியாமல் ஸ்ரீ மோதிலால் நேருவும், தலைவர்களும் பதைத்தார்கள். செய்யப்போவது இன்னதென்று எனக்கே தெரியாமலிருக்கும்போது அவர்களிடம் நான் என்ன சொல்வது?

ஆனால், திடீரென்று மின்னல் ஜோதியைப்போல் உப்பு சத்தியாக்கிரஹ எண்ணம் உதித்தது. அதன்பின் அந்த எண்ணம் அனுஷ்டானத்தில் எப்படி வேலை செய்ததென்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? இந்தத் தேசத்தை ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிவரையில் கிடுகிடுவென்று ஆட்டி வைத்தது.

## கனவில் கண்டது

"கடைசியாக மற்றொரு சம்பவத்தையும் சொல்லுகின்றேன். 1919-ம் வருஷம் எப்ரல் மாதம் 6-ம் தேதியன்று ஜனங்களனைவரும் உண்ணாவிரதம் அனுஷ்டித்து, பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று சொன்ன யோசனையும், திடீரென்று ஏற்பட்ட எண்ணமேயாகும். ஆனால், ஒரு வித்தியாசம், 1919-ம் வருஷம் தெய்வீகக் குரல் ஆக்ஞையிட்டதுபோல், 1934-ம் வருஷம் ஆக்ஞையிடவில்லை. தூங்கும்போது கனவு கண்டேன். உடனே நான் கண்ட கனவுதான் சரியான காரியமென்று தீர்மானித்தேன். பொழுது விடிந்ததும் இந்தக் கனவு கண்ட விஷயத்தை ஸி. ஆர். இடம் (ராஜகோபாலாசாரியாரிடம்) கூறினேன். பிறகு ஜனங்களுக்கு விளம்பரம் செய்தேன். உங்களுக்குத் தெரியாதா, அந்த விளம்பரத்தைக் கேட்டு தேசம் எவ்வளவு அதிசயமாக ஒற்றுமைப்பட்டு விம்மி எழுந்ததென்பது!"

# வெளி நாட்டுச் செய்திகள்

## செக்கில் ஜெர்மன் விமானங்கள்

### யுத்த தளவாட தொழிற்சாலைமீது வட்டமிட்டன.

செக் விமானங்கள் எல்லைமீறி ஜெர்மன் பிரதேசத்தின் மீது பறப்பதாகக்கூறி, ஜெர்மெனி ஆட்சேபணைகளை அனுப்பியதல்லவா? அதேபோல் பல ஜெர்மன் விமானங்கள் சென்ற சில தினங்களில் செக் எல்லையைத் தாண்டி வந்து இங்கு பறந்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

மேமீ 25ந்தேதி அன்று ஜெர்மன் ராணுவ விமானங்கள் எல்லையிலிருந்து 50 மைல் தூரத்திலுள்ள பில்ஸென் என்ற செக் நகரத்தின் மீது வட்ட மிட்டன. இந்தப் பிராந்தியத்தில் ஸ்கோடா யுத்த தளவாட தொழிற்சாலைகள் இருக்கின்றன.

## லான்பெங் அருகில் யுத்தம்

ஸூசோவில் ஜப்பானியரால் நாற்புறமும் சூழப்பட்டிருந்த சீனத் துருப்புகளில் 3 லக்ஷம் பேர்கள் தப்பித்துக்கொண்டு வெளி வந்து விட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

லான்பெங்கைப் பிடித்த ஜப்பானியரை, சீனத் துருப்புகள் மூர்க்கன்யமாகத் தாக்கிப்போரிட்டு வருகின்றன. லான்பெங்குக்கு மேற்கே சில மைல்கள்வரை ஜப்பானியர் துரத்தியடிக்கப் பட்டார்கள்.

## பாலஸ்தீனில் யுத்தமா?

பாலஸ்தீனில் பெரும்பாகத்தை இன்று பிரிட்டிஷ் இராணுவம் தன் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வர ஆரம்பித்தது. கலகக்காரருக்குச் சப்ளைகள் கிடைக்காமலிருப்பதற்காக, முக்கியமான கிராமங்களிளெல்லாங் கூட துருப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ரோந்துப் படைகளும் உஷாராயிருந்து வருகின்றன.

## துருக்கி-பிரான்ஸ் தகராறு

அலெக்ஸாண்ட்ரேடா ஆண்டியாக நிர்வாக ஒழுங்கினங்களை ஆட்சேபித்து பிரான்ஸுக்கு எதிராக ஒருஆட்சேபனையைத் துருக்கி சங்கத்துக்கு அனுப்பியிருக்கிறது. துருக்கிய மக்களைப் பிரெஞ்சு அதிகாரிகள் நிர்ப்பந்திப்பதாகவும் அங்கு பிரெஞ்சு சர்க்கார் இருக்கக் கூடாதென்றும் துருக்கி கேட்கிறது.

## லண்டன் ரயில் விபத்து

முதல் நாளிரவு ரிப்பேர் செய்தபோது கைகாட்டி மரத்துடன் ஒரு கம்பியைக் கட்டியதில் பிசகு ஏற்பட்டு விட்டதால்தான் 17டீ

லண்டனில் ரயில் விபத்து ஏற்பட்டதென்பதைக் கம்பெனியார் ஒப்புக்கொண்டு விட்டார்கள். நஷ்ட ஈடு தருவதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

## டென்மார்க்கும் அங்கீகரித்தது

இத்தாலியின் அபிசீனிய வெற்றியை டென்மார்க்கும் ஐஸ்லாந்தும் அங்கீகரித்து விட்டதாக இங்குள்ள டென்மார்க் மந்திரி கவுண்ட் சியானோவிடம் தெரிவித்தார். நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஹாலந்து ஆகிய நான்கு நாடுகளும் இப்பொழுது அங்கீகாரமளித்து விட்டன.

## ஷூஸ்னிக் எங்கே?

ஷூஸ்னிக்கை லீப்ஸிக்குக் கொண்டு போயிருக்கிறார்கள் என்ற செய்தி ஊர்ஜிதமாகவில்லை. அவர் ஆஸ்ட்ரியாவிலேயே இன்னுமிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஷூஸ்னிக்மீது வழக்கெடுப்பதாயிருந்தால், அவர் ஆஸ்ட்ரிய மகாஜனக் கோர்ட்டின் முன்புதான் ஆஜராவாரென்றும், லீப்ஸிக் சுப்ரீம் கோர்ட்டின் முன் வரமாட்டார் என்றும் தெரிகிறது.

## புதிய பிரேஞ்சு சட்டங்கள்

தேசத்தில் சுபிட்சம் ஏற்படுவதற்கு அனுகூலமாக பிரான்ஸில் 2 வருஷங்களில் 610 லக்ஷம் பவுனும் காலனிகளில் 10 வருஷங்களில் 550 லக்ஷம் பவுனும் செலவழிப்பதென்று சர்க்கார் பிறப்பித்த சட்டங்களில் தலைவர் லிபிரன் கையெழுத்துச் செய்து விட்டார்.

வர்த்தகம், தொழில் இரண்டும் செழித்தோங்குவதற்காக சுலபமான வட்டி விகிதத்துடன் கடன் கிடைப்பதற்கும் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்றுமதி வர்த்தகத்துக்குச் சலுகைகள் அளிக்கப்படும். 40 மணி வேலை வாரம் மாற்றியமைக்கப்படுகிறது.

காலனிகளின் தற்காப்பு சம்பந்தமான உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. காலனிகளில் உற்பத்தியாகும் விளை பொருட்களின் விற்பனைக்கும் கடன் வசதிகள் செய்து தரப்படுகின்றன.

## பிரிட்டன் - அயர் ஒப்பந்தம்

பிரிட்டன் அயர் ஒப்பந்தத்தில் தற்காப்பு சம்பந்தமாயுள்ள பகுதிகளை அமுலுக்குக்கொண்டு வருவது பற்றி விவரமான சம்பாஷணைகள் நாளைய தினம் ஆரம்பமாகும். அயர் சர்க்கார் விரிவான தற்காப்புத் திட்டத்தைத் தயாரித்து வருகிறார்கள் என்று தெரிகிறது.

## சிலைக்கும் சிகரெட் பயித்தியமா ?

*லியான்ஸ் என்னும் நகரிலுள்ள ஞாபகச் சின்ன கட்டிட மொன்றில், 19வயதும் 17வயதுமுள்ள இருசிறுமிகள், ராத்திரியில் வானத்தை நோக்கிக்கொண்டிருக்கையில், ஒரு நிர்வாண மனிதனின் சிலை உயிர்பெற்று வந்து வெகு மரியாதையாக, சிகரெட்டுக்கு நெருப்புக் கேட்டதாம்.*

*அச்சிறுமிகள் அலறிக்கொண்டு ஓடினர். அதனால் போலீசார் அங்கு வந்தனர். உயிர்பெற்ற சிலை ஒரு பாலத்திலிருந்து நதியில் மூழ்கி நீந்தி மறைந்ததாம்.*

---

## நூதன குறள்

கல்லாதான் றன்னை மதித்திருத்தல் கற்றவன்முன்
நில்லாமை நேரும் வரை. 1

கற்றவன் சொல்லும் கருத்துரைக்குக் கல்லாதான்
உற்றபதி லேதுரைக்கும் ஓர். 2

நிலைபெற்ற நூலறிந்தார் நெஞ்சத்துக் கொள்ளார்
அலைபெற்ற நெஞ்சா னறிவு. 3

சிறிதாகக் கற்ற துணையா னமையா
நெடிதாகக் கற்க மேன்மேல். 4

ஊற்றுச் சுரப்பதுபோ லோண்கல்வி கற்றளவு
ஆற்றிற் சுரக்கும் அறிவு. 5

கூற்றமுஞ் செல்லாது கொல்லாமை பூண்டான்மேல்
ஏற்ற மிதன்மேல் எது ? 6

வறுமையின் இன்னாத தியாதெனின் வேறில்
வறுமையே இன்னாத தாம். 7

தவவேட மென்செய்யும் தான்செய்த குற்றம்
அவமாக நெஞ்சிலமுந் தின். 8

அன்பிலா நெஞ்சருஞ் செல்வ ராயினும்
இன்பிலார் வாழ்வின லேன் ? 9

பொய்யாமை யென்னு மறமொன்றே யெய்யாமை
எல்லா வறமுந் தரும். 10

—திரு. ராகவாசாரியர்.

## நமது விளம்பர விகிதம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பக்கத்துக்கு ஒரு முறை | | ரூ. | 12 | 0 0 |
| அரை பக்கத்துக்கு | ,, | ,, | 6 | 8 0 |
| கால் பக்கத்துக்கு | ,, | ,, | 4 | 0 0 |
| உள்ளட்டைக்கு ஒரு முறை | | ,, | 15 | 0 0 |

நீண்ட கால விளம்பரங்களுக்குத் தனிச் சலுகை காட்டப்படும்.

மானேஜர்.

---

# உள் நாட்டுச் செய்திகள்

## விமான நிலையத்தில் எலி ராஜ்யம்!

மோஹல்பீம் என்ற இடத்தில் உள்ள விமான நிலையத்தை எலிகள் ஆக்ரமித்துக் கொண்டன.

விமானங்கள் இறங்குவதற்காக விசேஷமாக அமைக்கப்பட்ட மைதானத்தில் மண், விமானங்களின் பளு தாங்கமாட்டாமல் 'பொதுக்கு பொதுக்கென்று' இறங்கவே அதிகாரிகள் காரணத்தை ஆராய்ந்தார்கள்.

ஆயிரக்கணக்கான எலிகள் பூமிக்கடியில் வளை தோண்டி வாசம் செய்து கொண்டிருந்தன.

தரையில் விஷத்தைத் தெளித்தனர். விஷவாயு பிரயோகித்தனர். தீ வைத்தனர். பொறி வைத்துப் பிடிக்கின்றனர். ஒன்றும் சாயவில்லை.

இந்த எலிப்போரில் அதிகாரிகள் தோற்றுப் பின்வாங்கவே விமான நிலையத்தில் எலி ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது!

## உப்பைத் தின்றவர் துரோகம்

இந்தியாவில் உத்தியோகம் செய்துவிட்டு, இங்கிலாந்தில் வசித்து வரும் பென்ஷன் பெற்ற ஆங்கிலேயர் ஒருவரிடம் இந்திய மாணவர் ஒருவர் பேசிக் கொண்டிருக்கையில், பின்வரும் வாதம் நடந்தது.

"நேற்று நடந்த கூட்டத்திற்கு எத்தனை 'நேடிவ்கள்' (சுதேசிகள் என்று இழிவாக உபயோகிக்கும் சொல்) வந்திருந்தார்கள்" என்று ஆங்கிலேயர் கேட்டார்.

இதற்கு இந்திய மாணவர் சுருக்கென்று ரசமாகப் பதில் சொன்னார்.

"அந்தக் கூட்டத்திற்கு இந்தியர்கள்தான் அதிகம் வந்திருந்தார்கள், நேடிவ்கள் வெகு சொல்பம்."

—ஸர். டி. விஜயராகவாசாரியார்.

## பாஷாபிமானமா? தேசாபிமானமா?

ஸ்ரீ. சுபாஷ் சந்திரபோஸ் மேமீ 26-ந்தேதியன்று கல்கத்தாவுக்குப் புறப்படுமுன்னர், ஒரு நிருபரிடம் பின்வருமாறு கூறினர்:-

"சில்லரை சில்லரையாக சீர்திருத்தங்கள் பெறுவதற்காக இங்கிலாந்துக்குத் தூதுகோஷ்டி யனுப்ப வேண்டுமென்பதை நான் ஆக்ஷேபிக்கிறேன். பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டுமென்று காங்கிரஸ் அடிக்கடி தீர்மானங்கள் நிறைவேற்றி,யிருக்கிறது. மத்ய சர்க்காரில் நமக்கு அதிகாரம் கிடைக்கும் வரையில் நாம் இதை எப்படி நிறைவேற்றிவைக்க முடியுமென்று எனக்குத் தெரியவில்லை. பாஷாவாரி மாகாணங்களுக்காக நாம் இப்போது செய்யும் வேலைகளெல்லாம், எதிர்கால சர்க்கார் செய்ய வேண்டியவைகளுக்குத் தயார் செய்யும் கிளர்ச்சி வேலையாய்த்தானிருக்க முடியும். தனி ஆந்திரா மாகாணம் ஏற்படுத்துவதற்குப் பிரிட்டிஷ் சர்க்காரிடம் மனுப்போட்டுக் கொள்வதற்காக, காங்கிரஸ் மகா சபை, தனது மெம்பர்களை இங்கிலாந்துக்கு அனுப்புவதென்பது அபாயகரமான முறையாகும். இங்கிலாந்துக்குத் தூது அனுப்புவது முறையற்றதென்று நான் கருதுகிறேன். அனாவசியமென்று கூட நினைக்கிறேன். கிளர்ச்சி யிருந்தாலும், இல்லாவிட்டாலும், போதிய அதிகாரங்கள் கிடைத்த பிறகு, ஆந்திரர்களே தனி மாகாணம் வேண்டாமென்று சொன்னாலொழிய காங்கிரஸ் தனது தீர்மானங்களை நிறைவேற்றியே தீரும்."

## காங்கிரஸுக்குத் தோல்வி ஏன்?

### காரியதரிசி அறிக்கை.

"தமிழ் ஜில்லாக்களிலுள்ள 42 முனிசிபாலிடிகளில் 40 முனிசிபாலிடிகளுக்கு இவ்வருடம் தேர்தல்கள் நடந்தன. 2-ல் சர்க்கார் முனிசிபல் தேர்தலைத் தள்ளி வைத்துள்ளனர். இவைகளில் 38 முனிசிபாலிடிகளில் காங்கிரஸ் வாதிகள் போட்டியிட்டனர். 2-ல் அதாவது வாணியம்பாடி, சிவகாசி ஆகியவைகளில் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியார் ஆதரிக்காததால் போட்டியிடவில்லை. 38-ல் 27 இடங்களில் காங்கிரஸிற்குப்பூரணமெஜாரிடி கிடைத்திருக்கின்றது. 32 இடங்களில் சேர்மன் வைஸ் சேர்மன் தேர்தல்களில் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் நிறுத்தப்பட்டதில் 28 பேர் சேர்மனைத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மூவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஒரு தேர்தல் இன்னும் நடக்கவேண்டியிருக்கிறது. ஷை 3 தோல்விகளுக்குக் காரணம் கொடைக்கானலில் காங்கிரஸ் கக்ஷித் தலைவரே காங்கிரஸ் அபேக்ஷியல் அபேக்ஷகரை எதிர்த்து நின்று வெற்றி பெற்றார். காங்கிரஸ் கக்ஷியில் கட்டுப்பாடு இல்லாததினால் கடலூர், தர்மபுரி கவுன்

சில்களில் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் தோல்வி யுற்றனர். 21 முனிசிபாலிடிகளில் 21 அபேக்ஷகர்கள் உபதலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 4 தேர்தல்கள் இன்னும் நடைபெறவில்லை. தஞ்சையில் காங்கிரஸ் கக்ஷியில் சிலர் கட்டுப்பாட்டை மீறியதினால் காங்கிரஸ் அபேக்ஷகர் தோல்வியடைந்தார். தூத்துக்குடியில் காங்கிரஸிற்குப் பூரண மெஜாரிடி யில்லாததினால் தோல்வி ஏற்பட்டது.

## டிராம்வே தகராறு முடிவு

டிராம்வே மின்சார கார்ப்பொரேஷனும் தொழிலாளரும் மத்யஸ்தத்திற்கு விட்ட பிரச்னை வருமாறு:—

"டிஸ்மிஸ் செய்யப்பட்ட 5 தொழிலாளரை அவர்கள் தங்கள் கடமைகளை அதிருப்திகரமாகச் செய்தனரென்பதற்காக மீண்டும் டிராம்வே கார்ப்பொரேஷன் வேலைக்கு அமர்த்த வில்லையா? அல்லது அவர்கள் தொழிலாளர் யூனியனிலும் 1937ஹு மார்ச்சீ வேலை நிறுத்தத்திலும் சம்பந்தப்பட்டதற்காக வேண்டுமென்றே அகாரணமாக நீக்கப்பட்டனரா?"

நீதிபதி ஸ்ரீ. பாண்டுரங்கராவ் தமது தீர்ப்பின் முடிவில் கூறியதாவது:— "தகராறு பிரச்னையில் குறிப்பிடப்பட்ட 5 பேர்களும் அவர்கள் தங்கள் கடமைகளை அதிருப்திகரமாகச் செய்தனரென்பதற்காக மீண்டும் வேலையில் அமர்த்தப்பட வில்லை யென்பது உண்மையல்ல வென்றும், ஆனால் அந்நபர்கள் தொழிலாளர் யூனியனிலும் 1937 ஹு மார்ச்சீ வேலை நிறுத்தத்திலும் சம்பந்தப் பட்டதற்காக வேண்டுமென்றே அநியாயமாக வேலை மறுக்கப்பட்டனரென்றும் நான் தீர்மானிக்கிறேன். அதன்படியே நான் எனது தீர்ப்பைக் கூறுகிறேன்."

இத்தீர்ப்புத் தொழிலாளரையும், டிராம்வே மின்சார சப்ளை கார்ப்பொரேஷனையும், கட்டுப்படுத்தும். தீர்ப்பை ஆட்சேபிக்காமல் ஏற்றுக்கொள்ள இருதரப்பாரும் முதலில் சம்மதம் அளித்தனர்.

## ஆந்திர முனிசிபல் தேர்தல்கள்

ஆந்திர பிரதேசத்தில் மொத்தம் 29 முனிசிபாலிடிகள்; அவைகளில் 25 முனிசிபாலிடிகளுக்குத் தேர்தல்கள் நடந்தன. காங்கிரஸ் கக்ஷி 23 முனிசிபாலிடிகளின் தேர்தல்களில் போட்டியிட்டு, 20 முனிசிபல் சபைகளில் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது. பெஜவாடா இல்லாமல், இப்பொழுது 16 முனிசிபாலிடிகளில் காங்கிரஸ் கக்ஷி பதவியிலிருக்கிறது. பெஜவாடா முனிசிபல் சபையின் 32 ஸ்தானங்களில் காங்கிரஸ் கக்ஷி 25 ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது.

## தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி

மே 25-ந்தேதியன்று நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் கார்யக கமிட்டிக் கூட்டத்தில், பஞ்சாயத்துப் போர்டு தேர்தல்களில் காங்கிரஸ் கலந்து கொள்ளக்கூடாதென்றும், அபேட்சகர்களை நிறுத்தி வைக்கக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## போலீஸுக்குச் சன்மானம்

### சர்க்கார் உத்தரவு

போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அவர்களது திறமையான வேலையை அங்கீகரித்துச் சன்மானம் கொடுக்கும் முறையைப்பற்றி சர்க்கார் பின்வரும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்:—

1. கான்ஸ்டேபிள்கள், ஹெட்கான்ஸ்டேபிள்கள் இவர்களைத் தவிர, இதர போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் பணம் சன்மானமாகக் கொடுப்பது நின்றுவிடும்.

2. ஹெட்கான்ஸ்டேபிள்களுக்குக் கூட பணத்தைவிட பிரமோஷன் கொடுப்பது சாத்தியமான வரையில் அநுசரிக்கப்படும்.

## துவேஷிகளுக்கு இடங்கூடாது

### ஜவஹரின் சாட்டை

மத வெறியோடு நடத்தப்படும் பத்திரிகைகளை அடக்குவதற்கு மந்திரிகள் இஷ்டம்போல் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம் என்று பம்பாயில் கூடிய பிரதம மந்திரிகள் மகாநாட்டில் தீர்மானம் நிறைவேறிற்று. இதைப்போற்றி அட்வான்ஸ் பத்திரிகை எழுதுகிறது:—

பண்டித கோவிந்த வல்லப பந்த், தம் மாகாணத்தில் நடைபெற்ற கலவரங்களுக்கு ஆஸ்பதம் சில பத்திரிகைகள் செய்த விஷமப் பிரசாரம்தான் என்பதை மனம் விட்டுக் கூறிவிட்டார். பண்டித ஜவஹரின் தீவிரமான பேச்சு மிகவும் சிலாகிக்கத்தக்கது. 'பிரஜா உரிமைகளுக்காக, காங்கிரஸ் மந்திரி சபை உழைக்க வேண்டுமென்று கூறுவது சரியே. அதற்காக, கலகத்தையும், துவேஷத்தையும் கிளப்பிவிடுபவர்களை அடக்குவது கூடாதென்பது முடியாத காரியம். மந்திரிகளுக்கு இந்த விஷயத்தில் பூர்ணப் பொறுப்பும் உண்டு. பிரஜா உரிமை சிறிது பாதிக்கப்பட்டாலும் கூட அதனால் கெடுதியில்லை,' என்று பண்டிதர் கூறுகிறார். சுதந்திரத்துக்கும் தான்தோன்றித்தனத்துக்கும் வித்தியாசமுண்டு என்றும், பின்னதை மட்டம் தட்டவேண்டியது அவசியமென்றும் மாஜி ராஷ்டிரபதி வற்புறுத்துகிறார்.

சிறுவர் பகுதி :

## பண்டித திரு. ராகவாசாரியர் இலக்கிய பரிசு

[“ஜகன்மோகினி” அன்பர்காள்! இம்மாதம் முதல் ஒவ்வொருமாதமும் சிறுவர் பகுதியில் ஒரு சிறு கதை வெளியிடப்படும். நமது எண்ணிறந்த வாசகர்களுக்குப் புதியதொரு சந்தர்ப்பத்தை அளிக்க ஒருவர் முன்வந்துள்ளார்; பண்டித திரு. ராகவாசாரியர் ஞாபகார்த்தமாக (அவர் காலஞ்சென்ற ஜூன் மாதம் முதல்) அவரது மனைவியார் இப்பரிசை அளிக்க முன்வந்ததைத் தமிழ் உலகம் போற்றுமென நம்புகிறோம். நம் “ஜகன்மோகினி”யில் இரண்டு பக்கத்திற்கு மேற்படாமல், சிறுவர்களுக்கு ஏற்ற நடையில் கதைகள் ஒவ்வொரு மாதமும் 15-ந் தேதிக்குள் இப்பரிசில் கலந்து கொள்ள விரும்புவோர் அனுப்புதல்வேண்டும். சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதை வெளியிடப்பட்டு, பரிசும் உடனே அனுப்பப்படும்.]

## சுலோசனா

“லக்ஷ்மி! நீ மிகவும் புத்திசாலியென்றல்லவா நினைத்திருந்தேன். வயது எழு ஆகிவிட்டது. இந்தப் பொம்மையை வைத்துக்கொண்டு இன்னமுமா விளையாட வேண்டும். என்ன சிங்காரம். என்ன சுலோசனாவோ?” என்று கோபத்துடன் ராகவன், தனது மகள் உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு நொண்டிக் கொண்டே சென்றார்.

சிறிது தூரத்திலிருந்த சுலோசனா என்ற பொம்மையை உடனே எடுத்து லக்ஷ்மி மார்போடு அணைத்துக் கொண்டாள். அப்பாவின் கடுமையான முகத்தைப் பார்த்ததும் பயந்துபோய் வாசற் பக்கம் ஓடினாள். சாயங்கால வேளையாதலால், அவளது சகிகள் வீதியில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். மண் காற்று அடித்துக் கொண்டிருக்கிறது.

“லக்ஷ்மி! இன்று என்ன மாதிரி பாவாடை சுலோசனாவுக்கு உடுத்தியிருக்கிறாய்?” என்று கேட்டுக் கொண்டு, அவளைவிட கொஞ்சம் வயதான ஒரு பெண் ஓடி வந்தாள்.

உள்ளேயிருந்து வேகமாக ஓடி வந்ததால், லக்ஷ்மிக்குச் சிறிது மூச்சு வாங்குகிறது. "கமலா! என் பாவாடை மாதிரி பாவாடைதான் என் சுலோசனை போட்டுக் கொண்டிருக்கிறாள். இதோ பார்!" என்று பதில் சொன்னாள்.

இதற்குள் ராகவன் அங்கே வந்து விட்டார். அவரைப் பார்த்தால் அந்தத் தெருவிலிருக்கும் குழந்தைகளுக்கெல்லாம் நடுக்கந்தான். ஒரு தினமாவது சிரித்த முகமே அவரிடம் காண முடியாது. விளையாட்டென்றால், அவருக்குக் கொஞ்சங்கூட பிடிக்காது. தான் சிறு வயதாக இருக்கும்போது விளையாடிக் கொண்டிருந்தாராம். அப்பொழுது கீழே விழுந்து கால் ஒடிந்து விட்டதாம். அன்று அவருக்கு விளையாட்டின்மீது ஏற்பட்ட பகைதான், ஜன்மப் பகையாக ஆகிவிட்டது. வயதாகி விவாகம் ஆனபின்னரும் இந்தத் துவேஷம் அவரை விடவில்லை.

லக்ஷ்மியை ராகவன் வெகு ஜாக்ரதையாகக் கவனித்து வந்தார். தான் ஆபீஸுக்குச் சென்றிருக்கும்போது அவர் மனைவி மீனாக்ஷி குழந்தையை விளையாட்டின்பொருட்டு வெளியில் எடுத்துச்சென்று ஆபீஸிலிருந்து ராகவன் திரும்பி வருவதற்குள் பெட்டியில் அடங்கிய பாம்புபோல் வந்து சேர்ந்து விடுவாள். தவறிப் போய் அவர் கண்டுவிட்டால், அன்று அவளுக்குச் சனிபிடித்து விட்டதென்றே சொல்லவேண்டும். அடி நன்றாக விழும். ஆனால் அவர் மனம்போல் நடந்துவிட்டால், அவரைப்போல் தங்கக் கம்பி யாரும் கிடையாது. குழந்தையிடத்திலும் மனைவியிடத்திலும் விஸ்வாசம் சொல்ல முடியாது. குழந்தை மற்ற குழந்தைகளுடன் விளையாடக் கூடாது. விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் கொடுத்தால் வேறு குழந்தைகள் வந்து சண்டைபோடுமென்று ஒன்றும் வாங்கித் தரமாட்டார்.

லக்ஷ்மிக்கு ஐந்துவயதாகியிருக்கும்போது காங்கிரஸ் எக்ஸிபிஷனில் சுலோசனை பொம்மையை வாங்கிக்கொடுக்க மீனாக்ஷி பட்ட சிரமம் சொல்லி முடியாது. சுலோசனையை உயிருள்ள பிம்பமாகவே பாவித்து லக்ஷ்மி விளையாடி வந்தாள். தான் உண்ணும் போதும் உறங்கும்போதும் பொம்மையை விடமாட்டாள். தான் உடுத்தும் உடைமாதிரி அதற்கும் உடுத்துவாள்.

"அப்பா! என் சுலோசனு உமக்கு என்ன செய்து விட்டாள்? அதை வீசி எறிவதாக விருந்தால், என்னையும் கீழே தள்ளிவிடுங்கள்" என்று தைரியமாகப் பதில் சொன்னுள்.

குழந்தை மொழிகளைக் கேட்டதும் ராகவன் பல்லிளித்தார். 'கல்' என்று சிரித்தார். "லக்ஷ்மி! ஓடாதே! உன் பாபாவை நான் ஒன்றும் செய்யவில்லை. புத்தகத்தை வைத்துக்கொண்டு படி. தெருவில் போய் விளையாடாதே!" என்ருர். அப்பொழுதுதான் லக்ஷ்மிக்குத் தைரியம் வந்தது. நகைத்துக்கொண்டே உள்ளே ஓடினுள். தட்டில் ஆகாரம் தயாராக இருந்தது. அதைச் சாப்பிட்டு விட்டுத் தன் படுக்கையின் அருகிலிருந்த தொட்டிலில் சுலோசனுவைப் படுக்க வைத்தாள். பிறகு தானும் நித்திரைக்குச் சென்ருள். மணி 8 ஆகிவிட்டது.

மறுதினம் காலை முதல் நல்லமழை பெய்துகொண்டிருந்தது. 9 மணி சுமாருக்குத்தான் மழை நின்றது. லக்ஷ்மி, பள்ளிக்கூடம் புறப்படும்போது, சுலோசனுவுக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு, ஒரு அழகான பட்டுக்குடையை யெடுத்துக்கொண்டு புறப்பட்டாள். "லக்ஷ்மீ! மழையாக விருக்கிறதே! இன்று பள்ளிக்கூடம் போக வேண்டாம்" என்ருள் மீனுக்ஷி. "அம்மா! மழைதான் நின்றுவிட்டதே. கையில் குடையிருக்கிறது. அம்மா! சுலோசனு தொட்டில் பக்கத்தில் சொட்டுகிறது. நனையாமல் பார்த்துக்கொள். அவள் நனைந்திருந்தால் நான் அழுவேன்" என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டுச் சென்ருள்.

சாயங்கால வேளை. லக்ஷ்மி பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும் போது மறுபடியும் மழைபெய்து நின்றிருந்தது. ஓடிவந்து தொட்டிலில் பொம்மையைத் தேடினுள். தொட்டில் நனைந்திருந்ததே யொழிய சுலோசனு அங்குக் காணப்படவில்லை. புத்தகப் பையைக் கீழே போட்டுவிட்டு, 'அம்மா! அம்மா! சுலோசனு எங்கே?' என்று ஓடி வந்தாள். படிக்கட்டுத் தடுக்கிக் கீழே விழுந்ததையும் கவனிக்காமல் எழுந்துவந்து கேட்டாள்.

ராகவன் அப்பொழுது சாப்பிட்டுக் கொண்டிருந்தார். மிகவும் கோபத்துடன், "வந்ததும் வாராததுமாய்ப் பொம்மையைத் தேடுவது நன்ருக இருக்கிறது. கழுதே! காலில் நன்ருய் அடிபட்டதா! என்மாதிரி நீயும் நொண்டியாக ஆகிவிடவேணுமா? உன் பொம்மை

புழக்கடையில் பாதம் மரத்தின் நுனியில் இருக்கிறது" என்று வெறுப்போடு கூறினர்.

உடனே லக்ஷ்மி ஒரே தாவாக கொல்லைப் புறத்திற்கு ஓடினுள். மழையும் பெய்ய ஆரம்பித்து விட்டது. காற்றில் பாதம் கிளைகள் ஆடுகின்றன. மரத்தைச் சுற்றி நாற்புறமும் பார்த்தாள். பிறகு மரத்தின்மீது சாய்த்து வைத்திருந்த ஏணியில் ஏறினுள். அதில் 12 படிகள் இருந்தன. 11 படிகள் ஏறிவிட்டாள். அதற்குள் ஏணி சருக்கிக் கீழே விழுந்து விட்டது. லக்ஷ்மியும் தடாரென்று கீழே சாய்ந்தாள்.

நெடுநேரம் குழந்தை உள்ளே வராததால் கவலே பிடித்துக் கொண்டது ராகவனுக்கு. கொல்லைப்புறம் சென்று பார்த்தால் அந்தோ! சேற்றில் குழந்தை பிரக்ஞையற்றுக் கீழே விழுந்து கிடக்கிறது. ஓடிச்சென்று வாரியெடுத்துக்கொண்டு உள்ளே வந்தார். மண்டையில் அடித்துக்கொண்டார். உடனே ஒரு டாக்டரை வரவழைத்தார். டாக்டரும் விரைந்து ஓடி வந்தார். "அடி அதிகமாகப் படவில்லே. உயரத்திலிருந்து கீழே விழுந்த அதிர்ச்சியினுல்தான் மயக்கமாக இருக்கிறது. இந்த இன்ஜக்ஷனிலேயே சரியாகப் போய்விடும். தொந்திரவு செய்யாதீர்கள். அரைமணி பிடிக்கும் பிரக்ஞை வர" என்று கூறினர்.

குழந்தை கண்ணைத் திறக்கும் வரையில் ராகவன் கண்களில் நீர் ததும்பிய வண்ணம் மௌனமாக லக்ஷ்மியையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். மயக்கம் நீங்கியதும், 'லக்ஷ்மி' என்று மார்போடு சேர்த்துக் கட்டிக்கொண்டார்.

மெலிந்த குரலில், 'அப்பா! மரத்தை முழுவதும் தேடினேன்; சுலோசனு இல்லேயே! ராத்திரி பிசாசு தூக்கிக்கொண்டு போயிருக்குமே!' என்று பயந்த முகத்துடன் சொன்னுள்.

"லக்ஷ்மி! எல்லாம் என்னுடைய மூடத்தனத்தினுல்தான் வந்தது. மழையில் நனேகிறதேயென்று பெட்டியில் சுலோசனுவை எடுத்து வைத்திருக்கிறேன். ஏதோ கோபத்தினுல் அப்படிச் சொன்னேன். இனி, உன் சுலோசனு ஜோலிக்கு நான் வருவதே இல்லே" என்று கூறிக்கொண்டே உள்ளே போய் பொம்மையைக் கொண்டுவந்து லக்ஷ்மியிடம் கொடுத்தார்.

லக்ஷ்மி 'சுலோசன'வுக்குப் பல முத்தங்கள் தந்தாள். கண்ணே எங்கே காணோம். நீ நனைந்தாயா! இதே பாரு எனக்கு அடிபட்டு விட்டது!' என்று அதனுடன் பேசிக்கொண்டே மார்போடு அணைத்துக்கொண்டாள். அப்பொழுதுதான் குழந்தைகளுக்கு விளையாட்டிலிருக்கும் ஆர்வத்தை ராகவன் அறிந்து கொண்டார்.

"அப்பா! நீ தினம் தினம் அதோ இருக்கும் ஹநுமாரை எவ்வளவு பிரியத்துடன் பிரதக்ஷிணம் செய்து நமஸ்காரஞ் செய்கிறாய். அதுவும் கல்லால் செய்யப்பட்ட ஒரு பெரிய பொம்மை தானே!" என்றாள் லக்ஷ்மி. ராகவன், தானும் சுலோசனவைத் தழுவி முத்தமிட்டாரே ஒழிய, அக்கேள்விக்குப் பதிலளிக்க முடியவில்லை.

இங்ஙனம் பல வருடங்கள் சென்றன. லக்ஷ்மிக்கு வயதாகி, நல்ல இடத்தில் விவாகம் ஆயிற்று. மீனாக்ஷியும் ராகவனும் அவர்கள் சக்திக்கு மீறியே பலவகை சீர்களுடன் லக்ஷ்மியைப் புக்ககத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த லக்ஷ்மீகாந்தன், லக்ஷ்மி வண்டியை விட்டிறங்கும்போது சுலோசன பொம்மையை நன்றாகச் சிங்காரித்து இடுப்பில் வைத்திருப்பதைப் பார்த்து கொல்லென்று சிரித்தான். லக்ஷ்மியும் தலை குனிந்தாள்.

ராகவன் சிரித்துக்கொண்டே, "லக்ஷ்மீகாந்தா! என் பெண்ணை திருப்தி செய்ய வேண்டுமானால், அவள் இடுப்பில் வைத்திருக்கும் சுலோசனவைத்தான் முதலில் திருப்தி செய்யவேண்டும். பொம்மையை முதலில் வாங்கிக்கொள்ளும்" என்று கூறினர்.

அன்று இரவு லக்ஷ்மி வெட்கப்பட்டுக்கொண்டு படுக்கையில் உட்கார்ந்திருந்தாள். ஒரு மூலையில் நன்றாக சிங்காரிக்கப்பட்டிருந்த சுலோசன படுத்திருந்தாள். லக்ஷ்மீகாந்தம், சுலோசனவுக்குப் பல முத்தங்கள் தந்துவிட்டு, "இதோ பார்! நீ பேசாமல் வெட்கப்படுகிறாயே! உன் சகி அன்புடன் பல முத்தங்கள் பெற்றுவிட்டாளே! ஒரு வெட்கத்தையும் காணோமே!" என்று புன்சிரிப்போடு மொழிந்தான்.

"நாதா! எனக்கென்ன சங்கோஜம்?" என்று சிரித்துக்கொண்டே பக்கத்தில் ஓடிவந்தாள் லக்ஷ்மி.

—ஜி. ஆர்.

# வெற்றி யாருடையது?

[வி. எம். ஸ்ரீநிவாஸன், எம். ஏ.]

ஒரு படத்தின் வெற்றிக்கு மூலகாரணமாக விளங்கும் பல அம்சங்களையும் அவைகளுக்காக மிகவும் பாடுபடும் கலைத் தொண்டர்களையும் கணக்கிடுவோம்.

(1) கதைப்போக்கின் உயர்வும், கதையின் சக்தியும்—(கதாசிரியர்.)

(2) கதையின் ஜீவசக்தியும், ஆசிரியரின் மனோபாவமும் கெடாது, நல்ல விறுவிறுப்புடன் கூடிய ஸீனெரியோ—(ஸீனெரியோ எழுதுபவர்.)

(3) மேற்கூறிய இரண்டையும் நன்கு பிரயோஜனப்படுத்தும் டைரக்ஷன்—(டைரக்டர்.)

(4) டைரக்டரின் பிரயாசைகளை வெற்றி பெறச் செய்வதில் பெரிதும் உதவிபுரிவதில் முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளும் படப்பிடிப்பு—(படப்பிடிப்பாளர்)

(5) தத்ரூபமாகவும், இயற்கை ததும்பவும் உள்ள நடிப்பு—(நடிகர்கள்.)

(6) நடிப்பைச் சிறப்பிக்கச்செய்யும் (அ) சிறந்த டயலாக்ஸ்—(சம்பாஷணை எழுதுபவர்) (ஆ) சமயோசித பாடல்கள்—(பாடல்களை இயற்றுபவர்.)

(7) நடிகர்களின் முயற்சியையும், அனுபவித்த நடிப்பையும், மனோவேகத்தையும் நன்கு வெளிப்படுத்தும் இயற்கையான குரலை தத்ரூபமாக ஒலிப்பதிப்பித்தல்—(ஒலிப்பதிவாளர்.)

(8) சமயோசிதமான செட்டிங்ஸ்—(ஆர்ட்டைரக்டரும், செட்டிங்க்ஸ் நிபுணரும்.)

(9) கதாபாத்திரங்களின் வேஷப் பொருத்தமும், சிறந்த "மேக்கப்பு"களும்—(மேக்கப் கலைஞர்.)

(10) எல்லா விஷயங்களிலும் படம் சிறந்து விளங்கவேண்டும் என்ற பிரதிக்ஞை—(பணம் மாத்திரமின்றி மனமும் உள்ள பட முதலாளி.)

மேற்கூறியவைகளில் ஒரு படத்தின் வெற்றியில், முதல் இரண்டிற்குப் பாதி ஸ்தானமும் எல்லாவற்றையும் நன்கு பயன் படுத்திக்கொள்ளும் மூன்றுவது அம்சத்திற்குப் பாதி ஸ்தானமும் அளித்தல்வேண்டும். இது என்னுடைய அபிப்பிராயம் மாத்திரம் அன்று. நம் தென்னிந்தியப் படவுலகில் ஜயக்கொடி நாட்டிய பிர பல டைரக்டரொருவருடைய அபிப்பிராயமும் இதுவே என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல் மூன்று அம்சங்களுக்கும் கர்த்தாவாக ஒருவரே இருக்க லாம்; அல்லது இருவர், அல்லது மூவர். தன்னுடைய வேலையை சிறப்பிக்க டைரக்டர் யார் யாருடன் ஒத்துழைக்கவேண்டும் என்பது சுலபமாகப் புலப்படும். முதலாவதாக, ஆசிரியருடைய மனோபாவத்தையும், தத்துவத்தையும் நன்கு வெளிப்படுத்த, டைரக்டர் அன்னுருடன் ஒத்துழைப்பது முக்கியம். அடுத்தபடியாக நடிகர்களை உற்சாகப்படுத்திக்கொண்டு, அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்து, இயற்கையாக நடிப்பதையே தங்கள் கடமையென அவர்கள் உணரும் வகையில் டைரக்டர் ஒத்துழைப்பது அவசியம். அடுத்தபடியாக காமிரா நிபுணரின் ஒத்துழைப்பு டைரக்டருக்குப் பெரிய ஆஸ்திபோலாகிறது. ஏனெனில், சரியான ஆங்கில்களும், சமயோசிதமான ஷாட்டுகளும் கொடுப்பது படப்பிடிப்பாளரின் சாமர்த்தியத்தையும், உண்மை உழைப்பையும் பொருத்திருக் கின்றது. அதேபோல ஒலிப்பதிவாளரின் ஒத்துழைப்பும் ஜீவநாடி யாக வேண்டியிருக்கிறது. ஏனெனில், "ஆம்ப்ளிபை" செய்யாமல் இயற்கை த்வனியை அப்படியே ரிக்கார்டு செய்வதிலும், சமயத்துக் குத் தகுந்தாற்போல "சௌண்ட் எபெக்ட்டுகள்" கொடுப்பதிலும் அவருடைய திறமைதான் படத்தின் அஸ்திவாரக்கற்களில் ஒன் ருகும். தவிர, ஒரு பரம ஏழையின் வீட்டு செட்டிங்கு வேண்டு மென்றால், சலவைக்கற்கள் புதைத்தது போன்று தோன்றும் வண்ணம் செட்டிங்க் சுவர் அமைக்காமல், சமயோசிதமாக இடம், காலம் எல்லாவற்றையும் அனுசரித்துச் செட்டிங்க்ஸ் அமைக்கும் நிபுணரும் ஒத்துழைக்கவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்.

பொதுவாக நாம் கவனிக்கவேண்டியது யாதெனில், டைரக்டர் மேற்கூறிய மற்றைய நபர்களுடன் நேச மனப்பான்மையுடனும், உயர்வு தாழ்வு என்ற வித்தியாசமில்லாமலும் ஒத்துழைப்பதே படத்தின் வெற்றிக்குச் சிறந்த ஆதாரம். இவையாவற்றிற்கும்

பின்னணியில், பணச்செலவை லக்ஷியஞ்செய்யாமல் படத்தின் வெற்றியையும், அதனல் கலைக்குத் தொண்டையுமே எதிர்பார்க்கும் முதலாளி உயர்ந்த நோக்கங்கள் உள்ளவராக விருக்கவேண்டும்.

மேற்கூறிய எல்லா அம்சங்களிலும் வெற்றிபெறும் படத்தையே நாம் பரிபூரண வெற்றி யெனச் சொல்லலாம். அங்ஙனம் பெய ரெடுத்துள்ள படங்கள் நம் நாட்டில் மிகவும் குறைவு. அவைகளின் லிஸ்ட் தயாரிக்காது, முக்கியமான சிலவற்றைக் குறிப்போமெனின் மஹாத்மா, துகாராம், எதிர்பாராதது, சந்திதாஸ், பாக்யசக்ரா, அச்சுத்கன்யா முதலியவை முதலில் நம்முன் நிற்கின்றனவல்லவா? சிந்தாமணியைக்கூட இந்த ரகத்தில் சேர்க்கலாமென்று சொல் கிறீர்கள்?

எல்லா அம்சங்களிலும் சிறந்து விளங்காவிட்டாலும், நல்ல பெயருடனும், நல்ல வருவாயுடனும் உள்ள சில படங்களை நாம் காண்கின்றோம். அம்மாதிரி படங்களை நாம் பரிபூரண வெற்றி யெனச் சொல்லாமல், சில தனித்த அம்சங்களின் வெற்றியெனக் கருதவேண்டும். சென்ற மே மாதத்தில் அத்தகைய படங்கள் சில வெளிவந்தன.

ஸேவாஸதனத்தை நல்ல நடிப்பு, இயற்கையான சம்பாஷணை, இனிமையான சங்கீதம் முதலிய அம்சங்களின் வெற்றி யென்றே சொல்லவேண்டும். ஏனெனில், மாற்றியுள்ள பிலிம் கதை அவ் வளவு ருசிகரமாகவில்லை. "சுமதியின் தலைவிதி" அல்லது "நாத் தியின் ஆட்சி" என்று பெயரிட்டிருந்தால் உசிதமாயிருந்திருக்கும். இயற்கையில் உள்ள சாரீரத்தைத் தத்ரூபமாக ஒலிப்பதிவு செய்ய வில்லை. சில விடங்களில் போட்டோகிராபியும் தெளிவாயில்லை. ஒரு நடிகை கொச்சையாயும், இன்னுமொருவர் அனவசியமாக நீட்டியும் (தமிழ்) பேசுவது சற்றும் ரஸிக்கும்வண்ணம் இல்லை. சுருங்கச் சொல்லின், டைரக்டர் டைரக்ஷனை விட சம்பாஷணை யமைப்பதில் பெருத்த வெற்றி பெற்றுள்ளார் என்று கூறலாம்.

"ஜலஜா"வை டைரக்ஷன், நடிப்பு முதலியவைகளின் வெற்றி என்று சொல்லலாம். நாம் முதலில் குறிப்பிட்டுள்ள பல அம்சங் களில் முக்கியமான முதல் இரண்டில் இப்படத்தில் ஏமாற்றம். தவிர, சில இடங்களில் லைட்டிங் மோசமாயிருக்கிறது. ஆனல் சில டெக்னிக் ஷாட்டுகள் நன்றாக எடுத்துள்ளார்கள். இதில் சிலர் முதன் முதலாக படத்துக்கு வந்தவர்கள் எனினும் நன்கு உணர்ச்சி ததும்ப நடித்துள்ளார்கள். நாட்டியம் பிடித்தவர்களுக்கு இப்படம் ஒரு பெரிய விருந்துபோன்றதெனினும் நல்லதாக ஒரு ஜாவளியோ, பதமோ கொடுத்து அபிநயம் பிடிக்கச் செய்திருந்தால், இன்னும் நன்றுயிருந்திருக்கும்.

அனாதைப் பெண்ணைப்பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. பொதுஜன அபிப்பிராயத்தையும், விமர்சனங்களையும் கவனித்தால், அதை நல்ல வெற்றியென்றே கூறலாம். ஆனால் நாம் முதலில் கூறிய வண்ணம் எல்லா அம்சங்களிலும் வெற்றிதானா வென்பதை ரஸிகர்கள் பார்த்துத் தாங்களே தீர்மானம் செய்து கொள்ளட்டும். [பின்பொரு சமயம் ராஜமோஹன், அனாதைப் பெண் முதலிய படங்களைப்பற்றி விரிவாக எழுதுவோம்.] பொதுவாக அனாதைப் பெண்ணை ஆருவது அம்சம் தவிர, மற்றெல்லா அம்சங்களிலும் மகத்தான வெற்றியென்று எல்லோரும் அபிப்பிராயப் படுகிறார்கள். டைரக்டர் சம்பாஷணைகளுக்கும், ஆசிரியருடைய கதா பாத்திர சித்தரிப்புக்கும் இன்னும் முக்கியத்துவம் கொடுத்திருந்தால், நிகரில்லா வெற்றியென்ற உயரிய ஸ்தானத்தை அனாதைப்பெண் அடைந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை.

மேற்கூறிய மூன்று படங்களிலும் நாம் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்கவேண்டும். அதாவது, முதலிரண்டிலும் பிரதம ஸ்திரீ நடிகையை ஆதாரமாகக்கொண்டு பிலிம் கதையை அமைத்திருக்கிறார்கள். ஒரு சிறந்த பாடகியையும், நாட்டியக்காரியையும் எங்ஙனம் படத்தில் உபயோகப்படுத்தலாம் என்பதை ஸேவாஸதனத்திலும், ஜலஜாவிலும் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அனாதைப் பெண்ணிலோவென்றால், கதைக்குத் தகுந்தவாறு நடிகர்களைத்தேர்ந்தெடுத்துள்ளார்கள். மொத்தத்தில், மூன்று படங்களிலும் நடிப்பு அம்சத்தில் ஓரளவு போற்றற்குரிய வெற்றியே காண்கின்றோம்.

“வெற்றி யாருடையது” என்று கேட்காமல், “எல்லோருடையதுந்தானே” என்று சொல்லும் காலம் சமீபித்துக்கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

---

நகரெங்கும் இதே பேச்சு!

**ஜலஜா** அல்லது **நாட்டிய மகிமை**

பிராட்வே டாக்கீஸில்

28—5—38 சனிவாரம் முதல் இரண்டாவது வாரம்
வெற்றிகரமாகக் காட்டப்பட்டு வருகிறது

தினசரி **3** காட்சிகள்

உங்கள் குடும்பத்துடனும் நண்பர்களுடனும்
உடனே சென்று கண்டு களியுங்கள்.

ஸ்ரீ

# ஜீவியச் சுழல்

அல்லது

## சிறிய ஒழுக்கம்

"ஆனந்த மூர்த்தியான வேணுகோபாலன் சந்நிதியில் அந்திவேளை பூஜையின் அறிவிப்பு மணியாகிய பெரிய மணி, "கணீர்! கணீர்!" என்று அடிக்கின்றது. அந்த மணியோசையானது, "ஓம்: ஓம்:" என்ற பிரணவ மந்திரத்தைப் பாமர மக்களுக்கு எடுத்தோதுவது போல் சப்தித்து, அக்கோயிலைச் சுற்றியுள்ள அக்கிரகாரம் பூராவும் அந்தப் பிரணவ நாதம் சுற்றிக்கொண்டது.

ஆஸ்திகர்களின் உள்ளத்தில் பதிந்து கிடக்கும் பக்திச் சுடரைத் தூண்டும் தூண்டுகோல்போல் அந்த மணியின் நாதம் அமைந்து, அவர்களின் பக்தி வெள்ளத்தைக் கிளறி, "ஹா! அந்தி வேளை பூஜை நடக்கிறது. கோயிலுக்குப் போகவேண்டும்" என்ற ஓர் உணர்ச்சியை உண்டாக்கியதால், அவர்கள் பக்திப் பரவசத்துடனும், அப்பனைச் சேவிக்கப்போகும் ஆனந்தத்துடனும் கிளம்பி, கோயிலை நோக்கிச் சென்றார்கள்.

கோயிலுக்கு வரும் எல்லோருமே 'ஆஸ்திக ஸ்வரூபிகள்' என்று கூறமுடியுமா? நல்ல உயர்தர வைரங்களுடன் தோஷமுள்ள

வைரங்களும் கலந்திருப்பது சகஜமல்லவா? அதேபோல் இந்தக் கூட்டத்திலும் பலவிதமான பேர்கள் கலந்திருந்தார்கள். இதை யோர் சாக்காக வைத்துக்கொண்டு, வீட்டிலிருந்து சற்று விடுபட்டால் போதுமென்ற கருத்துடன் அடுப்பங்கரை உத்தியோகத்திலிருந்து வெளிவந்த சில பெண்மணிகளும் அங்கே கூடினர்கள்.

வேலையற்ற வெட்டிப் பேர்வழிகள் "கோயிலுக்குச் சென்றால், பலபெயர்களைப் பார்க்கலாம்; பேசலாம்" என்று வம்பர் மகாசபையைக் கூட்டும் நோக்கத்துடன் சில பெண்மணிகள்—ஏன்—ஆண்கள்கூட அங்கே கூடினர்கள். முற்காலங்களில் தேர், திருவிழா, கோயில், குளங்கள் முதலிய இடங்களில் கும்பல் கூடிப் பேசும் முறையிலேயே ஒரு பெண்ணுக்கும், பிள்ளைக்கும் விவாகத்தையும் நிச்சயித்து முடித்துவிடுவது வழக்கமாம். இதுவும் ஓர் நல்ல காரியமும் சிறந்த மார்க்கமும் அல்லவா? அந்த உத்தேசத்துடன் கூடும் ரகத்தைச் சேர்ந்தவர்கள் இக்காலத்திலும் இல்லாமலில்லை. ஆனல், அந்த உத்தமமான பழைய மார்க்கத்தை அலக்ஷியம் செய்வதால், அது இக்காலத்தில் பரிமளிக்கவில்லை.

பின்னும் அங்குள்ள பெண்களின் அழகைக் கண்ணல் குடிக்கும் கள்ள எண்ணத்துடன் கூடியுள்ள கயவர்களின் கூட்டத்திற்கும் பஞ்சமில்லை. இத்தனை மக்களும் கூடியிருக்குமிடம் புனிதமான கோயிலேயன்றி, பல்வேறு உணர்ச்சியுடன் கூடிய மனத்தையுடைய மாந்தரின் கண்கள் கோயிலின் வெளிக் கதவையே நோக்கிக்கொண்டிருந்தன. அந்தப் பார்வையின் ஆழமான வேகமானது அவர்களின் இதயத் துடிப்பை அப்படியே எடுத்துக் காட்டுவதுபோல் இருந்தது.

அதே சமயம், காலின் சலங்கை 'கல், கல்' என்று இனிய நாதம்போல் ஒலிக்கும் சப்தத்தைக் கேட்டதும், எதிர்பார்த்த மக்களின் மனத்தில் ஊடுருவிப்பாய்ந்த சந்தோஷ முகமலர்ச்சிக்கோர் எல்லையே இல்லை. "அதோ! அதோ! மதனசுந்தரி வந்துவிட்டாள்! வந்துவிட்டாள்!!" என்ற ஆரவாரம் கிளம்பியது. "தோகை விரித்தாடும் மயிலோ! அன்றி வானில் பளிச்சென்று தோன்றி மறையும் மின்னல் கொடியோ!" என்று பிரமிக்கத்தக்க

விதமான அலங்கார சோபித சுந்தராங்கி ஒய்யார நடை நடந்த வாறு கையில் தனது முறையான குடதீபத்தை ஏந்தியபடியே நாலாபக்கங்களிலும் கண்களின் கொடிய வலையை வீசி, மயக்குண்ட மாந்தர் உள்ளத்தை வாட்டித் தன் வசமாக அவர்களை இழுத்தவண்ணம் சன்னிதானத்தின் முன்பு வந்து நின்றாள்.

அன்று மதனசுந்தரியின் அபூர்வமான நாட்டியத்தைப் பார்க்கப்போகும் ஆனந்தத்தினால் அதிகமான கூட்டம் கூடிவிட்டார்கள். இதே அந்திநேரத்தில் உல்லாசமான தம்பதிகள் கடற்கரை, சினிமா, ட்ராமா முதலிய கேளிக்கைகளுக்குச் செல்வோரும், பந்தாட்டப் பிரியர்கள் பேட்டும் கையுமாகச் செல்வோரும், சிறு பையன்கள் தம் தம் சகாக்களுடன் கும்பல் கும்பலாக விளையாடுவதும், பால்காரர்கள் பால் கறந்து வார்ப்பதும், கறந்துவிட்டு மாட்டை யோட்டிக்கொண்டு செல்வதும், வீடுகளில் பெண்கள் தீபம் ஏற்றிவிட்டுக் கடவுளை வணங்குவதும், தோத்திரம் செய்வதும், பாடுவதும், துளசி பூஜை செய்வதும் இன்னும் இதுபோல் பலவிதமான நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன.

அதே சமயத்தில், ஓர் அழகிய மாடிவீட்டில், சுமார் 50 வயது மதிக்கக்கூடிய பெண்பிள்ளை மெத்தையில் ஒரு அறையின் பக்கம் எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டே முகத்தைச் சுளிப்பதும், கையை ஆட்டி அசைத்து நீட்டி நெறிப்பதும் தன் மனத்திலுள்ள கோபத்தை இவ்விதமான அங்கசேஷ்டைகளின்மூலம் தெரிவித்த படியே உலாவிக்கொண்டிருந்தாள்.

அந்த அறையிலிருந்து 'கணீர் கணீர்' என்று வெங்கல மணி போல் ஒலிக்கும் குரலில் கடகடவென்று சிரிக்கும் ஓசை கேட்டது. "ஆமாம்! இந்தக் கோபிகா ஸ்திரீகள் கண்ணனை விட மாட்டேனென்று இவ்விதம் தேடியலைகிறார்களே! இதுமட்டும் ஸ்திரீ தர்மத்திற்கு அழகா? கோபிகா கிருஷ்ண லீலைகள் அனந்தம் இருக்கின்றனவே! அம்மாதிரி செய்யலாமா? இது கற்புக்குப் பங்கமல்லவா?" என்று ஓர் குரல் கேட்டது.

இதைக் கேட்ட அங்கு எதிரில் உட்கார்ந்திருக்கும் பெண்மணி நகைத்துக்கொண்டே, "ஆ! அப்படிக் கேளு. இம்மாதிரி

கேள்விகள் கேட்டுத் தெரிந்துகொள்பவர்கள்தான் புத்திசாலிகள். இம்மாதிரியான மாணவிகளுக்குத்தான் கற்றுக்கொடுப்பதும் எனக்குச் சுலபம், சந்தோஷம் எல்லாம் உண்டு. நிர்மலா! ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவென்ன சாதாரணமான ஓர் புருஷன் என்று எண்ணுகிறாயா? அல்லது கோபிகைகள்தான் நம்மைப் போன்ற சாதாரண பெண்மணிகள் என்று நினைக்கிறாயா? அவ்விரண்டும் அம்மாதிரியல்ல.

பகவான் ஒவ்வொரு யுகத்தில் ஒவ்வொரு அவதாரத்தின்மூலம் உலகத்திலுள்ள மக்கள் உய்யும்பொருட்டுக் காரணார்த்தமாகக் காரியத்தைச் செய்து காட்டுகிறார். கோபிகைகள் வேண்டுவது சாதாரணமான அல்ப சுகத்திற்காகவல்ல. எம்பெருமானே ஸ்ரீகண்ணன் என்பது அவர்களின் அந்தராத்மா அறியும். அந்த எம்பெருமானின் பாதாரவிந்தத்தில் ஐக்கியமாகி மோக்ஷ சாம்ராஜ்யப் பதவியை அடைவதற்காகவே இம்மாதிரி செய்கிறார்கள்.

நிர்மலா! இதன் உள்ளார்ந்த அந்தரங்க ரகஸ்யம் என்ன தெரியுமா? பகவான் ராமாவதாரம் செய்து ராக்ஷஸ வத நிமித்தம் கானகம் சென்ற காலத்தில் அங்குள்ள ரிஷிகள் எல்லாம் பகவானிடம் ஐக்கியமாக ஆசைகொண்டு வேண்டியபோது அவர்களின் மனத்தைப் பரிபூர்ணமாக அறிந்த பகவான் அவர்களைக் களிப்பித்துப் பின்னர் மோக்ஷம் கொடுக்கும் நோக்கத்துடன் "நான் கிருஷ்ணாவதாரம் எடுக்கப் போகிறேன். அப்போது நீங்களெல்லோரும் கோபிகைகளாக வந்து பிறப்பீர்கள். அப்போது உங்கள் மனங்களிக்க உங்களுடன் விளையாடி மகிழ்ந்து உங்களுக்கு மோக்ஷ மளிப்பேன்" என்று அருளிச்செய்தார். அந்த அவதாரத்தில் சொல்லியபடிதான் கிருஷ்ணாவதாரத்தில் நடக்கிறது. இது வெறும் ஸ்திரீ புருஷ பாவமில்லை. நிர்மலா! இன்று இத்தமட்டும் போதுமா? இன்னும் கொஞ்சம் படிக்கிறாயா?" என்றாள்.

நிர்மலா :—அம்மணீ! கோபிகைகளுக்கு மோக்ஷமளித்த அந்தப் பரந்தாமன் எங்களைப்போன்ற அல்ப ஜந்துக்களுக்கு—அதிலும் இழிவான தாசிக் குலத்தில் பிறந்துவிட்ட இப்பாவிக்கு—

மோக்ஷமளிப்பாரா? என்று கேட்கும்போது நிர்மலாவின் குரல் சற்றுக் கம்மியது. கண்களில் நீர் குளம்போல் நிறைந்துவிட்டது. அவளுடைய உணர்ச்சி எல்லாம் ஒன்று சேர்ந்து ஓர் பெருமூச்சு நீண்டதாக வந்தது.

இந்தக் கேள்வியை வெளியிலிருந்து கேட்டுக்கொண்டு உலாவும் நிர்மலாவின் தாயாரான ஒயிலாம்பாளுக்கு ஏற்கெனவே இருந்த மனக் கசப்பு இன்னும் அதிகமாயிற்று. "கேவலமான தாசிக் குலமா! ஐயையோ! அடியம்மாடீ! நன்றாயிருக்கிறது" என்று இவள் முணு முணுத்தவாறு கதவைத் திறக்கச் சென்றாள். அதே சமயம் உள்ளே அந்தம்மாள் பேசத் தொடங்கி, "அம்மா! நிர்மலா! உன் பெயருக்கு ஏற்றாற்போல் உன் மனமும் நிர்மலமாய்த் தெளிந்திருக்கிறது. சர்வலோக சரண்யனான அந்தப் பரந்தாமனுக்கு எவ்வித வித்தியாசமும் கிடையாது.

"பாதியா யழுகிய கால் கையரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியா யரவணையா யென்பா ராகில்
அவரன்றோ யாம் வணங்கும் அடிகளாவர்
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர் மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதில் நான்முகன் பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர்தாமே!"

கவனித்தாயா? யாராயிருந்தாலும் உள்ளும் புறமும் பரிசுத்தமாக அவனைப் பஜித்தால் எக்குலத்தினராயினும் அவன் அன்பிற்கும் அவன் அருளுக்கும் பாத்திரமாவது நிச்சயம். தீனரக்ஷகனல்லவா அவன்! காலக்கிரமத்தில் இழிவாகிவிட்ட இந்தத் தாசிக் குலம், ஆரம்பத்தில் அதற்கு இருந்த மேன்மை, அதன் நோக்கம், உயர்ந்த தெய்வப் பணிசெய்து முக்தியடைந்த பெருமை, யாவும் அன்றொருநாள் உனக்கு எடுத்துச் சொல்லிவிட்டேனல்லவா! அத்தகைய குலம் இப்போது கேவலம் வயிற்றுப் பிழைப்பிற்காக விலையிலாத மாணிக்கத்திற்கு ஒப்பான மானத்தை விற்றுப் பாழும் வயிறு வளர்க்கும் ஈனத் தொழிலைப் பெருமையாகச் செய்து

பிழைக்கும்படியாகிவிட்டது" என்று கூறும்போது, ஒயிலாம்பாள் ஆவேசத்துடன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து, ஓகோ! நீங்கள் சொல்லிக் கொடுக்கும் அழகு இந்தப் பாடந்தானு? பேஷ்!

ஏண்டீ நிர்மலா! உன் புத்தி எண்டீ இப்படி பாழாகிவிட்டது? இந்தமாதிரி குலத்திற்குக் கோடரிக் காம்பாவதற்காகவா நீ பணத்தைக் கொட்டிப் படிக்கிருய்? இந்த ரகஸ்யம் தெரியாதிருப்பதற்காகத்தான் நீங்கள் உள்ளே ஒருவரும் வரக்கூடாது என்று சொல்லிவிட்டீர்களா? பேஷ்! வெகு அழகாய் இருக்கிறது. இனிமே இந்தமாதிரியான உபதேசங்கள் செய்து படிக்கவைக்க வேண்டாம். மரியாதையாக எழுந்துபோய் விடுங்கள்" என்று அந்த உபாத்தியாயினியை நோக்கிக் கடிந்து கூறினுள்.

நிர்மலா:—(எழுந்து ஓடிவந்து தன் தாயின் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சும் முறையில்) அம்மா! போதும். போதும். இதம் மதம் தெரியாமல் பேசாதே! மரியாதை தப்பிப் பேசிவிடும் வார்த்தைதான் என்றும் நிற்கும். காலம் மாறிவிடும். அந்த அம்மாள்மீது ஏன் சீறி விழுகிருய்? வியாதியஸ்தனின் வியாதியை அறிந்து, வைத்தியன் மருந்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிருன். அதேபோல் மாணுக்கரின் மனப்போக்கை யறிந்து, உபாத்தியாயர் கல்வி போதிப்பது சகஜந்தானே! அதேபோல் நான் விரும்புவதை அவர்கள் உபதேசிக்கின்ருர்களேயன்றி, அவர்கள்மீது ஒரு குற்றமும் இல்லை.

ஒயிலாம்பாள்:—என்ன! என்ன! நீ விரும்புவதா? நீ உன் குலத்தையாடீ இழிவுபடுத்த விரும்புகிருய்? நீ உன் குலதர்மத்தையாடீ திட்டுகிருய்?

நிர்மலா:—ஆமாம்! ஒரு முறையில்லை. ஒரு லக்ஷம் முறை சொல்ல வேண்டுமாயினும் சொல்லுவேன். இந்தப் பாழாப்போன குலத்தில் ஏன் பிறந்தேன் என்று இரவு பகல் வேதனைப்பட்டுச் சாகிறேன். குலதர்மமாம் தர்மம்! ஐயோ! வெட்கக்கேடே! கூசாமல் சொல்லவும் துணிகிறீர்களே? இந்தக் குலம் இப்படியே வேரோடு எரிந்து அழிந்து நாசமாய்ப் போய்விட்டால் நான் சந்தோஷ

மாகப் பார்ப்பேன். என் வயிறும் மனமும் நிம்மதியடையும். ஊம்.....அம்மணீ! இன்று இம்மட்டுடன் போதும். நீங்கள் நாளைய தினம் இன்னும் சீக்கிரமாகவே வந்து விடுங்கள். நிறைய பாடம் படிக்கலாம்" என்று வணக்கமாயும் மரியாதையாயும் சொன்னாள்.

வாத்தியாரம்மாளின் இதயத்தில் நிர்மலாவின் நிர்மலமான குணத்தின் அழகு பிரகாசித்துச் சந்தோஷமுண்டாயிற்றேயன்றி, அறிவிலியாகிய ஒயிலாம்பாளின் பேச்சு பாதிக்கவில்லை. இத்தகைய சேற்றில் எப்படியோ ஒரு செந்தாமரை மலர் பூத்ததே என்ற வியப்புடன் எழுந்தாள்.

ஒயிலா :—அம்மா! இந்தக் கழுதை கடக்கிறது. இனிமே அவளுக்குப் படிப்பும் வேண்டாம், பாழாப்போனதும் வேண்டாம். நாளைமுதல் நீங்கள் இங்கு வரவேண்டாம். என் வார்த்தையை மீறி வந்தால், பிறகு கஷ்டமாய் விடும். ஜாக்கிரதை; போங்கள்.

நிர்மலா சற்று முறைத்த பார்வையுடன் தாயாரை நோக்கினாள். பிறகு அந்தம்மாளை நோக்கி, "அம்மணீ! நீங்கள் வரா விட்டால், நான் அங்கு வருவது தடைபடாது. இவள் பேச்சைக் கேட்க வேண்டாம். நீங்கள் போய் வாருங்கள்" என்று கூறி, தானே அவளுடன் நடந்து வாசற்படிவரையில் சென்று வழியனுப்பிவிட்டு வந்து, தன் ஆசனத்தில் அமர்ந்தாள். அவள் முகத்தில் கோபமும் துக்கமும் கலந்து ஜ்வலிக்கின்றது. அவள், தன் தாயைப் பார்க்கவே இல்லை.

அதேசமயம் நிர்மலாவின் மாமன் மகள் ஜீவரத்னம் அபரிமிதமான அலங்காரத்துடன் அங்கு தோன்றி, "அத்தே! நான் தயாராகி விட்டேன். இன்னும் நிர்மலா தலை கூட வாரிக்கொள்ளவில்லையே! நாழியாகி விட்டதே! கோயில் மணி அப்போதே அடித்துவிட்டார்களே!" என்று குலுக்கிப் பிலுக்கிக் கண்களைச் சிமிட்டியவாறு கூறினாள்.

ஒயிலா :—ஜீவா! நீ போ; நான் வரேன். ஏண்டீ நிர்மலா! மூன்று நாட்களாக நான் சொல்கிறேன், நீ பேசாமலிருக்கிறாயே? மணியாகிவிட்டது. கோயிலுக்குக் கிளம்படீ! இன்று மதனசுந்தரியினுடைய நாட்டிய முறையல்லவா? அவளும் உன்னைப்

போன்ற சிறுமிதானே. எத்தனை அருமையாய் நாட்டியங் கற்றுக்கொண்டு கோயிலில் தன் முறை வேலையைச் செய்கிருள். மூதேவிபோல் நீ மட்டும் இம்மாதிரி ஏன் கிடக்கிருய்? அதை வந்து கண்ணுல் பார்த்த பிறகாவது உனக்குப் புத்தி வரட்டும்; எழுந்து வாடீ!

நிர்மலா :—போதும்! போதும். நம்ப பிழைப்பே ஒரு நாட்டியமாயிருக்கிறது. இன்னும் நாட்டியம் வேறு பார்க்கவேண்டுமா? உயர்தரமான பரத நாட்டிய சாஸ்திரத்தின் மகிமையும் சிறப்பும் ஒருபுறமிருக்க அதன் மேன்மையறியாது அதையும் பாழ்படுத்தி, நீங்களும் பாழாகிறீர்கள். கோயில் முறைப்படி கைங்கர்யம் செய்வதற்காகவா உங்கள் மதனசுந்தரி வருகிருள். இல்லை! இல்லை!! கொஞ்சமும் இல்லை!!! புனிதமான பெருமான் சன்னிதானத்தை அபரிசுத்தமாக்கிப் பாப வலையை வீசிப் பாமரமக்களின் மனத்தைக் கலக்கிப் பாதகத்திலீடுபடச் செய்து, அவர்களின் குடியைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்க வல்லவோ செல்கிறீர்கள்?

பகவான் கோயிலில் மட்டுந்தான் இருக்கிருர் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. பிரஹ்லாதாழ்வார் சொல்லியதுபோல் தூணிலும் துரும்பிலும் எங்கும் நிறைந்திருக்கிறன் என்னப்பன் என்பதுதான் எனது நம்பிக்கை; எனது ஸித்தாந்தம்; ஆகையால் நான் கோயிலுக்கு வர முடியாது என்று அப்போதே சொன்னேனல்லவா?

ஒயிலா :—என்னடீ! என்னை ஒரு மனுஷி என்று நினைத்தாயா? மிருகமென்று எண்ணினுயா? நம்மைப்போன்ற முறைக்காரர்கள் எல்லாம் எத்தனையோ கம்பீரமாக முறைகளைச் செய்து மானியங்களைப்பெற்று வருகிருர்கள். எனக்கு வயதாகிய பிறகு கோயில் முறையே சரியாகக் கவனிக்கமுடியாது போய்விட்டது. முன்னே பிறந்தவையெல்லாம் செத்துத் தொலையவேண்டுமா? உன்னைக் கொண்டு உலகாள எண்ணி, உனக்குப் பின் பிறந்தவளையும் நம் ஜாதி ஆசாரப்படிக்குக் கல்யாணம் செய்தாகிவிட்டது. உனக்கோ வயது மட்டாக ஆகவில்லை. நமது ஆசாரப்படிக்குப் பொட்டு கட்டிக் கோயிலுக்கு முத்திரை போட்டு விடாவிட்டால், மானியத்தை ரத்து செய்துவிடுவதாக தர்மகர்த்தா பயமுறுத்துகிருர்.

முன்பொரு சமயம், நீ உயிருடன் தக்கினுல் போதும் என்ற ஆவலால் உனக்குக் கோயிலில் முத்திரை போடவே நான் பிரார்த்தனை சொல்லிக்கொண்டு விட்டேன். தினம் கனவில் உனக்கு ஏன் இன்னும் முத்திரை போடவில்லை என்று யாரோ மிரட்டுவது போலிருக்கிறது. பயம் பயமாக அடித்துக் கொள்கிறது. நீ கோயிலுக்கு வந்து நாலு பெயர்களையாவது பார்த்துக் கற்றுக்கோடீ! எழுந்து வரப்போருயா? இல்லையா? கோயில் மரியாதையும், மான்யமும் போய்விட்டால், நம்மை நம் ஜாதியினர் மதிப்பார்களாடீ? ஏன் இது உனக்குத் தெரியவில்லை.

நிர்மலா :—அம்மா! எனக்கு எல்லாம் தெரியும். மானங்கெட்ட பிழைப்புக்குப் பத்தைகட்டிப் பேசும் உன் ஜாதியினர் நம்மை மதிக்காவிட்டால், மோக்ஷ வாயிலிலிருந்து உன்னைக் கீழே தள்ளிவிட மாட்டார்கள். என்னப்பன் கருணாமூர்த்தியின் மதிப்பும் கடைக்கண் பார்வையும் இருந்தால் போதும்! அது விலகாதிருக்கும்படியான காரியத்தைச் செய்தால், நீ எதிர்பார்க்கும் அல்ப ஆசையைவிட பதினாயிரம் மடங்கு சுகம் நமக்குக் கிடைக்கும். கோயிலில் கைங்கர்யமா செய்ய வருகிறுர்கள். கண்வலையை வீசிப் பலரைப் பாழ்படுத்த வருகிறுர்கள். குலுக்கிப் பிலுக்கி மயக்கி மக்களின் பரிசுத்த இதயத்தில் கொடிய விஷத்தை யூட்டி, அவர்கள் குடும்பத்தில் பூகம்பத்தை உண்டாக்க வருகிறுர்கள். முறை முறை என்ற வியாஜ்யத்தைக் கொண்டு பிழைப்புக்கு வழி தேடவரும் கேவலத்தை இல்லை என்று சொல்லுவாயா? அம்மா! நீ தைரியமாகச் சொல்வாயா?

ஓயிலா :—ஐயோ விதியே! எங்கோ ஒருத்தி அப்படி இருக்கலாம். மதனுள் அப்படியல்லடீ; அல்ல, வந்துதான் பாரேன்.

நிர்மலா :—ஆம். உன் கண்ணுக்கு எல்லாம் நேர்மாருகத்தான் தெரியும். உனக்கு அந்த அக்கிரமத்தைக் காட்டும் பொருட்டாவது வருகிறேன். உன் பிரியப்படி நான் அலங்காரம் செய்து கொள்ள மாட்டேன். உம். கிளம்பு—என்று முடுக்காக எழுந்தாள்.

ஓயிலா :—ஐயையோ! பகவானே உனக்கு இத்தகைய பேரெழிலைக் கொடுத்திருந்தும் நீ இப்படி தலையும் வேஷமுமாக

இருக்கிறுயே! முகத்தை மட்டுமாவது கழுவி பொட்டிட்டுத் தலை சீவி பின்னிக்கொண்டு வேறு சேலையாவது கட்டிக்கொண்டு வாடீ! என்ருள்.

நிர்மலா முடுக்காக உள்ளே சென்று பொட்டிட்டுக்கொண்டு சாதாரண அலங்காரத்துடன் வந்தாள். ஏற்கெனவே தயாராக விருந்த ஜீவாவும் அவளைப் போஷிக்கும் மைனர் பிரபுவும் காரில் உட்கார்ந்திருந்தார்கள். நிர்மலாவுக்கு அந்த வண்டியில் ஏற இஷ்ட மில்லை. எனினும் தீராத எழவாய் உட்கார்ந்தாள். காரும் வேக மாகக் கோயிலையடைந்தது.

நாம் முன்பு தெரிவித்ததுபோல், அன்று நாட்டிய உத்ஸவ மாகையினுல் கூட்டம் எள்ளுப் போட்டால் எள்ளு விழாது. அத் தனை கும்பலில் மெல்ல நெருக்கி நெருக்கி ஒயிலாம்பாள் வழி செய்துகொண்டு உள்ளேபோக நினைத்தாள். ஆனுல், நிர்மலா அந்தக் கூட்டத்தில் இடிபட மறுத்துவிட்டு; எதிரிலிருக்கும் மண்டபத் தின்மீது நின்று பார்த்தால் தெரியும். அது போதும் என்று அங்கு போய் பெண்கள் நிற்கும் பந்தியில் நின்றுவிட்டாள். அதற்குமேல் தடுக்கமாட்டாது முணு முணுவென்று திட்டிய படியே ஒயிலாம்பாளும் கூடவந்து நின்ருள். நாட்டியம் வெகு அற் புதமாக நடக்கிறது. "விக்ரேதுகாமா கில கோபகன்யா முராரி பாதார்பித சித்த வ்ருத்தி:" என்ற கர்ணும்ருத ச்லோகத்தைப் பாடிய பிறகு ஒரு பதம் பாடி அபிநயம் செய்தாள்.

அங்கு கூடியுள்ள மைனர்களின் கூட்டத்தில் ஏற்பட்ட பர பரப்பைக் கூறத் திறமே இல்லை. அந்த நாட்டியமாது அபிநயிக்கும் செய்கைகள் முற்றும் தங்களை நோக்கித்தான் செய்வதாக எண்ணி விட்டார்கள். அவளும் இவர்களின் மனத்துடிப்பை யறிந்து மயக்கிப் பொருள் பறிக்கும் வகையிலேயே அவர்களை நோக்கிய படி நாட்டியம் ஆடினுள்.

அந்த யுவர்கள் கூட்டத்தில் ஜேபியிலிருந்த பர்ஸைச் சிலர் காலி செய்தார்கள். சிலர் மோதிரங்கள் ரிஸ்ட்வாட்ச்கள்; சங்கிலி கள், தங்கம், வைரம் பதித்த பித்தான்கள் எல்லாம் பறந்து அவள் அபிநயம் செய்யும் கரத்தில் ஸ்வீகாரமாய் அடைக்கலம் புகுந்தன.

அவர்கள் செய்யும் ஆரவாரமும் கரகோஷமும் அண்டத்தையளாவின. அந்த மாயக் கள்ளி நாட்டியம் செய்தவாறே பொருளை எல்லாம் வாங்கி வாங்கி மலை விழுங்கி மகாதேவனுக்கொப்பாக நிற்கும் தன் தாயாரிடம் கொடுத்துக்கொண்டே வந்தாள். அவள் சந்தோஷத்துடன் அவைகளைக் கபளீகரம் செய்துகொண்டே இன்னும் எங்கு யார் யார் கொடுப்பார்கள் என்ற முறையில் அவளது குழி விழுந்த கண்கள் தேடியலைந்தன.



இந்தச் செய்கையைக் கண்டு மனங்கசந்து முற்றிலும் வெறுப்புற்ற நிர்மலா முகத்தைச் சுளித்தபடியே "அம்மா! பார்த்தாயா, முறை? பகவானுக்குக் கைங்கர்யம். ஐயோ வெட்கக் கேடே

இது சாதாரணக் கொள்ளையல்ல. வழிபறிக்கொள்ளை. மக்களை மயக்கவைத்துப் பகிரங்கமாகக் கொள்ளையடிப்பது. இதற்காகத் தானே நீ இத்தனை தூரம் பரிந்து பேசுகிறாய். மானங்கெட்ட பிழைப்புப் பிழைப்பதைவிட சாகலாமே!" என்று கடுமையாகக் கூறினள்.

ஒயிலா :—(கோபம் கண்களில் ஜ்வலிக்க) எண்டீ! மூளையே இல்லாமெ பேசரே! இந்த அழகான நாட்டியமும் பாட்டும் அவள் அழகும் பகவானுக்குத்தானே அர்ப்பணம். இந்த மதிகெட்ட மைனர்கள் கொடுத்தால், அது அவள் தப்பா! அவளுக்குப் பக வானே கொடுப்பதாக எண்ணி வாங்கிக்கொள்கிருள். அந்தக் காலத்தில் இதே கோயிலில் இதே நாட்டியத் திருநாளில் நான் நாட்டியமாடியபோது பார்க்கணும்! பொற்குவியலல்லவோடீ என் னைத்தாவி வரும். இது என்ன ஒரு வரும்படியா? உன் அழகுக்கும் பாட்டுக்கும் நீ இப்படி முறை கைங்கர்யம் செய்ய வந்தால், எத்தனை குவியல் குவியும் தெரியுமா?

நிர்ம :—ஐயோ! வெட்கக்கேடே, கோயிலில் வந்தும் இதே பேச்சா! நான் போகிறேன் வீட்டிற்கு. எனக்குப் பிடிக்கவில்லை— என்று கூறிக்கொண்டே கிளம்பினள்.

அப்போது எதிரில் வந்து இவளைச் சந்தித்த ஒரு பெண் நிர் மலாவைப் பார்த்ததும், "என்ன நிர்மலா! நீ கூட கோயிலுக்கு வந்து விட்டாய்? இனிமே முத்திரை போட்டு விட்டால் நீயும் இப்படித்தானே ஆடவேண்டுமென்று பார்க்கவந்தாயா! எவ்வளவு பணமும் பொருளும் வந்து விட்டது பார்த்தாயா? அவள் ஆட்டத் திற்கே இத்தனை என்ருல், உன் ஆட்டத்தில் பெரிய குபேரனுகி விடலாம்" என்ருள்.

நிர்ம :—அலமூ! நீ என் க்ளாஸ் மேட்டாயிற்றே என்று பேசாமலிருக்கிறேன். இல்லாவிட்டால் ஒரு அறைகூட விட் டிருப்பேன். நான் தாசி குலத்தில் பிறந்ததனுலேயே நானும் இப்ப டியே இருப்பேன் என்ரு நீ நினைக்கிருய்! இத்தனை நாள் என் னேடு பழகியதில் உனக்குத் தெரியவில்லையா? அப்படி நினைக் காதே! நான் வருகிறேன்....இனிமேல் அப்படிப் பேசாதே!.... அம்மா வந்திருக்கிருர்களா?

அலமு :—என்ன நிர்மலா! இத்தனை கோவம் வந்து விட்டது. உனக்கு முத்திரைபோட ஒங்கம்மா எல்லா ஏற்பாடும் செய்து வருவதால், நான் கேட்டேனேயொழிய உன்னை வருத்தவேண்டுமென்று நான் கேட்கவில்லை. கோபிக்காதே! அம்மாவுக்கு ரெண்டு நாட்களாக ஜுரம். அதற்காகக் கோவிலில் விளக்கேற்றிப் பிரதக்ஷணம் அர்ச்சனை செய்துகொண்டு போகலாம்னு அண்ணுவும் நானும் வந்தோம். அண்ணு அதோ நிற்கிறுன். நான் போகிறேன். கோபிக்காதே நிர்மலா!—என்ருள்.

அதற்குள் அங்கு வந்த ஒரு கிழவர் அலமுவை முறைத்துப் பார்த்து, "சே! போடீ அப்புறம். கோயிலில் வந்து பகிரங்கமாகத் தேவடியாள் பெண்ணோடு குலாவுகிருள். இதை யாராவது பார்த்தால், கையைக் கொட்டிச் சிரிப்பார்கள். உன்னை யாருமே கட்டிக் கொள்ளமாட்டார்கள்" என்று நிர்மலாவின் காதில் படும்படி கூறினர்.

இதைக்கேட்ட நிர்மலாவின் உயிர் துடித்தது. இதயம் வெடித்துவிடும் போலாகி விட்டது. "ஐயோ! பாழும் பிறவியே! இந்த ஜாதியில் பிறந்ததாலன்ருே என்னோடு பிறர் பேசுவதையும் விஷமென வெறுக்கிருர்கள். ஏ முரளீதரா! என்னையேன் இப் பாழுங் குலத்தில் பிறப்பித்தாய்? அன்றே என்னைக் கொன்றுவிடலாகாதா! ஐயோ! அவமானமே!" என்று மனம் உடைந்து விட்டதால் சன்னதிக்குள்ளே செல்லவும் பிடிக்காமல் அலமுவை நோக்கினள்.

அலமு, தன் அண்ணனுக்குத் தன்னைச் சுட்டிக்காட்டியபடியே பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டு தன்னை இழிவாகத்தான் எண்ணி பேசுகிருளோ என்று எண்ணித் துக்கித்தபடியே விர்ரென்று வீட்டை நோக்கி கிளம்பி விட்டாள்.

ஒயிலாம்பாள் நாட்டியம் பார்க்கும் ஜோரில் இருந்ததால், நிர்மலா சென்றது தெரியாமல் போய்விட்டது. அங்கு தூரத்தில் நின்ற ஒரு மைனரைக் கண்ஜாடை செய்து அழைத்து, 'என்னங்க. நிர்மலாவைப் பார்க்கவேணும், பார்க்கவேணும் என்று பதினுயிரம் தரம் சொன்னீர்களே! இதோ உங்களுக்காகவே இங்கு

அழைத்து வந்தேன்' என்று கூறிக்கொண்டே அவனைப் பார்த்தபடி கையை மட்டும் பக்கத்தில் விட்டு ஒரு கையைப் பிடித்து இழுத்து, 'நிர்மலா! இவர் தாண்டீ நான் சொன்னவர்' என்றாள்.

ஜனக் கூட்டத்து மத்தியில் விலக்கிக் கொண்டு பகவானைச் சேவிக்க வந்த ஒரு செவிட்டுக் கிழவியின் கையைப் பிடித்து நிற்க வைத்ததால், கிழவியும் தனக்கு வழி விடுவதாக எண்ணினாள். மைனர் பார்த்ததும் முகம் சுளித்தது. அதை யறிந்து ஒயிலாம்பாள் திரும்பிப் பார்த்தால், கிழவி நிற்கிறாள். நிர்மலாவைக் காணாமையால் திடுக்கிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தாள். எங்குமில்லை. "ஐயா! வீட்டுக்கு வாங்கோ பேசலாம்" என்று கூறிவிட்டுப் பதைபதைத்த மனத்துடன் 'நிர்மலா! நிர்மலா!' என்று கூவிக்கொண்டே கோயிலில் தேடவாரம்பித்தாள்.

## 2

சுரேந்திரனைப்போன்ற புத்திசாலியும் தயாள குணம் நிறைந்த சுத்த வீரனும் யாருமே இல்லை என்று கூறலாம். அவன் அதிகப் பணக்காரனில்லை. சாதாரணக் குடும்பத்தில் பசிக்காது புசிக்கும் சுகவாழ்வு படைத்தவன். அவனுடைய தகப்பனாருக்குப் பில் கலெக்டர் உத்தியோகம்; மாதம் 50 ரூபாய் சம்பளம். சுரேந்திரனுக்கு அதிகமான படிப்பு இல்லையெனினும் பத்தாவது வகுப்புத் தேறியவன். அறிவுவளர்ச்சிக்கு வேண்டிய கல்வியறிவு பெற்றவன். நல்ல கட்டுமஸ்தான தேகக்கட்டும் அபாரமான எழிலும் முகத்தில் ஒருவித வசீகரத்தன்மையும் பெற்றவன். பல பெரிய பிரமுகர்களின் சிபார்சின்பேரில் ஜெமீன்தாரின் காரியதரிசி உத்தியோகம் கிடைத்தது.

அவனோடுகூடப் படித்த பங்காரு என்பவனிடமும் அன்றுபோல இன்றளவும் வாஞ்சையுடன் இருப்பதில்அவன்மாறியதில்லை,

தாயாருக்கு உடம்பு குணமாக வேண்டுமே என்ற கவலையால், அவன் கோயிலுக்குச் சென்று பகவானை தினம் வேண்டிவந்தான்.

அன்று அவனுக்கிருந்த மனவேதனையில் நாட்டியத்தைப் பார்க்கவும் மனம் பிடிக்கவில்லை. ஆதலால், தூரவிருந்து பார்த்து விட்டுத் தன் சகோதரியுடன் போய்விட்டான்.

அவனுடைய ஆப்த நண்பன் ஓட்டமாக ஓடிவந்து பேப்பர் படித்துக்கொண்டிருந்த சுரேந்திரனின் காலில் விழுந்து, கண்ணீர் பெருக, 'சுரேந்திரா! சுரேந்திரா! ஆபத்து! ஆபத்து! என்னை இச்சமயம் கடவுளும் கைவிட்டார். என் நிலைமை மிகவும் கேவல மாயிருக்கிறது. என் மானத்தை....இல்லை....இல்லை....என் பிரா ணத்தைக் காப்பாற்ற நீதான் உதவிபுரிய வேண்டும். நண்பா! நன்ருகச் சீரும் சிறப்புமாக வாழ்ந்த நான் இன்று ஊர் சிரிக்கும் படியும் உற்ருர் ஏசும்படியும் ஆய்விட்டேன்.

என் மனைவி படுத்த படுக்கையாய்ப் பிரக்ஞை இல்லாது கிடக் கிருள். என்போதாக்காலத்தினுல், நான் ஒரு மார்வாடியிடம்வாங்கி விட்டக் கடன் மலைபோல் பெருகிவிட்டதால், அதை அடைக்க வழியின்றித் தவிப்பதை யறிந்து, அவன் இந்த ஆபத்தான சமயத் தில் வாரண்டில் பிடிப்பதாகப் பயமுறுத்துகிருன். எனக்கு மீளும் வழியே இல்லை. என் மனைவியின் உயிர் இப்போதோ இன்னும் சற்றுக் கழித்தோ என்ற நிலைமையிலிருக்கிறது. இந்த வாரண்டு விஷயத்தை யறிந்தால், அவளுக்கு உடனே பிராணன் போய் விடும். நீதான் இச்சமயம் என்னைக் காப்பாற்றவேண்டும். 'சுரேந் திரா! சுரேந்திரா! என்னைக் கைவிடாதே! கைவிடாதே!' என்று மூச்சுத்திணற கூறிப் புலம்பினுன்.

இதுகண்ட சுரேந்திரனின் மனம் இளகியது. அவன் பங் காருவைத் தேற்றித் தூக்கி உட்காரவைத்து, 'பங்காரு! நீ என்நிலை மையை அறியாதவனல்லவே. எங்கள் குடும்பமும் ஏழைக் குடும் பத்தைச் சேர்ந்ததுதானே. என் பிதாவின் சொல்ப சம்பளமும் எனது சொல்ப வருமானமும்தான் எங்கள் குடும்பத்திற்கு ஆதா ரம். வேறு ஒத்தை பைசாகூட வருமானம் இல்லை என்பது உனக் குத் தெரியும்? நான் எவ்விதம் இப்போது உனக்குச் சகாயம்

செய்ய முடியும். நண்பா! உன்னைப் பார்த்தால் பரிதாபமாக விருக்கிறதே!....'என்று விசனத்துடன் கூறினன்.

பங்காரு :—நண்பா! நீயுமா இப்படிச் சொல்லிவிடுவது? எனக்கு மானம் போனல் உனக்கது பாதிக்காதா? அதிகமில்லை. 500 ரூபாய்தான் வேண்டும். அடுத்தாற்போல் எனது மனைவிக்கு உடம்பு குணமாகியதும் அவளுடைய மஞ்சக்காணியை விற்று வட்டியோடு கொடுத்துவிடுகிறேன்; அல்லது வேறு யாரிடமா வது கடன் வாங்கிக் கொடுத்துவிடுகிறேன். நண்பா! நீ மனம் வைத்தால் நடக்காத காரியமில்லை—என்று கெஞ்சிக்கேட்டான்.

சுரே :—ஐயோ! வெறுங் கையை எப்படி முழம் போடுவேன்? எனக்கு யார் இப்போது கடன் கொடுக்க முன் வருவார்கள். என் எஜமானர் ஜமீன்தாரிடம் கடன் கேட்பது மரியாதை இல்லை. அதோடு அவருடைய மைத்துனர் என் சகோதரியின் அழகி வீடு பட்டு, நாங்கள் ஏழையானலும் பாதகமில்லை என்று அவளை விவா கம் செய்துகொள்ளப் போவதாக ரகசியச் செய்தி எட்டியிருக் கிறது. இந்நிலைமையில் அவரிடம் பணம் கேட்பதும் அசம்பாவித மாகும். நான் என்ன செய்வேன். வேண்டுமானல் அந்த மார் வாடியிடம் வந்து கொஞ்சநாள் பொறுக்கும்படி சிபார்சு செய்து பார்க்கிறேன். வா அவனிடம் போவோம்.

பங்காரு :—சுரேந்திரா! அந்த இரக்கமில்லாத கொடிய சித்தமுடைய பாதகனிடம் நான் கெஞ்சாததும் கெஞ்சிக் காலி லும் விழுந்தேன். அவன் சற்றும் தாக்ஷிண்யமின்றி முடியாது என்று கூறி ஹடம் செய்கிறன். பாதிப்பணமாவது முதலில் வைத்தால் வாரண்டை ரத்து செய்ய யோசிப்பதாகச் சொல்லு கிறன். அதனல்தான் 500 ரூபாய் கேட்டேன். என்னைக் காப் பாற்ற வேறு வழி இல்லையா? சுரேந்திரா!—என்று கண்ணீர் ஆருய்ப் பெருக பரிதாபமாகக் கேட்டான்.

சுரேந்திரநாத்தின் மனம் மிகவும் இளகியது. பரிதாபத் தையோ கஷ்டத்தையோ கண்டு சகிக்காத அத்தனை கருணை நிறைந்தது அவன் மனம். அவன் கண் முன்பு காணும் நண்பனின் கண்ருவியால் அவன் மூளை பலமாக வேலை செய்ய வாரம்பித்தது.

பலவிதமான யோசனையுடன் பல மைல் தூரங்களுக்குச் சென்று சஞ்சரித்தது. "ஐயோ பாவம்! இத்தகைய ஆபத்தில் காக்காவிட்டால் அவனை மார்வாடி கைதியாக்கி விடுவான். இதே ஷாக்கில் அவன் மனைவியின் உயிர் நீங்கிவிடும். அவள் உயிர் நீங்கியதைக் கேட்டதும் நண்பனின் ஆவியும் பறந்துவிடும். இவ்விரு உயிர்களும் மாய்ந்தால், ஒரு குடும்பமே அழிந்துபோய் விடுமல்லவா? எந்த விதமாக நாம் இதைச் சமாளிக்க முடியும்?" என்று யோசனை செய்தான்.

பிறகு ஒருவாறு ஏதோ சமாதானம் செய்து கொண்டு, "நண்பா! கடவுள் விட்டவழியாகிறது. மார்வாடியைப் பார்க்கலாம் வா. அவன் இப்போது எங்கிருக்கிறான்?" என்றான். "சுரேந்திரா! என்வீட்டில்தான் பழிகாரனாய் அவன் உட்கார்ந்திருக்கிறான். வா போகலாம்" என்றான் பங்காரு. சுரேந்திரன் கம்பீரமாக ஒரு உத்தரியத்தை மேலே எடுத்துப் போட்டுக்கொண்டு, நண்பனோடு கூடச் சென்றான்.

## 3

'அத்தே! என் ஏதோவொரு மாதிரியாக விருக்கிறாய்? உடம்புக்கென்ன? நிர்மலா எங்கே?' என்று நிர்மலாவின் மாமன்மகன் மணி கேட்டான். அது கேட்ட ஒயிலாம்பாள், "உடம்புக் கென்னடா கேடு வந்திருக்கிறது. ஒரு ஆபத்தும் இல்லை. அந்தப் பாழும் பெண் நிர்மலாவின் உபத்திரவந்தான் சகிக்க முடியவில்லை. நேத்து பிரம்மப் பிரயத்தனம் செய்து அவளைக் கோயிலுக்கு இழுத்துக்கொண்டு போனேன். போயும் பலனென்ன; ஒன்றுமில்லை. மைனரை நீ அங்கு வரச் சொல்லி இருந்தாயல்லவா! அவருக்கு அவளை அழைத்துக் காட்டுவதற்குள் அந்தச் சிறுக்கி சொல்லாமல் விட்டிற்கு வந்துவிட்டாள். அதை யறியாது நான் அங்கு அவமானப்பட்டேன்.

வயசு என்ன கொஞ்சமா ஆயிற்று? 20 வயதை விழுங்கிவிட்டு, நம் ஜாதிப்படிக்குக் கோயிலுக்கு முத்திரை போடாமல்

வைத்திருந்தால் அது பிறர் கண்டு சிரிக்கும்படியாக விருக்கிறது. கோகிலாவுக்கு அடுத்த வெள்ளிக்கிழமை முத்திரை போடப் போகிறார்களாம். ஜோதிபுரத்து மைனர்தான் முகூர்த்தம் செய்ய ஏற்பாடாகிவிட்டதாம். 50 ஆயிரம் ரூபாய்க்கு நகைகள், வீடு முதலியன இப்போதே கையில் கொடுத்து விட்டானும். அவர் களுக் கிருக்கும் பெருமையும் கர்வமும் சொல்ல முடியாது. இன் னும் நிர்மலாவுக்கு முத்திரை போடவில்லையே என்று ஒரு மாதிரி யாகப் பரிகாசம் செய்து பேசிவிட்டுப் போகிறாள். என்ன செய்வேன்?

கோயில் மானியமும் மரியாதையும் போய்விட்டால், நம்மை யார் லக்ஷியம் செய்வார்கள்? ஜாதி முறைமையைச் செய்வதற்கும் ஒப்புக் கொள்ளாது பிடிவாதம் செய்தால் எப்படி முடியும்? என்னால் சகிக்கவே முடியவில்லை" என்று முணு முணுத்தாள்.

மணி:—அத்தே! "மயிலே! மயிலே! இறகு போடு" என்றால் போடுமா! அதைப் பிடித்துத்தான் இறகை எடுக்க வேண்டும். நிர்மலாவுக்கு வரவர புத்தியே இல்லெ. படிப்பாம் படிப்பு; படித்துவிட்டுக் கூத்தடிக்கிறாள். எங்கெந்த ஜாதிக்கு எதெது வழக்கமோ அதைச் செய்ய வேண்டாமென்று படிப்பு முறை யிடு கிறதா என்ன? பிண்டத்திற்கு வழி இல்லாது திண்டாடும் கதி வந்து விட்டால் அப்போது தெரியும். அத்தெ! கோயிலதிகாரிகள் நம் விஷயத்தில் கடுமையாயிருக்கிறார்கள். மிராசும் போய் விடும். ஏதோ இத்தனைநாள் உனக்காகப் பொறுத்திருந்தார்கள். இனிமேல் கைங்கர்யமில்லாது மானியம் கொடுக்க மாட்டார் களாம். ஆகையால் உடனே ஏற்பாடு செய்யாவிட்டால், ஒன் மரியாதையும் மிராசும் போய்விடும். நீ எந்தப் பாடாவது பட்டு அவளைச் சரிப்படுத்திவிடு. நான் சொல்லிய மைனர் என்னவோ காத்துக்கொண்டு கிடக்கிறான். கோயில் காரியம் முடிந்ததும் உடனே மற்றதையும் முடித்துவிடலாம்.

அத்தே! நீ ஒரே பிடிவாதமாக அவளிடம் சாகஸம் செய். அவள் முத்திரை போட்டுக்கொள்ள ஒப்பாவிடில் பிராணனை விட்டு விடுவதாகப் பயமுறுத்து. அதன்பிறகு படிந்துவிடுவாள். அதுவும்

இல்லையென்றால் பிறகு பார்ப்போம். அந்த வாத்தியாரம்மாள் தான் இப்படி எல்லாம் ஜாதி வித்தியாசத்தையும் விலைமகள், குல மகள் என்ற வேற்றுமையையும் போதித்து நிர்மலாவைக் கெடுக்கிருள். ஆகையால், அவளை இனிமேல் படிப்புக் கற்றுக்கொடுக்க வராதபடி தடுத்துவிடு.

இன்னெரு வாத்தியாரம்மாள் இருக்கிருள். அவள் தாசிக் குலத்தில் பிறக்கவில்லையேயன்றி, அசல் தாசிகளைவிட கேவலமாயிருக்கிருள். அவளை நான் ஏற்பாடு செய்துவிடுகிறேன். அவள் சரியானபடி இவளைத் திருப்பிவிடுவாள். இதை முதலில் செய்தால், பிறகு பார்த்துக் கொள்ளுவோம். அதோ பாரு. அந்த வாத்தியாரம்மாள் வருகிருள். அவளை இப்படியே அனுப்பிவிடு—என்று கூறிவிட்டு உள்ளே போய்விட்டான்.

எலியைப் பிடிக்கக் காத்திருக்கும் பூனையைப்போல் ஒயிலாம்பாள் உட்கார்ந்திருந்தாள். மகா யோக்கியமும் உத்தம குணமும் நிறைந்த வாத்தியாரம்மாளைப் பார்க்கும்போதே ஒயிலாம்பாளுக்கு ஆத்திரம் பொங்கியது. வெற்றிலை பாக்கை மென்றபடியே "அம்மா! இனுமே நிர்மலாவுக்குப் படிப்பை நிறுத்திவிடப் போகிறேன். இம்மட்டும் படித்தது போதும். நீங்கள் இதுவரையிலான சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு நின்றுவிடலாம். குழந்தைக்குப் புத்தி விருத்தியாவதற்காக உங்களை வைத்ததுபோக குலத் துரோக புத்தியையும், தர்மத்தை மறுக்கும் துர்க்குணத்தையும் போதித்தது போதும். எங்கள் கவுரவமே பாழாகிறது. இந்தாருங்கள் ஒரு மாதத்திய ரூபாய்" என்று கூறிக்கொண்டே 10 ரூபாய் நோட்டை நீட்டினுள்.

அந்தம்மாள் சாந்தமே உருவாகிப் பேசாமல் இவைகளைக் கேட்டபின் ஒருவிதமாக நகைத்துக்கொண்டே "உம். நிர்மலா குல தர்மத்திற்குத் துரோகமா நினைக்கிருள். ஆமாம். குப்பையில் மாணிக்கம் கிடப்பதுபோல் நிர்மலா இந்தப் பாழும் விபசார குலத்தில் பிறந்து தவிக்கிருள் பாவம்! குல தர்மமாம் தர்மம். மானஹீனமற்று உடலை விலைக்கு விற்றுக் குடலை நிரப்பும் தர்மமும் ஒரு தர்மமா? இந்தத் தொழிலின் நீசத்துவத்தையறியாது

அக்கிரமத்திற்கு அவளையும் இழுப்பதுமன்றி, அவள் அறிவைப்பற்றி இழிவாகவும் பேசுகிறீர்களே! இதுதான் குல தர்மத்தின் மகிமை. உத்தமமான குணமிருக்கும் அறிவாளிகளையும் விபசாரத்திற்கு இழுக்கும் இதுவும் ஒரு குலமா! குப்பை. முற்றிலும் குப்பை...." என்று சற்று ஆத்திரத்துடன் கூறி முடிப்பதற்குள், ஒயிலாம்பாளுக்குக் கோபம் காட்டாற்று வெள்ளம்போல் வந்துவிட்டது.

"ஆகா! எங்கள் குலத்தைப் பழிக்க நீ யாரடி அவதாரம் செய்திருக்கிறாய். ஜாக்கிரதையாகப் பேசு. இல்லாவிட்டால் நாக்கைத் தோண்டி அறுத்துவிடுவேன். உயர்ந்த குலம் குலம் என்று கூறிக்கொண்டு நீங்கள் செய்யும் அக்கிரமத்தை விடவா தாசிக் குலம் கெட்டுப்போயிற்று. தாசிகளுக்குத்தான் பொழப்பே போய்விட்டதேடீ! தாசிகளின் நாட்டியம் முதல் சகலத்தையும் நீங்கள் ஸ்வீகரித்துக்கொண்ட பேமானிகள்; பேச்சு வேறெயா! மரியாதையாகப் போய்விடு" என்று கர்ஜித்தாள்.

"குடிகாரனைக் குடிகாரன் என்றாலும் திருடனைத் திருடன் என்றாலும் கோபம் வருவது சகஜந்தானே! நீ என்ன செய்வாய்? உன் ஊழல் புத்தி உன்னைப் புடம் வைத்தாலும் போகாது. உன்னைச் சொல்லிப் பயனென்ன? ஆனால், நீ தலைகீழாய் நின்றாலும் நிர்மலா நிர்மலமான பிம்பம் என்பது ஞாபகமிருக்கட்டும். இந்த மானங்கெட்ட பிழைப்பு—காறியுமிழுந்து கண்டோர் சிரிக்கும் பிழைப்பு—ஒருகாலத்தில் உன்னாலேயே வெறுக்கப்படும் நிலைமையைக் கடவுளே உனக்களிக்க வேண்டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன்.

ஒயிலாம்பாள்! உன்னுடைய இந்தத் திமிர்படைத்தத் தன்மையும், உளுத்துப்போன நீசக்கொள்கையையுடைய உன் குலத்தின் தர்மமும் இப்படியே சாச்வதமாக நிற்கும் என்று நினைத்து மனப்பால் குடிக்காதே! குடும்பத்துப் பெண்களின் ரத்தத்தை உறிஞ்சுவதற் கொப்பாக அவர்களின் கணவன்மார்களை உங்கள் வலையில் போட்டுக்கொண்டு, அவர்களின் வயிறெரியச்செய்து நீங்கள் சுகமாக வாழ்வது வீண் போகாது.

ஆனந்தகரமான குடும்பத்தின் ஒற்றுமையை அழிக்க ஏற்பட்ட விஷப்பூச்சிதான் உங்கள் குலம். அத்தகைய குலத்தை வேரறுக்

கும் காலம் உதயமாகிவிட்டது. பெரிய பெரிய சீமாட்டிகளும் சீமான்களும் கங்கணங் கட்டிக்கொண்டு காத்திருக்கிறார்கள். மனிதவர்க்கத்திற்கே ஓர் மாபெரும் மறலியாக உள்ள உங்கள் குல தர்மம் அழியும் முன்னர் நீயே கண்ணைத் திறந்து கொள்ளு. இந்தக் குப்பையில் பிறந்துவிட்டபோதிலும் குலமகளிர்க்கு மேலாக விருக்கும் மங்கையர் மாமணியின் மனத்தை நோகச் செய்யாதே....

என்று கூறுவதற்குள் ஒயிலாம்பாளின் ஆத்திரம் கரை புரண்டு விட்டது. "ஆஹ்ஹா! மாதம் பிறந்தால், பத்து ரூபாயைச் சொள சொளவென்று கொட்டிக்கொண்டு உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பதுபோல் எங்கள் குலத்தையா பழிக்கிறாய்? எங்கள் பணத்தினால் இது வரையில் வயிறு வளர்த்த உன்வயிற்றை அறுத்து விட்டாயா! உன் உடம்பை எரித்து விட்டாயா! உம். நட நட; இங்கு நிற்காதே. போய் விடு" என்று கூறிக்கொண்டே, மூலையிலிருந்த தடிக்கம்பை எடுக்கப் போனாள். அத்தடியில் இருந்த தேள் ஒயிலாம்பாளின் கைவிரலில் அழகாக முத்தமிட்டு விசாரித்துவிட்டது. "ஹா! தேள் கொட்டிவிட்டது. தேள் கொட்டி விட்டது" என்று கத்தினாள்.

இதைக்கண்ட வாத்தியாரம்மாள், "ஒயிலாம்பாள்! தர்மத்தைக் காக்க அந்தச் சிறிய துஷ்ட ஜந்துவும் துணை புரிகிறது பார்த்தாயா! இதிலிருந்தாவது உனக்குப் புத்தி வருமா?

பேயினிடத்தில் ஓர் பெண் மானை கடவுள் அகப்படச் செய்து விட்டார். அந்தப் பேதையை அக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று கூறிக்கொண்டே போய் விட்டாள். ஒயிலாம்பாளின் ஆத்திர நர்த்தனத்தில் இவளுக்காக ஜீவரத்தினம் அலங்கார சுந்தரவதனத்துடன் காப்பியை எடுத்துக்கொண்டு வருவதையும் பாராது ஆடிய ஆட்டத்தில் காப்பியைத் தட்டிவிட்டாள். அதே சமயம் ஜீவாவின் தரிசனத்திற்காக அங்கு வந்துள்ள பக்ததாஸன் ஒருவன் அப்போதே அவ்விடத்தில் வரவும் அந்தக் காபி அவன் மீது அபிஷேகமாகச் சரியாக விருந்தது.

அந்த மானங்கெட்ட மடையன் 'ஹீ! ஹீ!' என்று நகைத்துக் கொண்டே கைமேல் கொட்டிய காப்பியை நக்கியவாறு, "பேஷ்!

பேஷ்! எஸன்ஸ் காப்பி ; பலெ ஜோர் காப்பி ; நல்ல சகுனத்திற்கு அடையாளம் காப்பியே அபிஷேகமாயிற்று" என்று கூறிய பிறகே ஒயிலாம்பாளுக்கு பிரக்ஞை வந்தது. இந்தக் காட்சியை அப்போதே பார்த்த நிர்மலா வெறுப்பும் வேடிக்கையும் கலந்து கட கடவென்று நகைத்த படியே 'பேமானி! சாணியைக் கறைத்து ஊற்றி இருந்தாலும் சுத்தியாயிற்று என்று சொல்வானோ என்னவோ?' என்று முணு முணுத்ததைக்கேட்ட ஜீவாவும் அம்மனிதனும் திருகத்திருக விழித்தபடியே முறைத்துப்பார்த்தார்கள். 'ஐயோ! அம்மா! தேளு தேளு' என்று ஒயிலாம்பாள் விரலைப் பிடித்துக்கொண்டு கத்தின பிறகே 'ஐயோ! தேளா! எங்கே! எங்கே!' என்று வந்தவன் அலறிக் குதித்தவாறு எழுந்து ஓடினான். அதே தேள் அந்த மனிதனின் காலிலும் கொட்டி விட்டதால், லபோ திபோ என்று அவனும் அடித்துக்கொண்டு விழுந்தான். நிர்மலாவுக்குக் கோபமும் துக்கமும் தாங்கவில்லை. ஆனால், தேள்கொட்டியலையும் தாயின் பரிதாபத்தையும் கண்டு சகிக்க முடியாமல் ஓடி வந்து, தாயாரின் விரலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அந்த மனிதனை நோக்கி,

'ஏ! வேசிக் கள்வா! இன்னும் புத்தி வரவில்லையா? தாசியின் நேசம் இந்தத் தேள் கடியினும் கொடியது என்பதைக் காண்பிப்பதற்கே ஈசன் இம்மாதிரி சோதனை செய்திருக்கிறார் போலும்! இம்மட்டுடன் எழுந்து போய்விடு. குலத்தை நாசம் செய்யாதே. மனைவியைத் துடிக்க வைக்காதே' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள். அவனை மிகுந்த வெறுப்புடன் நோக்கினாள்.

நல்ல காலம் பிறந்தால் புத்தியும் ஒரு காரணமும் இல்லாமலேயே மாறி விடுவது உலகத்தில் சகஜமல்லவா ? இந்த மனிதனுக்கு நிர்மலாவின் நிர்மலமான வாக்கியம் தேவவாக்காயும் ஜீவாதாரமாயும் தோன்றியது. காலின் வலியுடன் துடித்தவாறே நிர்மலாவின் முன்பு கைகுவித்து வணங்கி, 'அம்மா! வேசிக் குலத்தில் பிறந்தும் விலையிலா மாணிக்கம்போல் இருக்கும் உன் புத்திமதியை நான் சிரசா வகிக்கிறேன். இதோ போய் விடுகிறேன். வேண்டாமென்று தடுத்த மனைவியைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு வந்ததற்கு அதே காலில் பகவான் சூடுபோட்டு விட்டார். புத்தி வந்தது. இதோ போகிறேன். உங்களைக் கடவுள் காப்பாராக!'

என்று கூறிவிட்டு, நடக்கமாட்டாது வெளியே நடந்துபோய் விட்டான்.

இந்தச் சம்பவத்தைக்கண்ட ஒயிலாம்பாளுக்கும் ஜீவரத்னத்திற்கும் வயிறு எரிகிறது. நிர்மலாவின் மீது வந்த ஆத்திரத்தில் தேள் கடியின் உபத்திரவமும் மறந்துபோய், "குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பே! இத்தனை தைரியம் உனக்கு எந்த வெறி பிடித்த நாயால் உண்டாயிற்றடி! குத்துக்கல்போல் நான் ஒருத்தி நிற்பது உன் கண்ணுக்கா தெரியவில்லை. கண்ணு அவிந்துபோச்சு?" என்று முடிப்பதற்குள் நிர்மலா நகைத்துக்கொண்டே "அப்பப்பா! வெறி பிடித்த நாய்களின் மத்தியிலேயே இருக்கும் எனக்கு வேறு ஒரு நாயும் வரவேண்டுமா?" என்று கூறிக்கொண்டே சடக்கென்று போய்விட்டாள். ஒயிலாம்பாளின் ஆத்திரத்திற்கு எல்லைதானுண்டா? துள்ளிக் குதித்தவாறு பின்னோடு ஓடினாள்.

## 4

பங்காரு, சுரேந்திரனைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்தான். அந்தச் சிறிய வீட்டு விடுதியில் பங்காருவின் மனைவி பயங்கரமான படுக்கையாய் கிடக்கிறாள். மார்வாடி வீதித் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தான். முதலில் இவர்களைப் பார்த்த உடனே மார்வாடி மிகவும் கோபத்துடன் 'எய்! நிம்பள்கி வூட்டுச் சேகவண்ணு நம்பள்கி நெனச்சிகிறான். உன்கி வூட்டே காவல் இருக்கிறத்துக்கு நாம்பள் வந்தான். 5 நிமிஸத்திலே வரான்னு சொல்லிப்போட்டு அரெமணி பண்ரான். இது இன்னா நாயம்னு கேக்கரான். ஊம். ஜெல்தி. பணம் வெக்கரான்' என்று கண்ணை உருட்டி விழித்துக்கொண்டே கடுமையாய்க் கேட்டான்.

பங்காரு :—'சேட்ஜீ! கோவிச்சுக்காதேங்கோ! போன எடத்துலே பத்து நிமிஷம் அதிகமாய் விட்டது. இதோ இவன் என்

ஆப்த நண்பன். இவனை அழைத்து வருவதற்கே போயிருந்தேன்' என்று விழித்தவாறு சுரேந்திரனை நோக்கினான்.

சுரேந்தி :—சேட்ஜீ! இவன் மகா யோக்யன். இவனுக்குக் கொடுத்த பணம் ஒருபோதும் மோசம் போகாது. இவன் எப்படியும் திருப்பிக் கொடுத்து விடுவான். மிகவும் நெருக்கடியான இந்தச் சமயத்தில் நீங்கள் சற்றுத் தயவு காட்டவேண்டும். இவன் மனைவியின் உயிர் ஊசலாடுகிறது....

இந்தச் சமயத்தில் இதற்குமேல் மார்வாரியால் தாங்க முடியவில்லை. கையையும் காலையும் உதைத்துக்கொண்டு கண்கள் சிவக்க எழுந்து நின்று, 'ஓகோ! இப்ப நம்பள்கி தெரியரான். சிபார்சு சொல்ரத்துக்குத்தானு நிம்பள் போனுன். அரே மர்யாதே கிற்யாதே இருக்கிறுன் இல்லே. நம்பள் கைவரிசை காட்ரான். நம்பள் கடன் வரிசே தீக்ரான். இந்தச் சிபார்சு கிபார்சு நம்பள்கு ஒதவரான் இல்லே. நம்ப வாரண்டு அனுப்ப்ரான்' என்று ஆத்திரத்துடன் உரத்துக் கூறியது உள்ளே படுத்திருக்கும் பங்காருவின் மனைவியின் காதில் கேட்டதும், அவள் மார்பில் இடிஇடிப்பதுபோல் துள்ளினாள். 'ஹா! கஷ்டகாலமே நாதா! நாதா!' என்று கூப்பிட மாட்டாது கூப்பிட்டாள்.

பங்காருவும் சுரேந்திரனும் உள்ளே ஓடினார்கள். அந்தம்மாள் திக்கித் திக்கிப் பேசியவாறு, 'ஐயோ! மார்வாடியா வந்துட்டான். நாதா! இந்தச் சமயம் அதுவும் சேர்ந்ததா! ஐயோ! என்ன செய்வேன்? தலை சுழலுகிறதே. என்னுயிர் போய்விடும் போலிருக்கிறதே. ஐயா! இந்தச் சமயம் எங்கள் குடும்பத்தை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். பாலைவனத்திலும் கொடிய கல் நெஞ்சம் படைத்த மார்வாடி, ஏழைகளின் வயிறெரிய ரத்தத்தை உறிஞ்சும் கொடிய மார்வாடி சும்மா விடமாட்டானே!' என்று கூறும்போது அதைக்கேட்டுவிட்ட மார்வாடி "ஆஹ்ஹா! என்ன சொல்றுன். ரத்தத்தெ உறிஞ்சும் மார்வாடியா? ஆமாம். சொள சொளன்னு பணத்தெ வாங்கின்னுனே அப்போ ஒன்னுஞ் சொல்ரான் இல்லே. தலெ கால் தெரியாமே அவஸ்தை பட்ரப்போ மார்வாடிதான் கடவுள் போலத் தோன்றுன். நம்பள் கிட்டே வர்ரான். அடகுசொத்தும்

இல்லாமே நம்பி பணந் தர்ரான். இப்ப கேக்கரான். கஷ்டப் பட்ராளே?" என்று அளந்தான்.

சுரேந்தி:—ஐயா! உயிருக்குமன்றுடும் நோயாளியிடமா உங்கள் கைவரிசையைக் காட்டுவது? எனக்காக நீங்கள் இன்னும் இரண்டு நாட்கள் தவணை கொடுங்கள். நான் எங்காவது கடன் வாங்கித் தருகிறேன். தயவு செய்யவேண்டும்.

மார் :—'ஒ! இனுமே அதெல்லாம் முடியாது. உனக்காவ இன்னிக்குச் சாயங்காலம் வரைக்கு பொறுக்கரான். இல்லாக்காட்டிப் போனா நம்ப வேலையே செய்யரான்' என்று முடுக்காயும் அலக்ஷியமாயும் கூறினான்.

சுரேந்திரனின் மனது பரிதவித்தது. அவனுடைய இளகிய மனத்தில் இந்தப் பெரும் புயல்காற்றுப்போன்ற விஷயம் தாங்காமையால் சில விநாடிகள் யோசித்தான். பிறகு எதையோ எண்ணி தைரியங் கொண்டவனாய் 'சரி! சேட்ஜீ! நீர் கடைக்குப் போம். இன்னும் அரைமணியில் பணம் வந்துவிடும்; என் வார்த்தையை நம்பும். இது தவறினால் அடுத்த நிமிஷம் நீர் ஜப்தி செய்யலாம்' என்று கூறினான்.

மார்வாடியும் அதற்கு ஒப்புக்கொண்டு சென்றான். சுரேந்திரன் பங்காருவுடன் தன் வீட்டிற்கு வந்தான். பங்காருவை ஓரிடத்தில் உட்கார வைத்துவிட்டுத் தன் தகப்பனார் அறைக்குச் சென்றான். அவர் வெளியில் போயிருந்ததால், அவர் பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் ஏராளமான நோட்டுக்களும் பணமும் செக்குமாக விருப்பதைக் கண்டான்.

தகப்பனார் முனிஸிபாலிடியில் வரி வசூலிக்கும் பில் கலெக்டர் உத்தியோகம் பார்ப்பவராதலால், அவர் வசூல் செய்த பணங்கள் முனிஸிபாலிடியில் கட்டுவதற்காக வைத்திருந்தது. அதைப் பார்த்த உடனே "நாம் இப்பணத்தைத் திருடும் திருடனாகவன்றோ ஆகிறோம். இது மகா கொடிய செய்கை யல்லவா? அப்பாவுக்குத் தெரிந்தால், கோபிப்பாரே! சீச்சீ! திருட்டுத் தொழிலா செய்வது?" என்று எண்ணிக் கையை இழுத்துக் கொண்டான்.



183-23

அடுத்த நிமிடம் தன் நண்பனின் பரிதாப முகமும், அவன் மனைவியின் கோரமான படுக்கையும், அவளுடைய உயிருக்கு மார் வாடியே எமனுக நிற்பதும் அவள் இறந்தால் பங்காருவும் இறப் பது நிச்சயம் என்பதுமான ஓர் உணர்ச்சி தோன்றியதால், 'சே! ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும் பெரிய காரியத்தைச் செய்வதற் காக இம்மாதிரி செய்வது குற்றமே இல்லை. திருடியாவது கொடுத்து அவ்வுயிர்களைக் காப்பாற்றினால் அந்தப் புண்ணியத்தினால் இந்தப் பாபத்தையும் சகிக்கலாம். இதைத் திருடினால் திருப்பிக் கொடுத்து ஈடு செய்ய முயற்சிக்கலாம். மானமும், பிராணனும் போய்விட்டால், பிறகு எத்தனை தவம் செய்தாலும் திரும்பப் பார்க்க முடியுமா? முடியாது. முடியாது. கொலை செய்த பாபத்தை நான் அடைவதைவிடத் திருட்டுப் பாவத்தை ஏற்பது பிரமாதமில்லை.'

என்றெல்லாம் தானே யோசித்து ஓர் முடிவு கட்டிக்கொண்டு உடனே தயங்காமல் 500 ரூபாய் பணத்தை எண்ணி எடுத்துக் கொண்டு, கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு வெளியே வந் தான். ஆவலே வடிவாய் உட்கார்ந்திருந்த பங்காருவிடம் ரூபாயை ரகசியமாகக் கொடுத்துவிட்டு, 'நண்பா! உன்னுடைய ஆபத்து நீங்குவதற்காக நான் பெரிய ஆபத்தான வேலையைச் செய்து விட்டேன். எங்களை நீ சந்தியில் இழுக்காமல் உடனே அந்த நிலத்தை விற்றுப் பணத்தைச் சிக்கிரமாகத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்" என்று கூறி முடிப்பதற்குள்,

புதையல் கிடைக்கப் பெற்றவன்போல் பணத்தைப் பெற்றுக் கொண்ட பங்காரு சுரேந்திரனின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு, 'நண்பா! நீ இச்சமயம் எனக்குச் செய்த இப் பேருதவி யானது, வெறும் பணத்தைமட்டும் கொடுத்ததாகாது. என்னருமைக் காதலியின் உயிரையே நீ எமனிடமிருந்து மீட்டுக் கொடுப்பதாகவே நினைக்கிறேன். இப்போதே நான் தந்தி கொடுத்து நிலத்தின் வேலையை முடித்து விடுகிறேன். நீ செய்த இந்த மகத்தான உப காரத்திற்குக் கடவுள் கருணை புரிந்து உன்னைக் காப்பாராக! நான் வருகிறேன்' என்று கூறிவிட்டு, ஓட்டமாக ஓடி மறைந்தான்.

சுரேந்திரனின் மனத்தில் நண்பனின் பரிதாபமாகிய பெரும் பளுவு இறங்கியது. அவனுக்குத் தான் சமயத்தில் உதவி செய்த சந்தோஷம் பொங்கியது. ஆனால், தான் செய்துள்ள பெரிய குற்றம் ஒருபுறம் பெரும்பாறையைப்போல் நெஞ்சில் அழுத்தியது. இருவித உணர்ச்சியுடன் பதுமைபோலானான்.

## 5

மணி 12 அடித்து விட்டது. சூரியன் நல்ல உச்ச ஸ்தானத்தை யடைந்து அதி உக்ரகமாகக் காய்கிறான். வீதியில் ஜனங்கள் நடக்கமாட்டாது கால் தத்தளிக்கின்றது. தலையோ வெடித்துவிடும் போலிருக்கிறது. ஒரு சாண் வயிற்று வளர்ப்புக்காக கூலி வேலை செய்யும் ஆண்களும் இந்த வெய்யிலையே நிலவாக அனுபவித்துப் பிழைக்கும் விதியை உடையவர்கள் எனினும் வண்டியை இழுக்கமாட்டாமலும் சுமையைத் தூக்கி நடக்கமாட்டாமலும் தவிக்கின்றார்கள் பாவம்!

சுரேந்திரனின் தகப்பனாராகிய கண்ணப்பன் தனக்குள்ள சிறு தொகையின் வருமானத்தையே பெருந் தொகையாக எண்ணித் தன் மக்கள் மனைவியுடன் ஆனந்தமாக குடும்பம் நடத்தும் பெருந் தன்மையும் திருப்தியும் நிரம்பப் பெற்றவர். அவருடைய திருப்தியான எண்ணமும் மனோபாவமுமே அவருடைய இன்பத்திற்கு இருப்பிடமாக விருந்தது. இந்த ஆனந்தத்திற்கோர் அணிகலன் பூட்டியதுபோல் அவருடைய தர்மபத்தினியாகிய ராஜம்மாளின் பெருந்தன்மையான குணமும் கருணைநிறைந்த மனப்போக்கும்பர்த்தாவின் இன்ப வாழ்க்கையே தனது ஜீவிதமாக எண்ணி மகிழும் அரிய தன்மையும் அமைந்ததால், அவருடைய சந்தோஷம் நிலைத்ததாக விருந்தது.

வருவாய்க்குத் தக்க செலவுசெய்யும் புண்ணியவதியாக அமையாத மனைவிகளைப் படைத்து அவதிப்படும் குடும்பத்துப் புருடர்

களுக்குக் கண்ணப்பனின் குடும்பம் ஓர் உதாரணக் களஞ்சியமாக விருந்தது. கண்ணப்பன் வீடு வீடாக ஏறி வரிப்பணத்தை வசூல் செய்து களைத்துப்போய் அப்பாடா என்று அலுப்புடன் வீடு வந்து சேர்ந்தார்.

வழக்கம்போல் ராஜம்மாள் அவர் கொண்டு வந்த கட்டுகள், பணப்பை, புத்தகங்கள் முதலியனவற்றை வாங்கிப் பெட்டியில் வைத்துவிட்டு, புன்சிரிப்புத் ததும்பிய முகத்துடன் வந்து 'குளிர்ந்த ஜலம் சித்தமா யிருக்கிறது. ஏன் இன்று இத்தனை களைப்பு? வழியில் எங்காவது காப்பியாவது வாங்கி குடித்திருக்கலாகாதா? முகம் ஒரேயடியாக வாடி விட்டதே!' என்று கேட்டாள்.

கண்ண :—காப்பிக் குடிப்பதற்குப் பசியா மண்ணாங்கட்டியா? அதொன்றுமில்லை. இந்த வெய்யில்தான் தாங்க முடியவில்லை. வரிப் பணத்தைக் கொடுக்கவேண்டிய பாவிகள் போன உடனே கொடுத்து விட்டால் பாதகமில்லை. 'இன்று வா! நாளை வா' என்று இழுக்கடிக்கும் சங்கடந்தான் என்னால் தாங்க முடியவில்லை. படி ஏறி இறங்கியதனால் கால்தான் வலித்துவிட்டது. சரியாகவே பணம் வசூலாக வில்லை. மேலதிகாரிகளோ சரியாக வரியை வசூல் செய்து சீக்கிரம் பணத்தைக் கட்டவில்லை என்று புகார் செய்கிறார்கள்.

அந்தந்த வீடுகளில் சென்று பார்த்தாலோ அந்தக் குடும்பத்தவர்கள் படும் கஷ்டம் சகிக்க முடியவில்லை. அவர்களின் தொல்லைகளைச் சொல்லி, ஒரு குரல் அழுகிறார்கள். டாக்டர் பில்லையும், சிலர் மார்வாடியின் கடனையும், பின்னும் சிலர் இதரர்களின் கடனையும் காட்டி பரிதாபப்படும்போது அவர்களை நிர்ப்பந்திக்க மனம் வராது சில தினங்கள் தவணைக் கொடுக்கும்படித் தோன்றிவிடுகிறது. ஏழைகளும் நடுத்தரத்தினர்களுந்தான் ஒழுங்காக வரியைக் கொடுக்கவும் கையிலிருந்தால் இழுத்தடிக்காமலும், தங்கள் கஷ்டங்களைக் கூறித் தவணைக் கேட்பதுமாகச் செய்கிறார்கள்.

அதிகமான பணமுடையவர்கள் இருக்கிறார்கள் பாரு. அவர்களிடம் நாம் கடமையைச் செலுத்தப்போனதாக நினைக்காமல், யாசகத்திற்கும் கடன் கேட்கவும் வந்தவர்களைப்போல் எண்ணி விடுகிறார்கள்.

ராஜம் :—ஆமாம்! அதோடு வீட்டு வாசலில் நாய் ஒன்று தயாராயிருக்கு மல்லவா?

கண்ண :—ஐயோ! ராமா! அதைக் கேட்க வேண்டுமா? உள்ளே போவதற்கே பயமாயிருக்கும். மிஞ்சி சில இடங்களுக்கு உள்ளே போனாலோ "என் ஐயா! இந்தப் பிச்சைக் காசான வரிப் பணத்தை நாங்க கொடுக்காமல் மோசமா செய்து விழுங்கி விடுவோம். வெறுமே தொண தொணவென்று குடலை யறுக்கிறீர்களே! வேளை சமயம் இல்லை. அப்பறம் வாரும் ஐயா!" என்று வீதியில் கண்ட ஜந்துவைப்போல் வெள்ளென்று பிடுங்குகிறார்கள். வாய் ஜம்பத்திற்குப் பிச்சைக் காசு என்று சொல்கிறார்களேயன்றிக் கொடுத்தால்தானே!

இடைமறுத்து "ஏழைகளாயின் கொடுக்காவிட்டால் மிரட்டித் துன்புறுத்தத் தயங்குவதில்லை. பணக்காரர்களாயின் வாயைத்திறக்காமல் பயந்துகொண்டு ஒரு சலாமும் வைத்துவிட்டு வந்துவிட வேண்டி இருக்கிறது. அப்படித்தானே வழக்கம். இதுதானே உலக தர்ம நியாயம்" என்று குறும்பாகச் சிரித்துக்கொண்டே ராஜம் கேட்டாள்.

கண்ணபிரான் கட கடவென்று நகைத்துவிட்டான். "ராஜீ! வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கும் உனக்கு இந்த ஊர் சமாசாரங்கள் எப்படித் தெரியும்? பலே கெட்டிக்காரியாய்க் கேட்கிறாயே!" என்றார்.

ராஜம் :—லைப்ரரியில் புத்தகங்கள் வாங்கி எதற்காகப் படிப்பது? உலகானுபவமும் தர்மமும் நீதியும் மற்றும் சகலமான விஷயங்களையும் தெரிந்துகொள்வதற்காகத்தானே படிக்கிறோம். நவீனங்கள் வெளியிடுவதன் கருத்தும் இதுதானே. பல புத்தகங்களைப் படித்தே உலகவியலை அறிந்துகொண்டேன். வாழ்க்கையின் சித்திரங்கள் தானே நாவல்கள். நாவலென்கிற கண்ணாடியில் உலகத்தின் தத்துவமும் மனிதர்களின் ஜீவியத்தில் நிகழக்கூடிய இன்பதுன்பமாகிய சுழல் காற்றுந்தானே பிரதிபலிக்கும்.

கண்ண :—வாஸ்தவம். ராஜீ! நீ இத்தனை தெளிவாய் அறிந்திருப்பதுபற்றி மிக்க சந்தோஷம். சரி! ஒரு வார்த்தை எடுத்து

அது வேறொரு விஷயத்தில் முடிந்தது. மணியாயிற்று. சவுக்கம் கொண்டு வா! ஸ்நானத்திற்குப் போகிறேன்.—என்று கூறிக் கொண்டே கிளம்பினார்.

சுரேந்திரனுக்கோ தன் பிதாவைப் பார்த்த உடனே திக்கென்று தூக்கி வாரிப்போட்டு விட்டது. இத்தனை நேரம் அவர் தன் தாயாருடன் பேசிய வார்த்தைகள் காதில் விழுந்ததும் அவன் மனம் பின்னும் வேகமாக அடித்துக்கொள்ள வாரம்பித்தது. சரியானபடி வசூல் ஆகாததற்காக அதிகாரிகள் கோபிக்கிறார்கள் என்று தகப்பனார் சொல்லும்போது அவன் வயிற்றில் சித்திரவதை செய்து வேதனைப் படுத்துகிறது. "ஐயோ! வசூல் செய்துள்ள பணத்தையே நாம் இப்படிச் செய்து விட்டோமே. அதை யறிந்தால் பிதா என்ன நினைப்பாரோ! என்ன தோன்றுமோ! என்ன விபத்தில் அச்செய்கையின் பலன் முடியுமோ!" என்றெல்லாம் அவன் நினைக்கும்போது சுரேந்திரனின் தேகமே தீப்பிடித்து எரிவதுபோல் தவிப்பு உண்டாகிவிட்டது.

தான் செய்தது குற்றமா! குற்றமில்லையா! ஆபத்தில் காத்தது நன்மையா! திருடிவிட்டது குற்றமா! என்ற கேள்விகள் அவன் மனத்தில் சுழல் காற்றுபோல் சுழற்றிச் சுழற்றி அடிக்கவாரம்பித்து விட்டன. 'தந்தையிடம் உண்மையைக் கூறிவிடுவதா, அன்றிக் களவுபோய் விட்டதாக நினைக்கும்படிச் செய்து விடலாமா!........ சீச்சீ! திருடியது ஒரு குற்றம். அதை மறைத்து வேறொருவர் மீது பழி சுமத்துவது பெருங் குற்றமல்லவா! ஹா! ஈசா! எனக்கொரு முடிவைக் கொடு. என்னைக் காப்பாற்று' என்று வேண்டிக் கொண்டு கையைப் பின் கட்டு கட்டியவாறு உலாவுகிறான். மூளையே குழம்பிவிட்டதுபோலாய் விட்டது.

சொல்லவும் வெட்கம். சொல்லாவிடினும் துக்கம். இந்த நிலைமையில் தத்தளித்துக் கொண்டிருக்கையில், 'சுரேந்திரா! சுரேந்திரா! சாப்பிட வா' என்று வாஞ்சையுடன் தந்தையழைக்கும் வாத்ஸல்ய மொழி செவியில் பட்டதும் சுரேந்திரனின் தவிப்பு முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்துவிட்டது. இத்தகைய தந்தைக்குத் துரோகம் செய்துவிட்டதுபோன்ற ஒரு தோற்றம் திடீ

றென்று உண்டாகிவிட்டது. இவைகளை யடக்கிக்கொண்டு, 'அப்பா! இதோ வந்து விட்டேன்' என்று கூறியபடி இலையில் வந்து உட்கார்ந்தான்.

கண்ணபிரானுக்குத் தன்னிரு மக்களுடன் ஆனந்தகரமாகப் பேசிக்கொண்டே சாப்பிடும் மகிழ்ச்சியில் தான் இதுகாறும் வெயிலில் சுற்றிய களைப்பும் மறந்துபோய் விடுவது வழக்கம். இலையில் உட்கார்ந்த சுரேந்திரன் வழக்கம்போல் கலகலப்பாகப் பேசாமலும் சரியாகச் சாப்பிடவும் இல்லாமல் இருக்கும் மாறுதலைக் கண்ட கண்ணப்பன், 'என்டாப்பா! சாப்பிடாது கிளறிக் கொண்டிருக்கிருயே! உடம்பு சரியில்லையா! முகம் என் ஒரு மாதிரியாக விருக்கிறது?' என்று அதிக அன்போடு கேட்டார்.

அலமு :—இன்று காலை முதல் அண்ணு அப்படியேதான் இருக்கான். என்னோடுகூட சரியாகப் பேசல்லே. உடம்புதான் ஏதோ சரி இல்லைபோலிருக்கிறது. சொல்லாமே மறைக்கிருன்.

சுரேந் :—'அதெல்லாம் ஒன்றுமில்லேப்பா! வெய்யில் 110 டிகிரி இருக்கும்போல் காயறது பாருங்கள். அதனுல் மிகவும் சிரமமாக விருக்கிறது. எனக்கு உடம்புமில்லை ஒன்றுமில்லை' என்று வாயினல் சொல்லுகிருனேயன்றிக் கையில் எடுத்த சாதம் கையிலேயே இருக்கிறது. வாயில் போட முடியவில்லை. இலையிலுள்ள சாதம் முற்றும் பணமாயும் தான் திருடுவதுபோலும் அதிபயங்கரமான ஓர் தோற்றம் இலையில் தெரிவதைக் கண்டு நடுங்கி விட்டான். அவன் ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டு தயையுடன் செய்த செய்கையாயினும் அதைச் செய்த நேரத்தை விட இப்போது அவன் மனத்தைப் பலமாகத் தாக்கி வதைக்கின்றது.

ராஜம் :—இன்று இரண்டாம் வேளைக்கு டிப்பன் என்ன செய்வது? சாப்பிட்டுவிட்டுப் போகலாமல்லவா?

கண் :—ராஜீ! இன்று ஒன்றும் செய்யவேண்டாம். நான் இன்று ரெண்டு மணிக்கெல்லாம் போகவேணும். ஆபிஸில் ஒரு பெரிய கலாட்டாவாக விருக்கிறது. குதிரைப் பந்தய பைத்தியக்

காரசன் ஒருவன் வேலை பார்க்கிறான். அவன் போதாக் காலத்தின் கொடுமையால் எப்படியோ ஆபீஸ் பணத்தைக் கையாடிவிட்டான். அந்த ரகசியம் வெளியாகி, அவனைக் கைது செய்து விட்டார்கள். அவன் குடும்பத்தின் கதறல் சகிக்க முடியவில்லை —

என்று கூறிக்கொண்டே வருவதைக் கேட்டுச் சகிக்க மாட்டாத சுரேந்திரனின் தலை சுழன்றது. ஆகாயமும் பூமியும் அயோமயமாகச் சுற்றுவதுபோல் சங்கடம் உண்டாகி விட்டதால், அவனுக்கு வயிற்றைப் புரட்டுகிறது. சாப்பாடு வேண்டாமென்று கூறிக்கொண்டே இலையை விட்டு எழுந்து விட்டான். மகனுக்கு என்ன உடம்போ என்னவோ என்ற கவலை தாய் தந்தையரைப் பிடித்துக்கொண்டது. கடவுள் எந்த வழி விடப்போகிறாரோ! அது அவருக்குத்தான் வெளிச்சம்.

## 6

'ஏண்டீ! நிர்மலா! ஒன்னழகென்ன! ஒன்னதிர்ஷ்டமென்ன? எல்லாம் நேரா இருக்கையில், புத்தி மட்டும் இப்படி ஏன் நிர்மூலமாகிப் போகிறது. இதென்னடீ பத்திரிகை!' என்று வெடுக்கெனப் பத்திரிகையை நிர்மலாவின் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டாள். நிர்மலா ஒய்யாரமாய் சோபாவில் சாய்ந்தவாறு, ஏளனமாய்ச் சிரித்துக்கொண்டே, 'அம்மா! நீ பலே கெட்டிக்காரி. எப்படியோ என் புத்தி நிர்மூலமாவதைக் கண்டு பிடித்து விட்டாயே! ஏன் நிர்மூலமாகிறது தெரியுமா? இப்படி பாழாய்ப்போன மானங்கெட்ட தாசிப் பிழைப்பு—தாசியின் தொழில், என் தாசியின் குலமே—நிர்மூலமாய் இருந்த இடம் தெரியாது புல் முளைத்துப்போய் விடுவதற்காகத்தான் என் புத்தியும் முதலில் நிர்மூலமாகிவிட்டது. தெரிந்ததா! அந்தப் பத்திரிகையிலிருக்கும் தலையங்கத்தைப் பாரு' என்று கூறினாள்.

ஒயிலாம்பாள் ஆத்திரத்துடன் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தாள். அதில் கொட்டை எழுத்துக்களில்,

## "தாசித் தொழிலைத் தகர்த்திடவேண்டும்"

## ஸ்ரீ. நிர்மலாதேவி

என்ற தலையங்கத்தைப் பார்த்ததும் மிளகாய்த் தூளை அப்பி வெந்நீரை ஊற்றியதுபோல் ஒயிலாம்பாளின் தேகம் திகு திகு என்று பற்றி எரிகிறது. தத்திக்குதித்துத் தாண்டவமாடியபடியே 'ஆஹ்ஹா! இந்தத் துணிச்சலும் உனக்கு வந்து விட்டதாடீ! ஐயையோ! குடி முழுகிப்போகிறதே! உனக்கு வந்த கேடு காலமென்ன? பரம்பரை பரம்பரையாக இருந்து வரும் குல தர்மத்தையும் சம்பிரதாயத்தையும் தூஷிக்கவும் பழிக்கவும் நீ எங்கிருந்தடீ வந்து சேர்ந்தாய்? முன்னோர்கள் செய்கையைக் கண்டிக்க நீ என்ன மகா அவதாரம் எடுத்த தேவதையா! அடீ பாவி! பரம்பரையான குல தர்மத்தைப் பழிக்காதேடீ.'

என்று முடிப்பதற்குள், நிர்மலா சாந்தமாகப் பேசத்தொடங்கி, "அம்மா! பரம்பரை! பரம்பரை என்று இழுக்கிறாயே! ஒருவன் பெரிய தீவட்டிக் கொள்ளைக்காரனாக விருந்தால் அல்லது கொலை பாதகனாக விருந்தால் அவன் சந்ததி முற்றும் அவ்வழியே வந்து அது ஒரு ஜாதியாக ஆகிவிடவேண்டுமா! அந்த முன்னோர்களின் பெயரைக் கூறுவதற்குக் கூடவன்றோ அச் சந்ததியார் பயப்படுவார்கள், அவமானமடைவார்கள், வெட்கிச் சாவார்கள்.

அம்மா! அத்தகைய சந்ததியைவிடக் கேவலமானதும் பாபக்குழியலான உங்கள் சந்ததியைச் சொப்பனத்தில் நினைக்கவும் கூசுகின்றதே; மனம் வெறுக்கின்றதே. ஆதியில் புனிதமான மார்க்கத்தில் இந்தத் தேவரடியார்களின் கொள்கை ஆரம்பித்து நடந்து வந்ததும் பிறகு சீரழிந்து பாழாய்ப்போனதும் தற்போது எப்படி இருக்கிறது என்பதையும் அன்றொருநாள் *வைதேகி

* வேசித் தொழிலின் கேடுகளும், அந்தத் தொழிலை அநுஷ்டிப்பவர்களை மாற்றச் செய்யும் பலவித தந்திரங்களும் கதாநாயகி வைதேகிதனக்கு நேரும் பலவித துன்பங்களைச் சகித்துக்கொண்டு, தனது கற்பு ஒன்றைக் காப்பாற்றுவதிலேயே கருத்தாயிருப்பதும் விளங்க, வைதேகி என்னும் நாவலை வாங்கி வாசித்து, அனுபவித்துக் களியுங்கள். விலை ரூ. 2—8—0,

என்ற நாவலில் படித்துக் காட்டினேனே! அதையும் மறந்துவிட்டாயா? ஆதியில் ஆரம்பித்த கண்ணியத்துடன் இத்தொழில் நடக்குமாயின் நானும் இதோ இப்போதே கோவிலில் சுவாமிக்கு அடிமையாகி இருப்பேன்.

ஐயையோ! நினைக்கவும் பயங்கரமான அக்கிரமத்தையுடைய இப்பாழுந் தொழில் கெட்ட கேட்டிற்குப் பரம்பரையை என் இழுக்கிறாய்? நீ என்னதான் குட்டிக்கரணம் போட்டாலும் நான் உங்கள் தொழிலைச் செய்ய முன் வரவேமாட்டேன்; இது சத்தியம். இதற்கு மிஞ்சி வற்புறுத்தினால் தற்கொலை செய்து கொண்டு இப்பாப ஜென்மத்தை மாய்த்துக் கொள்வேன். வைதேகி சொல்லியதுபோல் நானும் சொல்லுகிறேன்; ஒழுங்கானவனும் உத்தம குணமுள்ளவனுமான எந்த வாலிபனோ, அன்றிக் கிழவனாயினும் சரி. நான் மணந்துகொண்டுதான் இக்குல ஊழலை வேரறுக்கப் போகிறேனேயன்றி, மற்றபடி எதுவும் செய்யமாட்டேன். வீணாக என்னை வற்புறுத்தாதே" என்று கண்டிப்பாயும் முடுக்காயும் கூறினாள்.

ஒயிலாம்பாள் மோவாய்க் கட்டையில் ஒரு கையும் இடுப்பில் ஒரு கையும் வைத்துக்கொண்டு நிற்கும் காட்சியானது இப்போது தான் ததிகிணதோம் பிடித்து ஆட்டம் ஆரம்பிக்கத் தயாராயிருப்பதுபோல் இருந்தது. நிர்மலா நிறுத்தியதும் 'ஊம். முடிந்து விட்டதா! இன்னும் இருக்கிறதா! நீயா எனக்குப் புத்திசொல்ல வரே! ஐயையோ! அடீ பாவி! குடிகெடுக்கும் பாழாப்போன புத்தகங்களை படிக்காதேடீ! உன் புத்தி கெட்டுப் போயிடும் என்று எத்தனைதரம் முட்டிக் கொண்டேன். கேட்காமல் படித்துவிட்டு வைதேகியாம், கர்மாந்திரமாம். உதாரணமா காட்டுகிறாய்?....

நிர்மலா:—அம்மா! வைதேகி மட்டுமல்ல. ராதாமணி என்கிற புத்தகத்தில் இந்த எழவெடுத்த வேசி குலத்தில் பிறந்தும் ஸ்ரீமதி அம்புஜம் என்ற மங்கையின் கண்ணியத்தையும் பெருமையையும் எத்தனை அழகாய்ச் சித்தரித்திருக்கிறது தெரியுமா? மைலா என்கிற சாக்கடைப் புழுவின் கதி எப்படியாயிற்று? மஞ்சுளா என்கிற விலையிலா மாணிக்கம் போன்ற பதிவிருதையின் சாபம்

அவளை-அவள் குடும்பத்தை-அதோகதியாக்கி விட்டது. அதையும் கூடப் படித்தேன்.

அம்மா! அம்மாதிரியான புத்தகங்களைப் படிப்பதால்தான் இத்தகைய குப்பையிலா நான் பிறந்தேன் என்ற ரகசியத்தை யறிய முடிந்தது. உங்களைப் போன்றவர்களுக்கு இம்மாதிரி புத்த கங்களோ பத்திரிகையோ எதற்கு? சிற்றின்ப சாஸ்திரம், கொக் கோக சாஸ்திரம், மதனகாம ரகஸ்யம் அய்யய்யய்ய....ஆபாஸமே. வாயினால் சொல்லச் சகிக்காத கண்றாவி புத்தகங்களெல்லாம் உனக்கு வயது இத்தனை ஆகியும் உன் பீரோவை அவை அல்லவோ அலங்கரிக்கின்றன. எனக்கு அத்தகைய விஷயங்கள் வேண்டாம். நீ போ! என்னைத் தொந்தரவு செய்யாதே.

ஒயிலா :—ஐயோ! அடீ பாவீ! நீ இந்தமாதிரி சத்ருவாய் பிறக்கப்போகிறாய் என்று அறியாமல் உன்னை உயிருடன் கண் டால் கோயிலுக்கே முத்திரை போடுவதாக வேண்டிக் கொண்டு விட்டேனே! தினம் கனவில் ஸ்வாமி வந்து மிரட்டுகிறாரே! நான் என்ன செய்வேன்? ஸ்வாமியிடம் அபசாரம் செய்த பாபமல்லவோ சூழும். ஐயோ........அடீ நிர்மலா! நிர்மலா! என்னை ஏதோ செய் கிறது. மயக்கம், மயக்கம் வரது. மாரடைக்கிறது. ஹா....என்று பெரியதோர் கூச்சலிட்டபடியே கீழே விழுந்து விட்டாள். கை கால்களெல்லாம் காக்காய் வலிப்புப்போல் விலு விலுவென்று உதைத்துக் கொள்கிறாள். வாய் கோணக் கோண இழுக்கிறது. கண் மூலை மூலையாய் சொருகி இழுக்கிறது. அடித்தொண்டையால் கத்துகிறாள்.

இந்தக் கோரத்தை என்றும் கண்டறியாத நிர்மலாவுக்குத் தன் குலத்தின் ஈனத்தினால் கூடா ஒழுக்கத்தினால், தன் தாயின் மீது கடுமையான வெறுப்பு கொண்டாளே யன்றி, அன்னை என்கிற அளப்பரிய பாசத்தை அவளால் களைந்தெறிய முடியுமா? அவ ளுடைய குடல் நடுங்கி விட்டது. அலையக் குலைய எழுந்து தாயின் தலையை மடியில் போட்டுக்கொண்டு, ‘அம்மா! அம்மா! என்னம்மா செய்கிறது? ஐயோ! ஜீவா! மணீ! மணீ! இங்கு வாருங்களேன். அம்மாவுக்கு வலிப்பு வந்து விட்டதே! ஐயோ! பயமாயிருக் கிறதே!’ என்று பெரிதாகக் கத்தினாள்,

அடுத்த நிமிடமே மணியும் ஜீவாவும் அலறி யடித்துக்கொண்டு ஓடிவந்து, 'ஐயையோ! என்ன வந்துவிட்டது. அத்தே! அத்தே!' என்று கத்துகிறுர்கள். மணி, ஒயிலாம்பாளின் கையைக் காலே அமுக்கிப் பார்த்தும் முடியாததால், ஒரு வேளே காக்காய் வலியோ என்று பெரிய இரும்புக் கம்பியை அவள் கையில் வைத்தான்.

ஒயிலாம்பாள் கம்பியைப் பிடிக்காமல் விலக்கிவிட்டு, 'அடேய் காக்காய் வலிப்பு என்ரு பார்க்கிருய்? இல்லெடா! சாமிடா! சன்னதம் வந்திருக்கேன்டா! கற்பூரம் கொளுத்தி வைடா! இந்த ஒயிலாம்பா சொன்னபடி பெண்ணே முத்திரை போட்டு எனக்கு அர்ப்பணம் செய்யாமல் ஏமாத்திவிட்டாடா! அவளுடைய அபராதத்திற்காக இதோ அவளேயே கொண்டு போக வந்திருக்கேன்டா! ஹா! ஹீ....என்று கத்துகிறதைப் பார்த்து நிர்மலாவின் இதயத்தில் ஆயிரம் வாள்கொண்டு அறுப்பது போலாய்விட்டது.

ஜீவா கற்பூரத்தைக் கொளுத்தி வைத்துத் தவடையில் போட்டுக்கொண்டு 'ஸ்வாமி! இது ஒரு குத்தமா! இதை மன்னித்து என் அத்தையின் உயிரைப் பிச்சை கொடுக்கலாகாதா?' என்ருள். அதற்குச் சாமியார், 'ஆஹ்ஹா! பிச்சையா! பிச்சை. அவள் சொல்லிய பிரார்த்தனையைச் செலுத்துவதாகச் சொல்லட்டும். போனல் போரது என்று விட்டு விடுகிறேன்' என்ருர்.

நிர்மலாவின் நிலே தத்தளிக்கின்றது. தாயின் மரணத்தை அவள் மனம் விரும்பவில்லே. அந்தச் சமயம் அவள் மூளேயே குழம்பி விட்டது போலாய்விட்டதால், 'ஐயோ! ஸ்வாமி! எங் கம்மாளே ஒன்றும் செய்யாதீர்கள். உம்முடைய சன்னிதானத்திலேயே நான் முத்திரை போட்டுக்கொள்கிறேன். என் தாயார் மீது தவறே இல்லே. அவளே மன்னித்துவிடும். இது உண்மை' என்று தன்னே மீறிய உணர்ச்சியுடன் கூறினுள்.

பின்னும் சிலநிமிடங்கள்வரை ஒயிலாம்பாளின் வலிப்பு நிற்கவே இல்லே. பிறகு கொஞ்சங் கொஞ்சமாக அடங்கியது. ஆனுல், கண்ணேயே திறக்கவில்லே. ஒரே மயக்கமாய்க் கட்டைபோல் போட்ட கால் போட்டபடியே ஆய்விட்டாள். நிர்மலாவின் மனம் படும்பாட்டைக் கூறவேண்டுமா? 'அம்மா! அம்மா! உனக்குத்

தெளிந்ததா? இதோ பாரு' என்று அன்பாய் அழைத்தும் பதிலில்லை. மயக்கமாகவே இருந்ததால், கிளி பிடித்தபடியே பக்கத்தில் உட்கார்ந்து அவளது தெளிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

சற்று நேரங்கழித்து ஒயிலாம்பாள் உணர்வுடன் கண்களை மெல்லத் திறந்தாள். 'ஆ! பூதம்! என்னை விழுங்க வருகிறது. ஐயோ பயமாயிருக்கிறதே!' என்று மீண்டும் கண்ணை மூடிக் கொண்டு அலறினாள்.

நிர்மலா அவளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, 'அம்மா ஒன்றுமில்லையம்மா! பயப்படாதே! பூதமுமில்லை, பிசாசுமில்லை. இதோ பாரு' என்று கூறித் தேற்றினாள். மெல்ல கண்ணைத் திறந்து பார்த்துப் பிறகு 'நிர்மலா! தாகம், தாகம்' என்று கையைக் காட்டினாள். நிர்மலா பதைப்புடன் 'அம்மா! இதோ ஐஸ் போட்டு ஜலம் கொண்டு வருகிறேன்' என்று கூறிவிட்டுச் சடக்கென்று உள்ளே போனாள்.

அவள் சென்ற உடனே ஒயிலாம்பாள், ஜீவரத்தினம், மணி மூவரும் கலகலவென்று பெரிதாக நகைத்து அபார வெற்றியைக் கண்டு விட்டதுபோலான உணர்ச்சிக் கடலில் மிதந்தார்கள்.

மணி:—அத்தெ! நீ மெத்த சாகஸக்காரி! உண்மை காக்காய் வலிப்புக்காரர்கள்கூட இத்தனை உதைத்துக் கொள்ளமாட்டார்களே! பேஷ். ஜெயித்துவிட்டாய்.

ஒயிலா:—மணி! கோயிலிலும் நாள் பார்க்கச் சொல்லிவிட்டு, அந்த மைனருக்கும் தகவல் கொடுத்துச் சரிப்படுத்தி விடு. என்ன சரிதானே. அவள் வந்துவிடப் போகிறாள். நீங்கள் போங்கள்— என்றாள். அவர்கள் போய் விட்டார்கள். கள்ளங் கபடு அறியாத நிர்மலா ஜலத்தைக் கொணர்ந்து தாயின் வாயில் தானே மெல்ல வார்த்துக் குடிக்கச் செய்தாள்.

## 7

முரளீ கிருஷ்ணனின் கோவிலில் திரள் திரளாக ஜனங்கள் கூடி விட்டார்கள். நிர்மலாவுக்குச் செய்துள்ள அலங்காரத்தின் சோபிதத்தால் அவள் அசல் ரதியோ! கந்தர்வ மாதோ என்று பெண்களுங் கண்டு வியப் புற்றுர்கள். அதிரூப சுந்தரியாய், ஜகன்மோகனுகார சிங்கார வடிவழகியாய் கோயில் மண்டபத்தில் மணைமீது நிர்மலா உட்கார்ந் திருக்கிறுள். ஆயிரக் கணக்கான விட புருடர்கள் இவளை இந்தச் சம்பவத்தில் கண்ணுல் பார்த்தாவது பேரானந்தமடையும்பொருட் டுப் பல்லிளித்துக் கொண்டு நிற்கிறுர்கள்.

கோயில் அர்ச்சக பரிசாரக கோஷ்டியினரின் கண்ணேட்டத் தைக் கூறவே வேண்டாம். அன்று அங்கு ஸ்வாமி பூஜையைக்கூட மறந்துவிடும் படியான நிலைமை சிலருக்கு ஏற்பட்டு விட்ட தென்றுல் மிகையாகாது. வைத்த கண் வைத்தபடியே கல் சிலை களைப்போல் எத்தனை ஆத்மாக்கள் நின்று தவம் செய்கின்றன தெரியுமா?

சிறு வயதான தாசிப் பெண்களின் பொருமைக் கூத்தும் ஒருபுறம் நடக்காமலில்லை. 'நிர்மலாவுக்கென்ன, ரதிபோல விருக் கிறுள். பெரிய வேட்டைதான் அவளுக்கு; எத்தனை மைனர்கள் போட்டி போடுகிறுர்களாம் தெரியுமா? உம். நமக்கு என்ன உண்டு. இந்த வஞ்சனைக்கார தெய்வம் பாட்டு அழகு அறிவு எல்லா வற்றையும் அந்த ஒரே மனுஷியிடம் கொடுத்து மோசம் செய்ய வேண்டுமா!' என்று பெரு மூச்சு விடுகிறுர்கள்.

ஒயிலாம்பாளின் சந்தோஷத்திற்கோ எல்லையே இல்லை. இந்தப் பதவியின் மகுடாபிஷேகம் தனக்கே நடந்து விட்டதுபோல் எண்ணிக் குதிக்கிறுள். ஆனுல் இத்தனை பெயர்களின் உணர்ச்சி களையும் ஒவ்வொரு விதமாகக் கிளறிவிடும் பிரதான பிம்பமாகிய நிர்மலாவின் இதயத்தில் செய்யக்கூடிய சங்கடமும் போராட்டமும் கூறத் திறமே இல்லை. பொம்மைபோல் மணையில் உட்கார்ந்திருக் கிறுளே யன்றி, முகத்தில் நகைப்போ! தெம்போ சந்தோஷமோ மருந்துக்கும் இல்லை.

அவளுடைய பெருமூச்சுதான் அவ்வப்போது அந்த உயர்ந்த சரிகைச் சேலையையும் ஆபரணத்தையும் பீறிக் கொண்டு 'புஸ் புஸ்' என்ற சப்தத்துடன் வெளிவருகிறது. தான்கொண்ட வைராக்ய மான சபதத்திலிருந்து புரண்டு விடும்படி தலைவிதியமைந்து விட்டதே. இந்த முத்திரையைத் தடுக்கவேண்டும் என்று எண்ணிய விருதம் தனக்கே பலிக்காது போய்விட்ட வயிற்றெரிச்சல் அவளால் தாள முடியவில்லை.

தன் பொருட்டுத் தன் தாயின் உயிர் போய் விடுமாயின்,—அந்தப் பழி, அந்தப் பாவம், அந்த அபவாத நிந்தனை—அந்தக் கொலைபாதக பயங்கரச் சுழல், தன்னை அலசி அலசி உலகம் உள்ள அளவும் சுழற்றுமல்லவா! அதிலிருந்து தப்பி விடுதலையாகும் பொருட்டுத்தான் தன் பிரதிக்கினையையே மாற்றிக்கொண்டுபதுமை போலானாள்.

வழக்கம்போல் முத்திரை போடும் சடங்குகள் முடிந்தன. கடவுளின் பிரஸாதம் பெற்றுக்கொண்டு மேள தாளத்துடன் ஊர்வலமாக, எல்லோரும் வீடுவந்து சேர்ந்தார்கள். விருந்தும் பாட்டுக் கச்சேரிகளும் தடபுடலாக நடந்தேறின. நிர்மலாவைத் தவிர, மற்றெல்லோரும் ஆனந்த சாகரத்திலே அழுந்தி விட்டார்கள் என்றால் மிகையாகாது.

## 8

இரவு எட்டு மணி சுமார் இருக்கும். மணி ஒரு பெரிய பெட்டியுடன் ஒயிலாம்பாளின் எதிரில் பிரஸன்னமானான். 'அத்தே! அதிர்ஷ்டம் என்றால் இதன்னோ அதிருஷ்டம். அந்த மைனர் என்ன செய்தான் தெரியுமா? இரவு வரையில் கூட நிர்மலாவைக் காணாமலிருக்க மனம் வராமல் காலையில் சாதாரண மனிதன்போல் கோயிலில் வந்து அவள் அழகைப் பார்த்து அப்படியே பிரமித்துப்போய்ச் சொக்குபொடி போட்டவன்போல் சொக்கிப் போய்விட்டான்.

இந்த நகைகள் எல்லாம் நிர்மலாவுடையதா என்றுகேட்டான். நான் தக்க சமயத்தை இழப்பேனா? ஒரேயடியாய் இந்த உயர்ந்த புடவை முதல் சகலமும் இரவல் என்று ஒரு குண்டு விட்டேன். "சரி! இன்று நான் அவளைச் சந்திக்கும்போது ஒரு துரும்பு கூட இரவல் என்கிற பெயரே இருக்கக் கூடாது. அத்தனையும் புதிதாக வாங்கி விடுகிறேன்" என்று கூறினான். அதைப்போல் இவைகளை என்னிடமே பணத்தைக் கொடுத்து வாங்கி யனுப்பிவிட்டான். இப்போதே இவைகளை அவளுக்குப்போட்டு விடும்படி சொல்லி விட்டான். நிர்மலா எங்கே?' என்று ஆவலாய்க் கேட்டான்.

இதைக்கேட்ட ஓயிலாம்பாள், அளவுக்கு மீறிய அபாரமான சந்தோஷத்தினால் உடல் பூரித்துபோய்ப் பெட்டியைத் திறந்து அதிலுள்ள வைர செட்டு நகைகள் ஒவ்வொன்றாக எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்க்கிறாள். புடவைகளை எல்லாம் பிரித்துப் பிரித்துப் பார்க்கிறாள். சந்தோஷ நிர்த்தனம் செய்தவாறு அவைகளைக் கையில் வைத்துக் கொண்டே, 'நிர்மலா! நிர்மலா! ஓடி வாடி! ஓடி வா! உன்னைத் தேடிக்கொண்டு அதிர்ஷ்ட தேவதை வீடேறி வந்துவிட்டாள். கண்களைப் பறிக்கும் பூஷணங்களைப் பார்க்க வாடியம்மா! என் கண்ணே வா!' என்று கொஞ்சலாகக் கூப்பிட்டாள்.

ஜீவாவுக்கு இவைகளைப் பார்த்ததும் இயற்கையான பொறாமையே உண்டாகி விட்டது. அவளுடைய மனத்திற்குள் வேலை செய்யும் விஷத்தை யார் அறிய முடியும்? முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடித்து விட்டது. நிர்மலாவோ தன் அலங்காரச் சுமைகளை எல்லாம் அகற்றிவிட்டு நிம்மதியாக தன் சுய அலங்காரத்துடன் சோபாவில் சாய்ந்திருந்தாள். மனமோ சித்திரவதை செய்கிறது. தன் வாழ்நாளின் கதி எப்படி முடியுமோ தெரியவில்லையே! "எந்த முத்திரைச் சடங்கை வெறுத்தேனோ அது என் தலையிலேயே வந்து விட்டது. இதற்குமேல் நடக்கவேண்டியச் சடங்குகளுக்கு என் பிராணனை வாங்கப் போகிறாளே! நான் என்ன செய்வேன்? இதாவது ஒரு மாதிரியாக ஒழிந்தது. அந்தப் பயங்கரத்திற்கு எவ்விதம் தப்புவேன். ஈசா! ஏன் இப்படிப்பட்ட ஜாதியையும் தொழிலையும் மனமுவந்து கொண்டாடும்படியான

ஆபாஸ புத்தியை மக்களுக்குக் கொடுத்தாய்? ஐயோ! மாதர்கள் என்றால் எல்லோரும் ஒன்றல்லவா? மாதர்களுக்குள்ள கடமைகள், முறைமைகள், நீதிகள் யாவும் எல்லாப் பெண்டிருக்கும் ஒன்றல்லவா? இத்தனை பெரிய பாரத நாட்டில் பிறந்துள்ள பெண்களின் இனம்யாவும் ஒன்று என வகுக்காமல் வேசி, விலைமாது, மானத்தை இழந்து பிராணத்தைப் பெரிதாகக் கருதி வெட்கங்கெட்டு வாழும் கூட்டம் என்று ஒரு சாரார் தலையில் ஏன் எழுதினாய்? ஏன் அவர்களைப் படைத்தாய்?

ஆக்குவதும் அழிப்பதுமான தொழிலைக் கொண்ட நீ இந்த அநாகரிகக் கூட்டத்தின் அவகேட்டைப் போக்கி அவர்களும் ஒழுங்கான முறையில் வாழ்ந்து உய்யும்படிச் செய்யலாகாதா? அவர்களது ஊழலை அழிக்கலாகாதா! ஐயோ! என்னை இப்பாழுங் குலத்தில் பிறப்பித்ததுமல்லாமல் இத்தகைய வித்தியாசபுத்தியையுங் கொடுத்து அந்த உயர்ந்த எண்ணம் ஈடேறாமல் வதைப்பது உனக் கழகா! ஏ முரளீக்ருஷ்ணா! எனக்கு எந்த வழியைக் காட்டப் போகிறாய்?" என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஒயிலாம்பாள் நிர்மலாவென்று அழைத்த குரலும் அதை யொட்டிப் பேசியதும் காதில் விழுந்தது.

ஒயிலாம்பாளின் சந்தோஷம் எத்தனை தூரம் உச்சத்தில் இருக்கிறதோ அதற்கு நேர் விரோதமான கோடியில் நிர்மலாவின் மனம் இருக்கிறது. இவ் வார்த்தைகளைக் கேட்டதும் மனம் வெறுப்புற்று பதிலும் கொடுக்காமல் பேசாதிருந்தாள்.

பதில் வராததால் ஒயிலாம்பாள் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நிர்மலாவின் விடுதிக்கு வந்து "கண்ணா! நிர்மலா! பாத்தியா ஒன் அதிருஷ்டத்தை? அந்த மைனர் ஒன்னேடெ நேரில் ஒரு வார்த்தை சொல்வதற்கு முன்பே எத்தனை ஆசையாய், எத்தனை நம்பிக்கையாய் இவ்வளவு நகைகளும் கொடுத்தனுப்பி விட்டான் பாத்தியா! நிர்மலா! நான் சொல்றத்தே கேளு. அந்தக் காலத்துலெ எனக்குப் பொட்டு கட்டினபோது ஒரு காசுமாலையும், கெம்பு அட்டிகையும் ஒரு பிரபு கொடுத்தான் பாரு. சாதாரண காசி பட்டு புட்டா புடவைதான் ஒன்று வாங்கி வைத்தான். அதுவே

எங்களுக்கெல்லாம் எத்தனை பெருமை தெரியுமா! அதற்கும் வழி இல்லாதிருந்த பலர் என்னைப் பார்த்து எவ்வளவு பொறாமை கொண்டார்கள் தெரியுமா! என் வயிற்றில் பிறந்துள்ள உனக்கு லக்ஷ்மீ கடாக்ஷம் அப்படியே அடித்துவிட்டது. இந்தா! எழுந்து இவைகளைப் போட்டுக் கொண்டு இச் சேலையைக் கட்டிக் கொள்ளு. 9 மணிக்கெல்லாம் மைனர் வந்து விடுவார். அதற்குள் உனக்கு ஆலத்தி எடுக்கணும்" என்று சாந்தமாயும், சந்தோஷமாயும் கூறினாள்.

நிர்மலாவின் காதுகளா இவைகளைக்கேட்கும்? அந்த நகைகளைக் கண்ணெடுத்துப் பார்க்காமலும், பதிலும் பேசாமலும் உட்கார்ந்திருந்தாள். அவள் மனது அலைந்து தவிக்கின்றது. எதிரில் இருக்கும் கடியாரம் 8-35 ஆகி விட்டது என்பதைக் காட்டும் போது, நிர்மலாவின் இதயமும் படபடவென்று அடித்துக் கொண்டது. அவள் தாயாரை நோக்கி, "அம்மா! உன்னிஷ்டப் படியே பகவான் காரியத்தில் நான் தடங்கல் கூறுது முடித்து விட்டேன். இனிமெ இம்மாதிரி உபத்திரவங்களுக்கு என்னை ஆளாக்காதே. இந்த நகைகளும் சரி. இந்தத் துரும்பும் சரி. உன் மைனரும் சரி. அதோ வீதியிலுள்ள மண்ணும் சரி. தெரிந்ததா? இந்த மானங்கெட்ட பிழைப்பு நான் பிழைக்கமாட்டேன். இதற்குமேல் என்னைத் தொந்தரவு செய்யாதே!" என்று அழுத்தமான குரலில் கூறினாள்.

ஓயிலாம்பாளின் தலையில் இடி இடித்த மாதிரியாகி விட்டது. "ஐயோ! திரும்பியும் உன் பழைய துர்ப்புத்தி வந்து விட்டதா! இத்தனை பேர்கள் வந்திருக்கும்போது பெத்த தாயாகிய என்னை அவமானப்படுத்தவாடி பார்க்கிறாய்? உன் நன்மைக்காக நான் பாடுபடுகிறேனா? வீண் வாதம் செய்கிறேனா? மணி 9 அடிக்கப் போகிறது. அந்த மைனர் வரும் நேரமாகி விட்டது. காலா காலத்தில் பணத்தைக் கறந்துகொள்ளாவிட்டால், பிறகு சந்தி சிரிக்கும் தேவடியாள்கள்போல் நம் கதியும் ஆகிவிடுமடீ! சமயத்தைக் கைவிடாதேடீ! என் மானத்தை வாங்காதே. மைனர் வரும்போது இடக்குச் செய்து அவனை அவமானப் படுத்தினால்

அவன் மகா கொடிய மூர்க்கனும். அவன் ஆத்திரத்தால் என்னையோ உன்னையோ கொன்றாலும் கொன்று விடுவான். அவனிடம் பணத்தைக் கறந்துகொண்டு அவனை ஒதுக்கிவிடு. என் வார்த்தையைக் கேள். அதோ! மோட்டார் ஹாரன் கேட்கிறது. எழுந்திரடீ! என் கண்ணல்ல! என் செல்லமல்ல! நீ எத்தனை தர்ம சாஸ்திரங்களைப் படித்தாலும் பெத்த தாயின் வயிறு எரியச் செய்வது மிகவும் கொடிது. அது ஆகவே ஆகாது. ஆகையினால் எழுந்திரம்மா!" என்று கெஞ்சினாள்.

நிர்மலாவின் மனது குழம்பியது. பலவிதமான யோசனையில் தத்தளித்து மீள வழியின்றி ஊசலாடியது. அன்னையே முதல் தெய்வம் என்பதை அவளால் மறுக்க முடியவில்லை. சுழல் காற்றில் அலையும் பஞ்சுபோல் மனம் பதறியது. அவள் தனக்குள் ஏதோ ஒரு முடிவைச் செய்துகொண்டு நகைகளைக் கையிலெடுத்தாள். ஒயிலாம்பாளின் களிப்புக்குக் கேட்கவேண்டுமா?

## 9

படுக்கையறையின் வர்ணிப்பை ஓர் அளவிட்டுக் கூறுவதற்கே முடியாது. இந்திரலோகமோ! அன்றிச் சுவர்க்கந்தானோ என்றுஐயுறும்படியாய் எங்குபார்த்தாலும் நிலக் கண்ணாடிகளும், லஸ்தர் குலோப்புகளுடன் மின்சார விளக்குகளும், விசிறிகளும் புஷ்பமயமான தோரணவளைவுகளும், சாம்பிராணிவத்தி, அத்தர் முதலிய பரிமளங்களுடனும் ஜகஜ்ஜோதியாய் மின்னுகிற அறையில் ஹம்ஸதூளிகா மஞ்சமென்று வர்ணிக்கத்தக்க கட்டிலின்மீது வெகு கம்பீரமாயும் பலே ஷோக் பேர்வழியாயும் மைனர் உட்கார்ந்திருந்தான்.

பாதசரம் கணீர் கணீர் என்று ஒலிக்க அன்னத்தைப் பழிக்கும் அழகிய நடையுடன் கையில் வெத்திலைத் தட்டு ஏந்தி எழிலே ஓர் உருவெனத் திரண்டு உருண்டு பெண்ணுருவங்கொண்டு வரு

கிறதோ என்று ஐயுறும்படி நிர்மலா வந்தாள். அடடா! மைனரின் டிகிரியின் எல்லையைக் காணவே முடியாது போய்விட்டது. உடம்பை நெளிப்பதும், உடைகளைத் தட்டிச் சரிப்படுத்திக் கொள்வதும், நகைப்பதும் சொல்லத்திறமற்ற அசட்டுச் செய்கைகள் செய்துகொண்டு உட்கார்ந்தபடியே, "ஹி! ஹி ஹி! ஏன் இத்தனை தாமதம். நிர்மலா ஏன் தூர நிற்கிறாய்? இனி நீ வேறு நான் வேறா? நான் செய்த தவம் இன்றுதான் பலனைக் கொடுத்தது. இந்தா! இதையும் பெற்றுக்கொள். 5 ஆயிரம் ரூபாய்களுக்கு இதில் நோட்டாக விருக்கிறது" என்று சரமாரியாகக் கூறிக்கொண்டே நிர்மலா நிற்கும் பக்கம் வரத் தொடங்கினான்.

அழகு தெய்வமாக விளங்கும் அந்த நாரீமணி கையிலிருக்கும் தட்டுடன் மற்றொரு கையால் 'பொறு. பொறு.' என்ற பாவத்தால் ஜாடைகாட்டி கட்டிலில் உட்காரும்படிக்கு விரலைச் சுட்டிக் காட்டினாள். அந்த மைனர் அபாரமான மோகவெறி பிடித்தத் துடிப்பில் இவள் ஜாடை காட்டுவதன் அர்த்தம் தெரியாமல் மீண்டும் பல்லைப் பிளந்துகொண்டு, 'என்னை மட்டுமா போய் உட்காரச் சொல்கிறாய்? ஊஹூம். அது முடியாது! நீயும் வா! நீயும் வந்தால் இருவரும் சேர்ந்து உட்காரலாம். வா! வா!' என்றான்.

நிர்மலாவா இதற்கு மசிகிறவள். மீண்டும் அதேமாதிரி சைகை காட்டிப் பின்னர் தன் கையிலுள்ள தட்டை மேஜைமீது வைத்தாள். மைனரும் முன்போல் கட்டிலில் உட்கார்ந்தான். நிர்மலா அங்குள்ள வேறொரு மேஜைமீது துணியால் மூடிபோர்த்தி இருந்த போர்வையைக் களைந்தாள். அதற்குள் ஜகஜ்ஜோதியாய் வீற்றிருக்கும் பரா சக்தியின் படமும், காளிகா தேவியின் படமும் இருந்தன. ஆனால் அதை மைனர் பார்க்கவில்லை.

நிர்மலா புஷ்பங்களை அப்படத்திற்குச் சாற்றினாள். அர்ச்சித்தாள். பிறகு அந்த மலர் தட்டுடன் மெல்ல மைனர் முன்பு வந்தாள். அந்த மலரை அவன்மீது தூவினாள். இச்செய்கை மைனரின் ஏற்கெனவேயுள்ள மோகத்தைப் பின்னும் தூண்டிவிட்டது. தேன் குடித்த நரிபோல் பல்லை இளித்துக்கொண்டு எழுந்து, 'ஊஹூம்! இப்படி கொடு. நானல்லவோ உன்னை மலர் கொண்டு அர்ச்சித்து அம்பிகையைப்போல் பூஜை செய்ய வேண்டும். ஊஹூம்! நிறுத்து. நிறுத்து.' என்று தட்டைப் பிடுங்க வந்தான்.

நிர்மலா அவனைப் பரிதாபமாகப் பார்த்தவாறு "ஊம். தொடக் கூடாது' என்று சைகையே காட்டியபடி புஷ்பங்களைத் தூவிவிட்டு, மீண்டும் மேஜையருகில் வந்தாள். அங்குள்ள காளி படத்தை நோக்கி, 'அம்மணீ! ஜகன்மாதா! என் தாயாருக்கு ஏன் இத்தகைய மோசமான புத்தியைக் கொடுத்தாய். உலகத்தில் பிறந்த மக்கள் எல்லோருக்கும் சமமான கருணை நிறைந்த புத்தியைக் கொடுக்கக் கூடாதா! கிராதகமான கொலை செய்யும் புத்தியையா கொடுக்க வேண்டும்?

ஐயோ! இதுவா ஒரு பிரார்த்தனை. இம்மாதிரி செய்வதா தெய்வ பக்தி. இத்தகைய கொலை பலி கொடுக்கும் முறையில் உன்னைத் திருப்தி செய்வதா உனக்குச் சந்தோஷம்? ஐயோ! கொலை என்ற பதத்தை நினைக்கும்போதே என் இதயம் வெடித்துவிடும் போலிருக்கிறதே! பராசக்தீ! காளிகாதேவி! எப்படி நான் இக் கொலைக்கும் பலிக்கும் உடன்படுவேன். எவ்விதம் துணிந்து செய் வேன்!" என்று சிறிது வாய்விட்டுக் கூறியபடியே கைத் துப்பாக் கியை எடுத்துப் படத்திற்கு முன்னர் வைத்தாள்.

இதுவரையில் எல்லையில்லாத ஆனந்தத்துடன் உட்கார்ந் திருந்த மைனரின் காதில் இந்த வார்த்தைகளில் கொலை, பலி, என்ற பதங்கள் விழுந்த உடனே, ஒன்றுமே தோன்றாமல் சற்றுப் பிரமித்தான். அடுத்த விநாடியே "ஐயோ! எவ்விதந்தான் நான் துணிந்து கொலை செய்வேன்" என்று நிர்மலா கூறிய வார்த்தையும், 'இதுவும் ஒரு பிரார்த்தனையா?' என்ற வார்த்தையும் காதில் விழுந் ததும் மைனரை அறியாது ஒரு விதமான திகிலும் திடுக்கிடலும் உண்டாகியதால், இடத்தைவிட்டுப் பரபரப்பாக எழுந்தான்.

'நிர்மலா! நிர்மலா! கொலையா! பலியா! யாருக்குப் பலி. யாருக்கு யார் பலி. எனக்கு ஒன்றும் புரியவில்லையே. நிர்மலா! நிர்மலா'வென்று கூறிக்கொண்டே அருகில் வந்தான். அப்போது தான் அங்கு காளிகா தேவியின் படமும், அதன் முன்பு கைத் துப்பாக்கியும் இருப்பதைக் கண்டான். கண்டதுதான் தாமதம் தன் நிலை தெரியாமல் அலறிப்போய்த் தலைமீது பெரும் மலையே புரண்டு விட்டவன்போல் மிக்க கலவரமும், கிலியும், சங்கடமும் அடைந்து வைத்த விழியை—வைத்த காலை—வாங்கமாட்டாது அப்படியே தம்பித்து விட்டான்.

## 10

நிர்மலா படுக்கையறைக்குள் சென்ற உடனே ஒயிலாம் பாளுக்குச் சொர்க்கலோகப் பதவியின் செங்கோலைத் தூக்கிக் கையில் கொடுத்து விட்டதுபோன்ற பேரானந்தம் உண்டாகித் தன்னுடைய இளம்பருவ காலத்தை நினைத்துக்கொண்டு கூத்தாடவும் ஆரம்பித்து விட்டாள்.

ஜீவாவுக்கோ நிர்மலாவைப் பார்க்கப் பார்க்கப் பொறுமைத் தீயானது கொழுந்துவிட்டு எரிய வாரம்பித்து விட்டது. நிர்மலா உள்ளே சென்ற பிறகு பின்னும் அதிகமான எரிச்சல் கிளம்பி விட்டதால், இருக்கைகொள்ளாமல் தவித்தாள். அவள் அண்ணனை மணி இருக்கும் இடத்திற்கு வந்தாள். மணி ஆனந்தமாய் வெற்றிலை போட்டுக் கொண்டு விசிலடித்துப் பாடிக் கொண்டிருந்தான். ஆத்திரத்துடன் வரும் ஜீவாவைப் பார்த்த மணி, "என்ன விஷயம்; ஜீவா! ஏது இப்படி வந்தாய்? இன்னும் படுக்கைக்குப் போகவில்லையா?" என்றான்.

ஜீவா:—ஆமாம்! இதோடு பதினாயிரம்தரம் சொல்லியாகி விட்டது. நீயும் சாக்குப்போக்குத்தான் ஓயாது சொல்லிக் கொண்டு வருகிறாய். நிர்மலாவின் முத்திரையுடன் தான் நல்ல காலம் என்று கூறினாயே! இப்போது அதனால் என்ன லாபம் கண்டாய்? பிடித்தது என்னமோ பெரிய புலியைத்தான் பிடித்திருக்கிறாய். உனக்கென்ன கிடைத்தது.

மணி:—இதோ பாரு ஜீவா! வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடைந்தமாதிரி நீ இச் சமயத்தைக் கெடுத்து விடாதே. கறவைப் பசுவை, அதிலும் காராம் பசுவைப் பார்த்துப் பிடித்து விட்டேன். இன்றைக்கே சுமார் ஒரு வீடு கட்டக்கூடிய ரூபாய் கிடைத்து விட்டது.

ஜீவா:—அப்படியா! இன்னும் என்னென்ன கிடைத்தது?

மணி:—ஆத்திரப்படாதே! நகைகள் வாங்குவதற்கு செக் கொடுத்து விட்டான். அதில் சில நகைகள் நல்ல வைரமும் சில நகைகள் ரங்கூன் வைரமும் கலந்து வாங்கி அடுக்கி அத்தையின்

கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தூவி விட்டேன். அதில் சுமார் 5 ஆயிரம் வரையில் நான் அடித்துவிட்டேன். கறவை மாட்டைப் பிடித்த பிறகு சரியாகக் கறக்காமல் மத்தியில் விடுவார்களோ! அந்த மைனரே ஒரு வீடும் எனக்குக் கட்டித் தருவதாய்ச் சொல்லி இருக்கிருன்.

ஜீவா :—அப்படியாளுல் மெத்த சந்தோஷம். ஆனுல் ஒன்று; இனிமேல் மைனர் உன் மூலம் என் வருவான்? நேரில் நிர்மலாவின் கையில் கொடுத்துவிட மாட்டாளு? அப்படிச் செய்துவிட்டால் எவ்விதம் உனக்கு லாபம் வரும்?

மணி :—போடீ பைத்தியமே! நிர்மலாவின் கையில் கொடுக்கும்படியாகவா நான் விடுவேன்? இந்த மணியா அவ்வளவு அசடாகி விடுவான். எப்படி தூபம் போட்டிருக்கிறேன் தெரியுமா? நிர்மலா தாயாருக்குப் பயந்து அடங்கினவள். அவளுக்குத் தெரியாது மூச்சுகூட விடமாட்டாள். நிர்மலாவிடம் கொடுக்கும் ரூபாய்களெல்லாம் அவள் தாயிடம் போய்விடும். அது முற்றிலும் ஒயின் பாட்டலுக்குத்தான் அர்ப்பணமாகிவிடும். நிர்மலாவின் கைக்குக் காலணு உபயோகப்படாது. ஆதலால், அவளுக்கு எது வேண்டுமோ செய்ய நான் இருக்கிறேன். என்னிடம் கொடுத்து விட்டால், நான் பார்த்துக் கொள்வதாகச் சரியானபடி போதித்து விட்டேன். அவனும் அதற்குப் பிசகமாட்டான். என்ன சரிதானே! அது மாதிரி செய்தால் கூடிய விரைவில் நாம் லக்ஷாதிபதியாகி விடுவோம். பிறகு அத்தையிடம் கை கட்டிக் கிடக்க வேண்டாம். நாம் ராஜாதான்.

ஜீவா :—அண்ணு! நீ இம்மாதிரி செய்யும் காலம் வருமாவென்றுதான் ஏங்கி எதிர்பார்த்தேன். என் மனோரதம் ஈடேறி விட்டது. இன்னும் ஒன்று பாக்கி இருக்கிறதே; அதை மறந்து விட்டாயா?

மணி :—மறப்பதாவது. அந்தப் பயல் சுரேந்திரன் விஷயந் தானே! அவன்மீது உனக்கென்ன இத்தனை மோகம். அவனிடம் கடவுள் கொடுத்துள்ள அழகைத் தவிர வேறு சல்லிகாசு கூட கிடையாது. உனக்கு அவனுல் என்னலாபம். ஆள் அழகால் பணம் ஓசைப்படுமா!

ஜீவா :—அண்ணு! இது விஷயத்தில் நீ ஒன்றும் தடை சொல்லாதே! அவன் எப்படி இருந்தாலும் பாதகமில்லை. அவன்........

மணி :—சரி! நீ சொல்லப்போவது தெரியும். அவன் அப்படி லகுவில் கிடைத்துவிடும் குணமுடையவனல்ல: மகா சீலன். யோக்யன். எப்படி பிரயத்தனம் செய்வது என்றுதான் பார்க்கிறேன். சரி! நீ போய் படுத்துக்கொள். நான் யோசிக்கிறேன். போ—என்று அனுப்பிவிட்டான்.

ஜீவாவின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லாதுபோய்விட்டது. உடனே போய் விட்டாள். தன் படுக்கையில் படுத்தபடியே பலவிதமான எண்ணங்களால் மனக்கோட்டைக் கட்டிய வாறு புரண்டு கொண்டிருக்கிறாள். மணி, குடி கெடுக்கும் மகா புனிதமான யோசனையால், அதற்கு வேண்டிய வழிகளைத் தேட யோசிக்க வாரம்பித்தான்.

---

## வினாவும், விடையும்

நான் சென்ற மாதத்திய "ஜகன்மோகினி" மலரில் ஜீவியச்சுழல் அல்லது சீரிய ஒழுக்கம் என்னும் இப்புதிய கதையின் சாரத்தை எழுதி இருந்ததைக் கண்ட எனது சிநேகிதை யொருத்தி 'தாசித் தொழிலைப்பற்றி ஏற்கெனவே வைதேகி, ராதாமணி இரண்டிலும் எழுதினாயே! இன்னும் அதைப்பற்றி என்ன எழுதப்போகிறாய்?'.... என்று கேட்டாள்.

அதற்கு நான் தெரிவித்ததாவது :—கத்திரிக்காயை ஒருநாள் கறியும் குழம்பும் செய்துவிட்டால், அதோடு கத்தரிக்காயின் சமையல் பாகங்கள் முடிந்துவிட்டனவா! கத்தரிக்காய்க் கூட்டு, பச்சடி, துவையல், பஜ்ஜி, மசியல் எண்ணெய்க்காய், மோர்க்குழம்பு, வாங்கிபாத், கடலை மாவு பஜ்ஜி, என்று நான் மேலும் கூறுவதற்குள், அவள் 'அப்பப்பா! போதும் போதும். இப்போது விளங்கி விட்டது. இதோடு நிறுத்து!' என்றாள். என் சிநேகிதையைப்போல் யாரேனும் நம் நேயர்களில் நினைப் பார்களேயானால், அவர்களுக்கும் இது பதிலாகட்டும் என்ற யோசனையால் அச்சிநேகிதையின் அனுமதி பெற்று இதைப் பிரசுரிக்கிறேன். —வை. மு. கோ.

18023

நம் "மோகினி" பிரசுரங்களில்

நான்காவது டாக்கீ நாவல்

அரிய தேசீய சமூக
சித்திரம்

# * நளின சேகரன்

நடிகர்கள், ஸ்டூடியோ
முதலிய விவரங்களுக்கு
அடுத்த இதழைப் பாருங்கள்.

நீங்கள் இன்னும் இந்த அனுபவ பொக்கிஷத்தைப் படித்து இன்புறவில்லையெனின், இன்றே வாங்கிப் படியுங்கள். இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது. விலை அணா 8 தான்.